நவம்பர் 11 | 24 பக்கங்கள் | ரூபா 14.00

# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

வார மலர்




# உலகமே ஆர்ப்பாட்ட மயம்!

# துன்கிந்த கப்பல் மீதான அதிரடி வழிகளை முடக்கும் முதல் அடி

## படையினரின் கடல் வழி போக்குவரத்து மீது மீண்டும் புலிகள் கண்

தங்களுக்குச் சேதங்களை ஏற்படுத்திய போதெல்லாம் மிகக் குறுகிய காலத்துக்குள் அதற்குப் பதிலடி கொடுப்பதில் கடற்புலிகள் கைதேர்ந்தவர்கள் என்பது ஸ்ரீலங்கா கடற்படையினருக்கு நன்கு தெரிந்த விடயம்.

கடற்புலிகளின் இந்த சூட்டோடு சூடான பதிலடிகளின் — பழிவாங்கும் தாக்குதல்களின் — வரிசையில் கடைசியாக இடம்பெற்றிருப்பதுதான் எரிபொருள் தாங்கிக் கப்பல் மீதான தாக்குதல்.

திருகோணமலைத் துறைமுகத்தில் இருந்து காங்கேசன்துறை நோக்கி எரிபொருள்களை ஏற்றிக் கொண்டு புறப்பட்ட துன்கிந்த என்ற எரிபொருள் தாங்கிக் கப்பல் மீது பருத்தித்துறைக் கடற்பகுதியில் வைத்து புலிகள் கடந்த 30 ஆம் திகதி பெரும் தாக்குதலை நடத்தியிருக்கின்றனர்.

படையினருக்கான எரிபொருள் விநியோக சேவையில் ஈடுபட்டு வந்த இந்தக் கப்பல் நீண்ட காலமாகவே புலிகளின் இலக்காக இருந்து வந்துள்ளது. ஆயினும் அண்மைக்காலத்தில் தங்கள் மீது தாக்குதல் தொடுத்து உயிர்ச் சேதங்களை விளைவித்த கடற்படையினருக்குப் பதிலடி கொடுக்கும் நோக்குடன் கடலில் வலைவிரித்துக் காத்திருந்த கடற்புலிகளின் கவனத்தில் இந்தக் கப்பல் சிக்கிவிட்டது.

நான்கு கடற்கரும்புலிகள் வெடி மருந்து நிரப்பப்பட்ட இரண்டு வேகப்படகுகளில் இரு அணிகளாகச் சென்று கப்பல் மீது மோதி கப்பலுக்குப் பலத்த சேதத்தை ஏற்படுத்தினர்.

பருத்தித்துறைக் கடலில் வைத்து திடீரெனக் கப்பலைச் சூழ்ந்து கொண்ட புலிகளின் படகு அணிகள் முதலில் கப்பல் மீதும் அதற்குப் பாதுகாப்பு வழங்கி வந்த கடற்படையின் மூன்று அதிவேகப் படகுகள் மீதும் தாக்குதல் தொடுத்தன.

அச்சமயம் வெடிகுண்டுகள் நிரப்பிய படகில் வந்த கடற்கரும் புலிகளான கப்டன் கனி அன்பன் (மயில் வாகனம் ஸ்ரீகாந்த்), மேஜர் கடலரசன் (தம்பிப்பிள்ளை நமசிவாயம்) ஆகிய இருவரும் முதலில் எரிபொருள் கப்பலின் இயந்திரப் பக்கமாக மோதிப் பெரும் சேதத்தை ஏற்படுத்தி வீரச்சாவடைந்தனர்.


இந்தத் தாக்குதலால் கப்பல் நிலைகுலைந்தது. கப்பலின் இயந்திர அறைப் பகுதியில் பெரும் தீ பரவியது. சுமார் 15 நிமிடங்கள் கழித்து வெடிகுண்டுகள் நிறைந்த அடுத்த படகில் சென்ற பெண் போராளிகளான கப்டன் அன்புமலர் அல்லது கேசவி (பொன்ராசா அன்பழகி), மேஜர் கஸ்தூரி (தங்கராஜா சுபாசினி) ஆகிய இரு கடற்கரும்புலிகளும் தமது படகை கப்பலின் மறுமுனையில் மோதியபோது பெரும் வெடிச்சத்தத்துடன் கப்பலைக் கரும்புகை சூழ்ந்து கொண்டது.

இந்த இரு பெண் கடற்கரும் புலிகளும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

கப்பல் தாக்கப்படுவதாக அவசர தொலைத் தொடர்புச் செய்திகள் காங்கேசன்துறைக்கும், திருகோணமலை கிழக்குக் கடற்படைத் தளத்துக்கும் விரைந்து அனுப்பப்பட்டன. அங்கிருந்து மேலதிக கடற்படை அணிகள் பருத்தித்துறைக் கடற் பகுதிக்கு விரைந்தன. பலாலி படைத்தளத்தில் அச்சமயம் தரித்து நின்ற ஹெலிக்கொப்டர் ஒன்று கடற்பரப்பில் கண்காணிப்பை மேற்கொள்ளுமாறு அவசர உத்தரவு விடுக்கப்பட்டதும் அங்கிருந்து கிளம்பிச் சென்றது. புலிகள் கடலில் இருந்து விமான எதிர்ப்பு ஆயுதங்களைப் பயன்படுத்தக்கூடும் என்று அந்த ஹெலியின் விமானி எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தார்.

கப்பலில் பெருமளவான எரிபொருள் இருந்ததால் கப்பலில் தீயினால் ஏற்படக்கூடிய பாரதூரமான விளைவு குறித்து அஞ்சிய கடற்படை அதிகாரிகள் காங்கேசன் துறைமுகத்தில் இயங்கும் சிறிய தீ அணைப்புப் பிரிவை உஷார்ப்படுத்தினர். தாக்கப்பட்ட கப்பலில் இருந்த தீ அணைப்பு வசதிகள் பெரும் தீயை அணைக்கப் போதுமானவை அல்ல.


கப்பலின் இயந்திரப் பகுதியில் பரவிய தீயினால் ஏற்பட்ட கரும்புகை மண்டலம் கப்பலைச் சூழவுள்ள கடற்பரப்பில் புலிகளின் படகுகளையும் கடற்படைப் படகுகளையும் வேறுபடுத்தி இனங்காண முடியாத நிலையை ஏற்படுத்தியது. கப்பல் தாக்கப்பட்ட சமயம் கப்பலில் பாதுகாப்புக்குப் பொறுப்பாக ஓர் அதிகாரி மட்டுமே இருந்தார். மற்றும் ஒரு சில பணியாளர்களைத் தவிர திருமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையே விடுமுறையில் சென்று திரும்பும் சில படையினர் மட்டுமே கப்பலில் இருந்தனர். இதனால் புலிகளின் படகுகள் மீது கப்பலில் இருந்தவாறு பெரும் எடுப்பில் எதிர்த் தாக்குதலை நடத்த வாய்ப்பின்றிப் போனது.



புலிகளின் தாக்குதலுக்குள்ளான துன்கிந்த தீப்பிடித்து எரிகிறது

அடுத்தடுத்து இரு பெரும் வெடியோசைகளைத் தொடர்ந்து கடலில் மிகத் தொலைவில் அடிவானில் கரும்புகை எழுந்ததை வடமராட்சிக் கரையோரப் பகுதிகளில் இருந்து பார்க்கக் கூடியவாறு இருந்தது. பருத்தித்துறைமுனை மற்றும் கற்கோவளம் பகுதிகளில் கரையில் நின்றவாறு பலர் கப்பலைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

கப்பலில் பெரும் தீ மூண்டு சுவாலைவிட்டு எரியத் தொடங்கியதும் அப்பகுதியில் காணப்பட்ட கடற்புலிகளின் படகுகள் அங்கிருந்து அகன்றன. பின்னர் கப்பலை நெருங்கிய கடற்படையினர் அதில் இருந்தவர்களை மீட்க முயன்றனர். கப்பல் முற்றாக அழிக்கப்பட்டதாக விடுதலைப்புலிகள் அன்று மாலையே அறிவித்தனர். இராணுவ வட்டாரங்களில் இருந்து முதலில் கிடைத்த செய்திகளும் அவ்வாறே உறுதி செய்தன. ஆனால் தாக்கப்பட்ட கப்பல் பெரும் சேதம் இன்றித் தப்பிவிட்டதாகவும், அதில் ஏற்றிவரப்பட்ட எரிபொருள்கள் பாதுகாப்பாக இருப்பதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் பின்னர் அறிவித்தன. கப்பல் காங்கேசன்துறை துறைமுகத்துக்கு கட்டி இழுத்து வரப்பட்டிருப்பதாகவும் மறுநாள் அறிவிக்கப்பட்டது.




குடாநாட்டு மக்களுக்கான எரிபொருள் வகைகளை ஏற்றிவந்த கப்பலே புலிகளின் தாக்குதலுக்கு இலக்கானதாக யாழ்ப்பாணத்தில் உள்ள பாதுகாப்பு படைகளின் பலாலி தலைமையகம் தெரிவித்திருக்கிறது.

இதே வேளை

இந்தக் கப்பல் படையினருக்கான எரிபொருள் களையே திருகோணமலையில் இருந்து ஏற்றிவந்ததாக இச்சம்பவத்தில் உயிரிழந்த படையினரின் மரணவிசாரணையில் சாட்சியமளித்த கப்பலின் பாதுகாப்புப் பிரிவுக்குப் பொறுப்பான அதிகாரியான ஹேரத் முதியான் சலகே மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் தெரிவித்திருந்தார்.

காங்கேசன்துறைக்கு கட்டி இழுத்துவரப்பட்ட கப்பலின் தாங்கிகளுக்குள் இருந்து எரிபொருள்களை வெளியே அகற்றும் பணி கடந்த வாரம் முழுவதும் நடைபெற்றதாகவும்—

கப்பல் பலத்த சேதமடைந்து கருகிய ராட்சத உருவம் போன்று காட்சியளிப்பதாகவும் சில வட்டாரங்கள் மூலம் அறியவந்தது.

தாங்கிகளில் இருந்து எரிபொருள்களை வெளியே எண்ணெய்க் குதங்களுக்கு 'பம்' செய்யும் கருவிகள் முற்றாகச் சேதமடைந்து போனதால் தாங்கிகளில் இருந்த எரிபொருள்கள் வேறு வழி முறைகள் மூலம் காங்கேசன்துறையில் உள்ள குதங்களுக்கு இறைக்கப்பட்டதாகவும் தெரிகிறது.

தாக்கப்பட்ட துன்கிந்த' கப்பலில் சுப்பர் டீசல், மண்ணெண்ணெய் மற்றும் ஒட்டோ டீசல் போன்றவை ஏற்றப்பட்டிருந்தன என்றும்—

இந்த எரிபொருள்கள் மூலம் யாழ்ப்பாண மக்களே கூடுதலாக நன்மையடைந்தார்கள் என்றும்—

யாழ். மக்களுக்கு மின்சாரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஜெனரேட்டர்களுக்கும் போக்குவரத்துச் சேவைகளில் ஈடுபடுத்தப்பட்டு வரும் வாகனங்களுக்குமே இந்த எரிபொருள்கள் கூடுதலாகப் பயன்படுத்தப்பட்டன எனவும்— பலாலி படைத்தலைமையகம் விடுத்த ஓர் அறிக்கை தெரிவித்தது.

''இந்தத் தாக்குதல் காரணமாக எதிர்வரும் நாட்களில் குடாநாட்டு மக்களுக்குத் தேவையான அளவு எரிபொருள்களை விநியோகிக்க முடியாமல் போகும் என்றும்— அதேவேளை ஜெனரேட்டரால் முறையாக மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியாமற்போகும் என்றும் அந்த அறிக்கையில் படைத்தரப்பினர் சுட்டிக்காட்டி இருந்தனர்.

ஆனாலும் இது வழமையாக விடுக்கப்படுகின்ற அறிக்கை போன்றே இருக்கிறது.

குடாநாட்டில் நிலைகொண்டுள்ள படையினருக்கான வழங்கல்கள் மக்களுக்கான அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிச் செல்லும் கப்பல்கள் மூலமும் மேற்கொள்ளப்பட்டு வருவது வழக்கமாகி விட்டது.

'துன்கிந்த' கப்பலில் எடுத்துவரப்பட்ட எரிபொருள் படையினருக்குரியதல்ல' பொதுமக்களுக்குரியதே என்று படைத்தரப்பு கூறினாலும் யாழ்ப்பாணத்தில் உள்ள பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் அதனை உறுதிசெய்யவில்லை. இது விடயத்தில் அங்குள்ள அதிகாரிகள் வாய்திறக்கவே அஞ்சுகின்றனர். ''தேவையானால் கொழும்பு தலைமையகத்துடன் தொடர்பு கொண்டு கேளுங்கள்'' என்று கூறி தாங்கள் தப்பிக் கொள்ளப் பார்க்கின்றனர்.

என்றாலும் கப்பல் தாக்கப்பட்ட செய்தி பரவிய கையோடு குடா நாட்டில் எரிபொருள் வகைகளை அதிகளவில் வாங்கி வைக்க பொது மக்கள் முண்டியடித்ததால் ஓரிரு நாட்கள் செயற்கையான ஒரு தட்டுப்பாட்டு நிலை அங்கு காணப்பட்டது. எனினும் பின்னர் எரிபொருள் விநியோகம் வழமைபோன்று நடப்பதாகத் தகவல்.

வடமராட்சி கடற்பகுதியில் மீன்பிடிப்பதற்கு விதிக்கப் பட்டிருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு சில தினங்களில் பருத்தித்துறைக் கடலில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதால்—

புலிகளின் இந்த நடவடிக்கைக்கு அது சாதகமாக அமைந்ததா என்று படை வட்டாரங்களில் ஐயம் எழுந்துள்ளது.

அத்துடன் கரையில் இருந்து புலிகளுக்கு உதவி எதுவும் கிடைத்ததா என்பது தொடர்பாகவும் படைத்தரப்பினர் விசாரணை நடத்தத் தொடங்கி உள்ளனர்.

வடமராட்சி கடற்கரைக் கிராமங்கள் பலவற்றில் கடந்த வாரம் படையினர் பெரும் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். எனினும் எவரும் கைது செய்யப்படவில்லை.

குடாநாட்டுப் படையினருக்கான பிரதான வழங்கல் மார்க்கமான கடல்வழிப் போக்குவரத்து மீது புலிகள் மீண்டும் கண்வைத்து விட்டனர் என்பதை பருத்தித்துறைச் சம்பவம் கோடி காட்டுவதாக இராணுவ ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

குடாநாட்டில் உள்ள படை நிலைகள் மீது பாரிய தாக்குதல்களைத் தொடுப்பதற்கு முன் அவர்களுக் கான விநியோக வழிகளை அடைத்துவிடும் ஆரம்ப நடவடிக்கையாகக்கூட இது இருக்கக்கூடும் என்றும் அவர்கள் சந்தேகிக்கின்றனர்.

— வலிகாமத்தான்

# கண்ணில் எண்ணெய் விட்டு காவல் இருக்கும் படையினர்

## தேர்தல் அறிவிப்போடு புலிகளின் தாக்குதல்கள் அதிகரிப்பு

பாரிய அரசியல் நெருக்கடியை எதிர் கொண்டுள்ள பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு பொதுத் தேர்தலைச் சந்திக்கப் போகிறது. அதற்கு ஆட்சிபீடம் ஏறக்கூடிய தகுதி இம்முறை இல்லை. ஆட்சி மாற்றத்தின் ஊடாக புலிகள் தமது கோரிக்கைகளை நிறைவேற்றுவர். அதற்காகத் தேர்தல் காலத்தில் களமுனைகளில் தமது யுத்த இயந்திரங்களை அடக்கி வாசிப்பர்.

இப்படியெல்லாம் ஊகங்கள் தெரிவித்த தென்னிலங்கை அவதானிகளுக்குப் பாரிய பதிலடி.

வடக்கிலும் சரி கிழக்கிலும் சரி புலிகள் நடத்திய தாக்குதல்கள், அவர்கள் பொதுத் தேர்தலில் எந்த



நம்பிக்கையையும் கொண்டிருக்கவில்லை என்பதைச் சுட்டிக் காட்டியிருக்கின்றன.

நாடாளுமன்றத்தின் ஊடாக தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்ற நம்பிக்கை புலிகளிடம் தற்போது இல்லை. அதனை ஏற்படுத்திய பெருமை தென்னிலங்கை இனவாத அரசியல்சக்திகளையே சேரும் என்பது வேறு.

தேர்தல் ஆரம்பமாகும் முன்னரே புலிகள் நடத்திய தாக்குதல்கள் இனி வரும் நாட்களில் இன்னும் தீவிரமாகும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

ஏனெனில், இன்றைய காலகட்டத்தில் ஆயுதவளம் என்பது புலிகளுக்கு, ஒரு பிரச்சினையாகவே இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

கடந்த இரண்டு மாதங்களில் புலிகளுக்கு நான்கு கப்பல்களில் ஆயுதங்கள் வந்துள்ளன. அவற்றில் மூன்று கப்பல் ஆயுதங்கள் முல்லைத்தீவுக் கடற்பரப்பின் ஊடாக வன்னிப் பிரதேசத்துள் உள்வாங்கப்பட்டிருக்கின்றன. இன்னுமொரு கப்பல் ஆயுதங்களை கிழக்குக் கடற்பரப்பின் ஊடாக புலிகள் தமது கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களுக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

தேர்தல் காலத்தைத் துரும்பாகக் கொண்டு தமது நடவடிக்கைகளை படையினர் இன்னும் தீவிரப்படுத்தியுள்ளனர்.

வடக்கு – கிழக்குக் கடற்பரப்புகளில் கடற்படையினர் வருண – கிரண நடவடிக்கை மூலம் ரோந்துப் பணியை தீவிரப்படுத்தியிருக்கின்றனர். நாளும் பொழுதும் புலிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்க கண்ணில் எண்ணெய் விட்டுக் காத்திருக்கின்றனர்.

இந்த உயர் பாதுகாப்பு வேலியை உடைப்பதற்கு புலிகள் சில கடற்சமர்களில் கடந்த வாரங்களில் ஈடுபட்டு கடற்படையினரின் கவனத்தைத் திசை திருப்பி வெற்றி கண்டுள்ளனர். இந்தச் சண்டைகளில் படையினருக்குக் கணிசமான இழப்பையும் ஏற்படுத்தியுள்ளனர்.

இந்த மாதிரியான நிலையில் தமது கடல் ஆதிக்கத்தை மேலும் வலுவூட்ட வேண்டிய கட்டாயம் படையினருக்கு ஏற்பட்டுள்ளது.

ஆனால், கொழும்பு மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் இராணுவம் பாதுகாப்பைத் தீவிரப்படுத்த வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

நாரஹேன்பிட்டி தற்கொலைக் குண்டுத் தாக்குதல் சகல அரசியல் வாதிகள் வயிற்றிலும் புளிகரைத்திருக்கிறது.

தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் இன்னும் இடம் பெறப் போகின்றன. அவை அரசியல் வாதிகளை இராணுவ உயர்அதிகாரிகளை இலக்கு வைத்துத்தான் என்று புலனாய்வுத் தகவல்கள் எச்சரிக்கை வேறு விடுத்திருக்கின்றன.

இந்த நிலையில் தலை நகரில் பொலிஸ் பாதுகாப்பு மட்டும் போதாது என்று பாதுகாப்பு அமைச்சு முதலில் தெரிவித்தது.

பாதுகாப்பு அமைச்சின் தீர்மானம் பொலிஸ் கூட்டமைப்பி[illegible] பாரிய அதிருப்தியை உண்டு பண்ண[illegible]ளது.

பாதுகாப்பு அமைச்சின் தலைமையகத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற உயர்மட்ட மாநாட்டில் முப்படை அதிகாரிகள் உட்பட சிரேஷ்ட – இராணுவ அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

கொழும்பு நகரின் பாதுகாப்பை பூரணமாக இராணுவத்திடம் ஒப்படைப்பது குறித்து அன்றைய கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. இது விடயத்தில் பொலிஸ் மா அதிபர் லக்கி கொடித்துவக்குவுக்கு இஷ்டமில்லை. அன்றைய கூட்டத்துக்கு அவர் சமுகமளிக்கவுமில்லை.

பாதுகாப்பு அமைச்சுக்கும் பொலிஸ் தலைமை பீடத்துக்கும் இடையில் சில இழுபறிகள் நடந்து ஓய்ந்துள்ளன என்று தகவல்கள் கசிந்துள்ளன.

எது எவ்வாறாயினும் வடக்கு – கிழக்குக் கடற்பரப்புகளிலும், கொழும்பு நகரிலும் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்தப்படவேண்டிய கட்டாய நிலை பாதுகாப்பு அமைச்சுக்கு ஏற்பட்டுள்ளது.

பொதுத் தேர்தலுக்கு முன்னர் இடம் பெறவுள்ள மாவீரர் வாரம் படைத்தரப்பைக் கள முனைகளில் உஷாராக்கியுள்ளது. கள முனைகளுக்கு அப்பால் ஊடுருவல் தாக்குதல்களைத் தடுத்தி நிறுத்தும் முயற்சிகளில் இராணுவம் ஈடுபட்டிருக்கிறது.

கொழும்பு பொலிஸ் நிலையங்களுக்கு அடுத்தடுத்து விடுக்கப்படும் அச்சுறுத்தல்கள் விசேட அதிரடிப் படையினரையும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் இறங்க வைத்திருக்கின்றன.

கடந்த சில வாரங்களாக கொழும்பில் நகர்ப் பகுதிப் பெருந்தெருக்களில் பொலிஸ் ரோந்துப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

நாட்டின் சகல பகுதிகளையும் உச்சப் பாதுகாப்பில் வைத்திருக்க வேண்டிய வங்குரோத்து நிலையில் பாதுகாப்பு அமைச்சு இருந்து வருகிறது.

நாட்டைப் பாதுகாப்பதா, அதன் நாயகர்களாக தேர்தலில் நிற்கும் அரசியல்வாதிகளைப் பாதுகாப்பதா என்று இராணுவமும், பொலிஸாரும் கடுமாறிப் போயுள்ளனர்.

— சேனாவரையன்

## தேர்தல் திருவிழாவும் தெருக்கூத்தன் பாடலும்



ஆரடி உது, ஆரவாரமாய் வாறது?
ஆண்டவனுக்காய் குவிய வேண்டிய கைகளால்
ஆ நிரைகளையும் கும்பிட்டபடி!
ஓடடி உள்ளுக்கு—
நீயும் தப்ப;
நாடும் தப்ப!

* * *

லோன் எடுத்து வந்தார் லோகலிங்கம்
இப்ப ஏன் இந்தக் கடன்?
— ஏசுகிறாள் அவர் மனைவி.
பொத்தடி வாயை! பொருள் விலை எல்லாம்
— இப்பத்தான்
பொதுவாய்க் குறையும்.
எலெக்ஷன் முடிஞ்சதும்
ஏத்துவார் திரும்ப!

* * *

மேடையேறி மைக் பிடித்தார்;
கூட்டம் பார்த்து மலைத்துப் போனார்;
கும்பிட்டுக் கைகாட்டினார்
— விசிலடித்தது கூட்டம்!
ஆரவாரமாய் ஆரம்பித்தார் 'பே (ஏ )ச்சை';
துப்பலோடு தூஷணமும்
தூவித் தெறித்தது அவர் வாயால்
அதற்கும்
— விசிலடித்தது கூட்டம்!!

— தீபன்


சிறுவர்களுக்கான ஆங்கிலம் பழகுவதற்கான CD (1-15Y)
C++ படிப்பதற்கான CD
Adobe படிப்பதற்கான CD
புதிதாக வந்த Software CDs
SAT பரீட்சை CD
100/=
ஆங்கில நல்ல தெரிவான AUDIO - 120/=
ஆங்கில VCD (2CD) - 120/=
ஹிந்தி VCD படங்கள் 160/=
Kuch Kuch Hothahe
மற்றும் ஏனைய ஹிந்தி புதிய படங்கள்
CD HOUSE
144/2, Spancer House Building,
1st Cross Street, Colombo - 11.
Tel: 385176 Fax: 386757



என்டெனா பொருத்துதல்




Get it Installed by professionals
TELECAVE (PVT) LTD.
PETTAH :445377, 439467 (TEL/FAX)
KOTAHENA :478742, 075-352656.(TEL/FAX)
E-mail :telecave@eureka.lk



சுடர் ஒளி
THE SUDAR OLI සුඩර් ඔළි
36/2 பிரெடறிக்கா வீதி, கொழும்பு–06. (இலங்கை)
36/2 FREDRICA ROAD, COLOMBO - 06. (SRI LANKA)
36/2 [illegible], කොළඹ-06. (ශ්‍රී ලංකා)
VIBRANT TAMIL DAILY & WEEKLY TEL/FAX: 074 - 513112 / 5 E-Mail: sudar@uthayan.com


### ELECTION ADVERTISEMENT RATES
### தேர்தல் விளம்பரக் கட்டண விவரம்

| அளவு | கலர் | கறுப்பு/வெள்ளை |
|---|---|---|
| UNSPECIFIED | | |
| FULL PAGE | 48,000.00 | 33,000.00 |
| HALF PAGE | 25,120.00 | 17,280.00 |
| QUARTER PAGE | 12,560.00 | 8,640.00 |
| BACK PAGE | | |
| 100% EXTRA | | |
| FULL PAGE | 75,288.00 | - |
| HALF PAGE | 42,400.00 | - |
| QUARTER PAGE | 21,200.00 | - |
| STRIP | | |
| 8X6 | 12,720.00 | - |
| PAGE SPECIFICATION | | |
| 50% EXTRA | | |
| FULL PAGE | 60,288.00 | 49,500.00 |
| HALF PAGE | 33,760.00 | 25,920.00 |
| QUARTER PAGE | 16,880.00 | 12,960.00 |
| COLUMN. C.M RATE | 157.00 | 108.00 |


RSL 80% ஐ
உங்களுடைய மின் கட்டணத்தில் சேமியுங்கள்!
5W-2U =25 W - 285/-
7W-2U =35 W - 295/-
9W-2U =45 W - 295/-
11W-2U=55 W - 305/-
15W-2U=75 W - 315/-
15W-3U=75 W - 390/-
20W-3U=100W - 430/-
26W-3U=130W - 460/-
55W-4U=275W - 1350/-
REIMOO SONS LTD.
88A, Main Street, Colombo 11.
Tel : 325060, 326643
Fax : 94-1-326643
541218
11, National Housing Scheme, Kirbathgoda,
26, Station Road, Panadura.



★Kid's English learning CD (1-15Y)
★C++ learning CD
★Adobe learning CD
★Latest Software Cds
★Sat Exam CD
100/=
★English Audio Best Collection 120/=
★English VCD (2CD) 120/=
★Hindi VCD Film 160/=
Kuch Kuch Hothahe
All latest Hindi VCD
CD House
144/2-2, [illegible] (Spencer House Building) [illegible]-11.
Tel: 385176 Fax :386757



அவசர திருத்தங்கள்




Guaranteed repair & service by trained technicians
TELECAVE (PVT) LTD.
PETTAH :445377, 439467 (TEL/FAX)
KOTAHENA :478742, 075-352656.(TEL/FAX)
E-mail :telecave@eureka.lk

சுடர் ஒளி

நவம்பர் 11, 2001

36/2, பிரெட்றிக்கா வீதி, கொழும்பு-06
டெலிபோன் - பாக்ஸ் : 074- 513112 - 5
E-mail: sudar@uthayan.com


## அரிசியில் தன்னிறைவு

''நமது நாட்டுக்குத் தேவையான அரிசி முழுவதையும் நமது விவசாயிகளே உற்பத்தி செய்கிறார்கள். நமது விவசாயிகள் பெருமைக்கு உரியவர்கள்''

இப்படி விவசாயத்திணைக்களப் பணிப்பாளர் நாயகம் டாக்டர் ஜெரி ஜெயவர்த்தனா பாராட்டியிருக்கிறார்.

விவசாயம் நாட்டில் மீண்டும் முதலிடம் பெறுவது பற்றியும் அவர் மகிழச்சி தெரிவித்திருக்கிறார். மலிவான பொருள்களை இறக்குமதி செய்து ஆடைகளை ஏற்றுமதி செய்யும் நிலையில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறதென்றும் டாக்டர் ஜெயவர்த்தனா எடுத்துக் காட்டியிருக்கிறார்.

நமது நாடு விவசாயநாடு. என்னதான் தொழில்துறையில் வளர்ச்சி பெற்றாலும் உணவில் நாம் தன்னிறைவு பெற்றால் எல்லாவற்றுக்கும் வெளிநாடுகளில் தங்கியிருக்கத்தேவையில்லை.

இன்னும் சில ஆண்டுகளில் உலகில் உணவுப் பஞ்சம் ஏற்படக்கூடுமென்று சிலர் எச்சரிக்கை செய்துள்ளனர். சமயத்தில் இங்கு அரிசியில் தன்னிறைவு காணப்பட்டிருப்பதாகக் கிடைக்கும் செய்தி அனைவருக்கும் மகிழ்ச்சியளிக்கும்.

அரிசியில் மட்டுமல்லாமல் மிளகாய், வெங்காயம், பயறுவகைகள், கிழங்குவகைகள் போன்ற உப உணவுப் பொருள்களிலும் நாம் தன்நிறைவு காணமுடியும்.

1970 ஆம் ஆண்டில் சிறிமா தலைமையிலான ஐக்கிய முன்னணி ஆட்சியில் டாக்டர் என்.எம்.பெரேரா நிதி அமைச்சராகப் பொறுப்பேற்றதும் உப உணவுப் பொருள் இறக்குமதிக்குத் தடை விதித்து உள்நாட்டு உற்பத்திக்கு ஊக்கமளித்தார்.

தரிசாகக்கிடந்த நிலங்கள் எல்லாம் பயிர் விளையும் பூமியாக மாறின; படித்துப் பட்டம் பெற்றும் வேலை கிடைக்கவில்லையே என்று வாடிக்கிடந்த இளைஞர்கள் மண்வெட்டியை எடுத்துக் கொண்டு காடுகளை கொத்திப்பயிர் வளர்த்தனர்.

படித்த இளைஞர் விவசாயப் பண்ணைகள் உருவாகின. மிளகாய், வெங்காயம், பயறு வகைகள், கிழங்கு வகைகள் யாவும் இங்கு உற்பத்தியாகின. அந்நியச் செலவாணி மீதமானது.

படித்த இளைஞர்களும் அரசாங்க உத்தியோகத்தை மறந்தனர். தோட்டச் செய்கையில் ஆர்வத்துடன் ஈடுபட்டனர். அவர்களும் பணம் ஈட்டினர்; சொந்தமாகத் தங்களுக்கு இல்லங்களையும் அமைந்தனர்.

யாருடைய தலைவிதியோ ஆட்சியில் மாற்றம் ஏற்பட்டது. இறக்குமதிக்கு மீண்டும் வழி திறந்தது. உள்ளூர் உற்பத்தியில் நாட்டம் குறைந்தது.

மீண்டும் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் மலிவு விலையில் இறக்குமதி செய்யப்பட்டன. உள்ளூர் உற்பத்திக்கு ஊக்கமளிப்பது நிறுத்தப்பட்டது.

போருக்கு ஊக்கமளிக்கப்பட்டது. உள்ளூர் உற்பத்தியிலீடுபட்ட படித்த இளைஞர்கள் தோட்டங்களை விட்டு வெளியேறி வெளிநாடுகளில் தஞ்சம் புகத்தொடங்கினர்.

பொருளாதாரத்தில் நாடு படுபாதாளத்ததை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் இந்நாளில் மீண்டும் உப உணவுச் செய்கைக்கு இளைஞர்களுக்கு ஊக்கமளித்தால் ஒரே வருடத்தில் இவற்றில் நாடு தன்னிறைவு பெறமுடியும்.

ஆட்சி அதிகாரப் போட்டியை நிறுத்தி நாட்டின் வளத்தைப்பெருக்குவதில் அரசியல் வாதிகள் கவனம் செலுத்தினால் நாட்டில் வளம்கொழிக்கும்.

பிரிவினை என்றும் பயங்கரவாதம் என்றும் கூச்சலிட்டு ஆட்சியைப் பிடிக்கவும் போரைத் தொடர்ந்து நடத்தி அதை தமது வியாபாரமாக்கவும்தான் இவர்களால் முடியும். மக்கள் நிம்மதியாக வாழ வழி பிறக்காது.

தமிழர்களின் நியாயமான கோரிக்கைகள் அங்கீகரிக்கப்பட வேண்டும். அவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதை நாம் ஏற்று அவர்களது பிரச்சினைக்குச் சரியான தீர்வு காணவேண்டுமென்று ஜனாதிபதி சந்திரிகா கூறியிருக்கிறார்.

இதை ஜனாதிபதி எப்பொழுதோ செய்திருந்தால் இப்பொழுது நிலைமை வேறாக இருக்கும். இன்னும் காலம் கடந்து விடவில்லை. மனம் வைத்தால் சாதித்துவிடலாம்.

தமிழ் இளைஞர்கள் மீண்டும் வயலில் இறங்க அது வாய்ப்பாக அமையும்.

# பிரிவினைப் பூச்சாண்டி காட்டி அரசியல் இலாபம் தேடும் கட்சிகள்

தேர்தல் வந்தால் நாட்டைப் பிரித்து தமிழர்களுக்குத் தாரைவார்க்கும் திட்டங்கள் பற்றிய ''இரகசியங்கள்'' அம்பலத்துக்கு வருவது இலங்கைக்குப் புதிய விடயமல்ல.

நாட்டைப் பிரிக்கப் போகிறார்கள் என்ற பிரசாரம் நாற்பதாண்டுகளுக்கு மேலாக தென்னிலங்கையில் கேட்டு வருகிறது. தேர்தல் காலங்களில் பிரசார மேடைகளில் ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்த இருபெரும் பிரதான கட்சிகளும் ஒன்றின் மேல் ஒன்று இவ்வாறான குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவது வழக்கம்.

ஓர் அரசியல் கட்சியின் தலைவியாக இருந்தாலும் இப்பொழுது திருமதி சந்திரிக்கா குமாரதுங்க இந்த நாட்டின் தலைவியாவார். இலங்கையின் முப்படைகளின் தளபதியும் அவர்தான்.

ஆனாலும் தனது கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் தனது கட்சிக்கு ஆதரவு தேடிப் பிரசாரம் செய்யும் போது நாட்டின் தலைவி என்பதை மறந்து அல்லது அதைஒதுக்கி வைத்து விட்டு சாதாரண அரசியல் வாதியாக ஒரு கட்சியின் தலைவியாகவே பேசுகிறார்.

கடந்த பொதுத் தேர்தலிலும் தமிழீழ விடுதலைப்புலிகள் பற்றியும் பயங்கரவாதம் பற்றியும் பேசிய சந்திரிகா விடுதலைப் புலிகளுக்கும் எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்குமுள்ள நெருங்கிய உறவு, இரகசிய உடன்படிக்கை பற்றியெல்லாம்பேசினார். கொழும்பு நகர மண்டபக் கூட்டத்தில் நடந்த குண்டு வெடிப்பு பற்றி ரணில் விக்கிரம சிங்காவுக்கு முன்னரே தெரிந்திருந்ததென்றும் இதை மறுக்க முடியுமா என்றும் சவால் விடுத்திருந்தார்.

தேர்தல் முடிவுகள் வெளிவந்த போது சந்திரிகா அம்மையாரின் பொதுஜன ஐக்கிய முன்னணி ஒரேயொரு ஆசனத்தைத்தான் அதிகமாகப் பெறமுடிந்தது.

### நாடாளுமன்றில் புலிகள்

தற்போது தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பு மூலம் தமிழீழ விடுதலைப் புலிகள் நாடாளுமன்றத்துக்குள் நுழையப் போகிறார்களென்று ஜனாதிபதி எச்சரித்திருக்கிறார். ஐக்கிய தேசியக் கட்சி இந்தத் தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சிப்பீடம் ஏறுமானால் பிரபாகரன் ஜனாதிபதியாவார் என்றும் சந்திரிக்கா கூறுகிறார். நாடு பிளவுபடுமென்றும் விடுதலைப்புலிகள் நாட்டைப் பிரித்தெடுத்து விடுவார்களென்றும் ஆளும் கட்சியினர் கூறிவருகின்றனர்.

நாட்டைப் பிரிப்பதென்ற பேச்சு இன்று நேற்று வந்ததல்ல. 1959 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் அப்போது பிரதமராக இருந்த சந்திரிகாவின் தந்தை எஸ். டபிள்யு. ஆர்.டி பண்டார நாயக்கா ஒரு பௌத்த பிக்குவினால் சுட்டுக் கொல்லப்பட்டார். காபந்து பிரதமராக வந்த டாக்டர் டபிள்யு தகநாயக்கா 1960 ஆம் ஆண்டில் நாடாளுமன்றத்தைக் கலைத்து புதிய நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தலை ஒரே நாளில் நடதுவதற்கு உத்தரவிட்டு நடத்தினார்.

1960 -- ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் நான்காவது நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தல் நடந்தது. டட்லி சேனநாயக்கா தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஆட்சி பீடத்துக்காகப் போட்டியிட்டன. பண்டாரநாயக்காவின் மரணத்தின் பின் சுதந்திரக் கட்சிக்கு சரியான தலைமை இருக்கவில்லை.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசியலுக்கு வந்து தலைமை தாங்க மறுத்து விட்டார். சி.பி.டி சில்வா, மைத்திரிபாலசேனநாயக்கா ஆகியோரின் கூட்டுத் தலைமையில் சுதந்திரக் கட்சி போட்டியிட்டது.

தேர்தல் முடிவுகள் வெளிவந்த போது இந்த இரண்டு கட்சிகளில் எந்தக் கட்சியும் தனித்து ஆட்சி அமைக்கக் கூடிய அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றிருக்கவில்லை. இத்தேர்தலில் மூன்றாவதாக அதிக ஆசனங்களைப் பெற்ற எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையிலான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆதரவைப் பெற்று ஆட்சி அமைப்பதற்கு இரண்டு கட்சிகளும் முனைந்தன. முதலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் சி.பி.டி சில்வா, மைத்திரிபாலா, சேனநாயக்கா ஆகியோர் தமிழரசுக் கட்சித் தலைவர்களுடன் பேச்சு நடத்தினார்.

1957 ஆம் ஆண்டு செல்வநாயத்துடன் பண்டாரநாயக்கா செய்து கொண்ட ஒப்பந்தத்தில் காணப்பட்டவற்றை அமுல் செய்யும்படி தமிழரசுக் கட்சியினர் ஆதரவளிப்பதற்கு நிபந்தனை விதித்தனர். இது சம்பந்தமாக நடந்த பேச்சுவார்த்தைகள் வெற்றியளிக்கவில்லை.

### நிபந்தனைகள்

ஐக்கிய தேசியக் கட்சி டட்லி சேனநாயகா தலைமையில் தமிழரசுக் கட்சியுடன் பேச்சு நடத்தி சில நிபந்தனைகளுக்கு ஒப்புக் கொண்டது. இதன்படி தமிழரசுக் கட்சியின் சில கோரிக்கைகளை சிம்மாசனப் பிரசங்கத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்றும். அந்தக் கோரிக்கைகளை விரைவில் நிறைவேற்ற வேண்டுமென்றும் செல்வநாயகம் கேட்டார். டட்லியும் ஒப்புக் கொண்டார்.

டட்லி தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியிலமர்ந்தது. அரசின் கொள்கைப் பிரகடனமான சிம்மாசனப் பிரசங்கம் நிகழ்த்தப்பட்டது. தமிழரசுக் கட்சி கேட்டபடி நிபந்தனைகள் சிம்மாசனப் பிரசங்கத்தில் இடம் பெறவில்லை. சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை கொண்டு வரப்பட்டு, நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டது. உரிய காலத்தில் தமிழரசுக் கட்சியின் நிபந்தனைகள் நிறைவேற்றப் படவில்லை, அதற்கான அறிகுறிகளும் தென்படவில்லை. நன்றி தெரிவிக்கும் பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது தமிழரசுக் கட்சியினர் எதிர்த்து வாக்களித்து அரசைத் தோற்கடித்தனர். டட்லி ஆட்சி கவிழ்ந்தது.

நாடாளுமன்றத்தைக் கலைத்து புதிய நாடாளுமன்றத்துக்கான தேர்தலை நடத்த டட்லி சிபார்சு செய்தார். நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. புதிய நாடாளுமன்றத்துக் கான தேர்தல் 1960 ஆம் ஆண்டு ஜூலை மாதம் நடந்தது.

மார்ச் மாதம் தேர்தல் முடிந்ததும் இரண்டு கட்சிகளுடனும் தமிழரசுக் கட்சியினர் ஆதரவளிப்பதற்கு பேரம் பேசிய போது விதித்த நிபந்தனைகள் இத் தேர்தல் பிரசாரத்தில் முக்கிய பொருளாகக் கிளப்பப்பட்டன.

தமிழரசுக் கட்சியினர் வடக்கு கிழக்கைப் பிரித்து எடுக்கப்போகிறார்கள் என்றும் இதற்கு டட்லியின் ஐக்கிய தேசியக் கட்சி உடன்பட்டுள்ளதென்னும் சுதந்திரக் கட்சி பிரசாரம் செய்தது. டட்லி நாட்டைப் பிரித்து செல்வநாயகம் கையில் கொடுப்பது போன்ற கருத்துப் படமும் சுவரொட்டிகளும் வெளியிடப்பட்டன.

டட்லி தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியும் எதிர்ப்பிரசாரமாக வடக்கு கிழக்கைப் பிரித்துசமஷ்டிக் கட்சியிடம் கொடுக்க சிறிமாவோ பண்டாரநாயக்கா ஒப்புக் கொண்டு உடன்படிக்கை செய்திருக்கிறாரென்று பிரசாரம் செய்தது.

தேர்தல் நெருங்கும் சமயத்தில் தமிழரசுத் தந்தை செல்வநாயகம் தமிழ் மக்களுக்கு விடுத்த வேண்டுகோளில் எந்தப் பெரும்பான்மைக் கட்சியும் தனித்து ஆட்சி அமைக்கக் கூடிய பெரும்பான்மையைப் பெறக் கூடியதாக தமிழ் மக்கள் வாக்களிக்கக் கூடாது என்று கேட்டிருந்தார்.

இது ஆங்கில, சிங்கள பத்திரிகைகளில் முக்கியத்துவம் கொடுத்து வெளிவந்தது. தேர்தல் முடிவுகள் வெளியான போது சிறிமாவோ தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பெரும்பான்மையுடன் தெரிவானது.

சமஷ்டி என்றால் பிரிவினை அல்லு என்று தமிழரசுக் கட்சியினர் மட்டுமல்ல பொதுவான அறிவாளிகளும் கட்டுரை, கருத்தரங்கு மூலம் விளக்கினர்.

செல்வநாயகம் இது பற்றி நடாளுமன்றத்திலும் விளக்கமளித்தார். பண்டாரநாயக்கா ஒகஸ்பேரார்டிலிருந்து திரும்பியதும் இலங்கைக்கு சமஷ்டி அமைப்புத்தான் பொருத்தமானது என்று கூறியதை பலரும் சுட்டிக் காட்டினர்.

ஆனாலும் சமஷ்டி என்றாலும் நாடு பிளவுபடும் என்றே பிரசாரம் செய்யப்பட்டது. இந்த இலட்சியத்தை அடைய தமிழரசுக் கட்சியினர் காந்திய வழியில் நடத்திய அகிம்சைப் போராட்டங்கள் அடக்கி ஒடுக்கப்பட்டன.

இதன்பின் 1976ஆம் ஆண்டில் இழந்த தமிழீழ அரசை மீண்டும் அமைப்போம் என்று நாடாளுமன்றத்தில் தனிநபர் பிரேரணை கொண்டுவர முன்னறிவித்தல் கொடுத்து ஒழுங்குப் பத்திரத்தில் அது இடம் பெறவும் தமிழரசுக் கட்சியினர் செய்தனர்.

### பிரிவினைப் பேச்சு

அதிலிருந்து பிரிவினைப் பேச்சே இங்கு இடம் பெற்று வருகிறது. தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழீழம் கோரிப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இப்பொழுது தேர்தல் பிரசாரத்திலும் நாட்டைப் பிளவு படுத்துவது பற்றியும் அதைத் தடுப்பது பற்றியுமே பேசுகிறார்கள்.

ஐ.தே.க வந்தால் பிரபாகரன் ஜனாதிபதியாவார் என்று இப்பொழுது சந்திரிக்கா சொல்கிறார். இதன்பின் யாருடன் சமாதானப் பேச்சு, எதற்காகப் புலிகளுடன் பேசுவது?

நாற்பதாண்டுகளுக்கு மேலாக நாட்டைப் பிரிப்பதுபற்றியே பேசிப்பேசி ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்த பெரிய கட்சிகள் ஆட்சிக்கு வந்து பிரச்சினைகளைக் கூட்டி நாட்டின் அமைதியைக் குலைத்துள்ளன. அக்கட்சிகள் நாட்டின் அமைதிக்கும் முன்னேற்றத் துக்கும் வழி தேடவில்லை. இத்தேர் தலுக்குப் பின்னராவது நாட்டில் சமாதானம் ஏற்படுமா, அமைதி பிறக்குமா?

— எஸ்.எம்.ஜி.

## அமெரிக்காவை கண்டித்து உலகமெங்கும் ஆர்ப்பாட்டங்கள்

எல்லா நாடுகளிலும் அவ்வப்போது ஆர்ப்பாட்டங்கள் நடக்கவே செய்கின்றன.

ஆர்ப்பாட்டங்கள் பெரும்பாலும் அந்தந்த நாடுகளின் அரசாங்கங்களுக்கு எதிரானவை.

இன்று நிலைமை மாறிவிட்டது. ஆப்கானிஸ்தானின் தலிபான் அரசு மீது அமெரிக்கா போர் தொடுத்ததை அடுத்து உலகமே ஆர்ப்பாட்டமயமாகிப்போய்விட்டது.

உலக நாடுகள் பலவற்றில் இன்று ஆர்ப்பாட்டங்கள் பெரிய அளவில் நடக்கின்றன. இயற்கையும் இதற்கு விதிவிலக்கல்ல.

ஆர்ப்பாட்டங்கள் எல்லாம் அமெரிக்காவுக்கு எதிரானவை.

ஒரு பின்லேடனைப் பிடிப்பதற்காக அமெரிக்கா நாட்டையே அழிப்பதா? அந்த நாட்டு மக்களுக்குக் கஷ்டங்களைக் கொடுப்பதா? இந்தக் கேள்விகளுடன்தான் உலகளாவிய முறையில் ஆர்ப்பாட்டங்கள் நடக்கின்றன.

## மட்டக்களப்பு வேட்பாளர்களுக்கு படுவான்கரை மக்கள் காலக்கெடு

மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு படுவான்கரைப் பகுதி மக்கள் ஆறு கோரிக்கைகளை விடுத்து துண்டுப்பிரசுரம் வெளியிட்டுள்ளனர்.

படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத படுவான்கரை மக்களின் துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

1. அத்தியாவசிய உணவுப் பொருட்கள், மற்றும் விவசாயத்துக்குத் தேவையான பொருட்களை எடுத்துவருவதற்கு இருந்ததடை நீக்கப்பட வேண்டும்.
2. கடந்த மூன்றரை மாதங்களாக மூடப்பட்டுள்ள வலையிறவு, மண்முனைத்துறைப் பாதைகள் திறக்கப்பட வேண்டும்.
3. பொது மக்களின் மீது ஆயுததாரிகளினால் கொடுக்கப்படும் சகல அழுத்தங்களும் முடிவுக்கு வரவேண்டும்.
4. சமூக சீரழிவுகளில் இருந்து மக்களைப் பாதுகாக்க வேண்டும்.
5. படுவான்கரைப் பகுதியை நோக்கி படையினர் மேற்கொள்ளும் ஷெல் வீச்சுகள் நிறுத்தப்பட வேண்டும்.
6. படுவான் கரைப்பகுதிக்கான சகல போக்கு வரத்துக்களும் தங்கு தடையின்றி நடத்தப்படவேண்டும்.

தமது ஆறு கோரிக்கைகளையும் எதிர்வரும் 11 ஆம் திகதிக்கு முன்னர் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர்கள் நிறைவேற்றிவிட வேண்டும் என்றும் படுவான்கரை வாக்காளர்கள் காலக்கெடு விதித்துள்ளனர்.

தமது கோரிக்கைகள் நிறைவேற்றப் படாவிட்டால் டிசெம்பர் 5 ஆம் திகதி நடைபெறும் பொதுத் தேர்தலில் படுவான்கரை மக்கள் வாக்களிக்கமாட்டார்கள் என்று அந்த துண்டுப் பிரசுரத்தில் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சுமார் 70 ஆயிரம் பதிவு செய்யப்பட்ட தமிழ் வாக்காளர்கள் இருக்கின்றனர்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் இவர்களை வாக்களிக்க வைப்பதன் மூலம் தமது தேர்தல் வெற்றியை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும் என்று தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பு கருதுகிறது.

—நேரான்

# கூட்டமைப்பு களம் இறங்கியதால் மட்டக்களப்பு களை கட்டுகிறது

## மிக அவதானமாக நகர்வுகளை ஆரம்பித்த அரசியல் கட்சிகள்

தேர்தல் காலங்களில் அதிகமாகக் குழம்பிப் போய் இருப்பவர்கள் வாக்காளர்களே. இது வழமையானது.

தேர்தல் காலங்களில் அரசியல் கட்சிகள் எடுக்கும் வியூகங்கள், அடிக்கும் 'பல்டி'கள், அரசியல்வாதிகளுக்கு மக்கள் மீது ஏற்பட்டுவிடும் திடீர் பாசம், வேட்பாளர்களின் வகைவகையான வாக்குறுதிகள், அபிவிருத்தி — வேலைவாய்ப்பு அறிவித்தல்கள் போன்றவற்றால் வாக்காளர்களுக்கு ஏற்படும் குழப்பம் தேர்தல் திருவிழா முழுவதும் தொடரும். வாக்களிப்பு முடிவடைந்து சில காலம் வரை நீடிக்கும்.

ஆனால், வழமையான அந்த நடைமுறைக்கு மாறான ஓர் அனுபவம் கடந்த ஆண்டு பொதுத்தேர்தலின் போது மட்டக்களப்பில் ஏற்பட்டது.

காலாகாலமாக தேர்தல் என்று வந்ததும் குழப்ப நிலையிலேயே இருக்கும் வாக்காளர்கள் கடந்த பொதுத் தேர்தலின் போது முதல் தடவையாக வேட்பாளர்களையும், அரசியல் கட்சிகளையும் கூட குழப்பத்தில் ஆழ்த்தி விட்டிருந்தார்கள். முஸ்லிம் பிரதேச அபிவிருத்தியில் ஒரு சரித்திரம் படைத்திருந்ததாகக் கூறபட்ட ஒரு பிரதி அமைச்சர் அந்தத் தேர்தலில் மண் கௌவியிருந்தார். ஒரு குறிப்பிட்ட பகுதியினரின் பலமான வாக்கு வங்கி தன்னிடம் இருப்பதாகக் கூறிக் களத்தில் குதித்திருந்த தமிழ் உறுப்பினர் ஒருவர் தூக்கி எறியப்பட்டிருந்தார். தமிழ் மக்களின் மனித உரிமை பிரச்சினைகள் சம்பந்தமாக சர்வதேச கவனத்தை ஈர்ப்பதில் முக்கிய பங்கு வகித்திருந்த பிரபலமான தமிழ்த் தலைவர் ஒருவர் மயிரிழையில் மீண்டும் தெரிவானார்.

கடந்த தேர்தலின் போது பிரபல்யங்கள் பலரது அரசியல் அஸ்தமனத்துக்கு வழிவகுத்திருந்த வாக்காளர்கள், பெரிதாக அறிமுகம் இல்லாத இரு புதியவர்களை அமோக ஆதரவுடன் நாடாளுமன்றம் அனுப்பியிருந்தார்கள்.

கடந்த தேர்தலில் அழுத்தமான பாடங்கள் பலவற்றை வேட்பாளர்களுக்கும், அரசியல் கட்சிகளுக்கும் மட்டக்களப்பு மாவட்ட வாக்காளர்கள் கற்பித்திருந்தார்கள்.

இதனால்தானோ என்னவோ இம்முறை தேர்தல் அறிவிக்கப்பட்டதும், வேட்பாளர்களாகத் தம்மை முன்னிலைப்படுத்தியவர்கள் அனைவரும் மிகவும் அவதானத்துடன் தமது நகர்வுகளை ஆரம்பித்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரை இங்குள்ள தமிழ், முஸ்லிம் வாக்காளர்களுக்கிடையேயான அரசியல் போட்டிதான் பிரதான தேர்தல் போட்டியாகக் கருதப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 210,000 தமிழ் வாக்காளர்களும் 62,000 முஸ்லிம் வாக்காளர்களும் உள்ளனர்.

ஆனால் கடந்த இரண்டு பொதுத் தேர்தல்களிலும் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து மேற்கூறப்பட்ட விகிதாசாரத்தின் அடிப்படையில் தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகள் தெரிவாகவில்லை. 1994 ஆம் ஆண்டு தேர்தலில் இங்கு இரண்டு முஸ்லிம் பிரதிநிதிகளும், மூன்று தமிழ்ப் பிரதிநிதிகளும் தெரிவாகியிருந்தார்கள். அதேபோன்று கடந்த ஆண்டு பொதுத் தேர்தலிலும் இரண்டு முஸ்லிம் பிரதிநிதிகளும், மூன்று தமிழ்ப் பிரதிநிதிகளும் தெரிவாகியிருந்தார்கள். தெரிவான மூன்று தமிழ் பிரதிநிதிகளில் ஒருவர் பொ.ஐ.முன்னணி சார்பாகத் தெரிவாகி இருந்தார்.

கடந்த பொதுத் தேர்தலில் இடம்பெற்ற தெரிவுமுறை தமிழர் தரப்பினரை மிகவும் ஆழமாகச் சிந்திக்க வைத்துள்ளது. தமது எதிர்கால நகர்வுகளைக் கவனமாக மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை ஏற்படுத்தியிருந்தது.

விடுதலைப் போராட்டம் மிகவும் உக்கிரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒரு பிரதேசத்தில் இருந்து கடந்த ஆண்டு தேர்தலில் தெரிவான ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களுள் இரண்டு உறுப்பினர்கள் மட்டும்தான் அந்தப் போராட்டத்துக்கு ஆதரவான அமைப்பினைச் சார்ந்தவர்கள் என்பது தமிழ்த் தேசியம் சம்பந்தமான மட்டக்களப்பு வாழ் மக்களின்



தமிழ்க்கட்சிகள் கூட்டமைப்பு வேட்பாளர்கள்

நிலைப்பாடு பற்றிய சந்தேகத்தை சர்வதேச மட்டத்தில் ஏற்படுத்தியிருந்தது. இன்றைய பொதுத் தேர்தலிலும் கூட, போதிய கவனத்துடன் தேர்தல் வியூகம் அமைக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை தமிழர் தரப்பிற்கு ஏற்படுத்திய காரணியாகவும் கடந்த தேர்தல் முடிவுகள் அமைந்திருந்தன.

தமிழ்த் தேசியம் தொடர்பான ஒரே கொள்கைகளை உடைய நான்கு தமிழ் கட்சிகள் அமைத்துள்ள கூட்டமைப்பு முன்னை நாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தலைமையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உதய சூரியன் சின்னத்தின் கீழ் போட்டியிடுகின்றது. இம்முறை தங்கள் அணி எப்படியும் நான்கு ஆசனங்களைப் பெற்றுவிடும் என்று கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளரான ஜோசப் பரராஜசிங்கம் உறுதியாகத் தெரிவித்திருந்தார். இதனைப் பெற்றுக் கொள்வதற்கு கூட்டமைப்பு பல நடைமுறைத் தடைகளைக் கடந்து செல்லவேண்டி உள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களில் சுமார் 70,000 தமிழ் வாக்காளர்கள் வசித்து வருகின்றனர். இவர்களை வாக்களிக்க வைப்பதே கூட்டமைப்பு எதிர்நோக்கும் பாரிய பிரச்சினை ஆகும்.

படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களில் வசித்துவரும் வாக்காளர்களுக்கென்று படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள இடங்களில் கொத்தணி வாக்குச்சாவடிகள் அமைக்கப்படுகின்றன. எனினும் மட்டக்களப்பு வாவியைக் கடந்து வள்ளங்கள் மூலமாகவும், சோதனைச் சாவடிகள் ஊடாகவும் வந்து வாக்களிப்பதில் வாக்காளர்கள் உற்சாகம் அற்றவர்களாகவே காணப்படுகின்றார்கள்.

அத்தோடு தேர்தல் காலங்களில் காணப்படும் பாதுகாப்புக் கெடுபிடிகள் காரணமாகவும், போக்குவரத்து வசதியின்மை காரணமாகவும் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் வசிக்கும் வாக்காளர்களை வாக்களிக்க அழைத்து வருவதில் பல சிக்கல்கள் இருக்கின்றன.

இதனைவிட இராணுவக் கட்டுபாட்டுப் பிரதேசங்களில் வாழும் தமிழ் மக்களை வாக்களிக்கச் செய்வதிலும் கூட கூட்டமைப்பு பலத்த சவால்களை எதிர்கொள்ளவேண்டி உள்ளது. இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசங்களில் வாழும் மக்களிடையே காணப்படுகின்ற அகதி வாழ்க்கை. இடம்பெயர்வு, விரக்தி நிலை என்பனவற்றையும் மீறி அவ... வாக்களிக்க உற்சாகப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் தமிழ்க் கட்சிகளுக்கு இருக்கவே செய்கின்றது.

கடந்த பொதுத் தேர்தலில் 50 முதல் 60 சதவீத தமிழ் மக்களே மட்டக்களப்பு மாவட்டத்தில் வாக்களித்திருந்தனர். அதேவேளை 90 முதல் 92 சதவீத முஸ்லிம்கள் கடந்த தேர்தல்களில் வாக்களித்திருந்தனர்.

இவற்றை எல்லாம் வெற்றிகரமாக எதிர்கொண்டு ஒருவாறு 120,000 இற்கும் அதிகமான வாக்குகளை இந்த கூட்டமைப்பு பெற்று விட்டால், நான்கு ஆசனங்களைப் பெறுவதில் எந்தவிதத் தடையும் இருக்க மாட்டாது. என்று ஜோசப் பரராஜசிங்கம் கூறுகிறார்.

இதே போன்று முஸ்லிம்கள் தரப்பிலும் தற்போதுள்ள இரு ஆசனங்களையும் தக்கவைத்துக் கொள்வதற்காக பலமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முஸ்லிம் காங்கிரஸும் பொ.ஐ. முன்னணியின் கதிரைச் சின்னத்தில் பேரியல் அஷ்ரப் தலைமையிலான தேசிய ஐக்கிய முன்னணியின் முஸ்லிம் வேட்பாளர்களும் ஐ.தே.கட்சி சார்பாக மூன்று முஸ்லிம் வேட்பாளர்களும் போட்டியிடுவதால் முஸ்லிம் வாக்குகள் ஓரளவு சிதறுண்டு போகக் கூடிய சாத்தியங்கள் காணப்படவே செய்கின்றன.

ஐ.தே.கட்சியைப் பொறுத்த அது நம்பியுள்ளது மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாக்கு வங்கியின் உதவியை.

தற்பொழுது வீச ஆரம்பித்துள்ள ஐ.தே.க அலையைப் பயன்படுத்தியும், மட்டக்களப்பில் உள்ள பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த வேட்பாளர்களை உள்வாங்கியும் இதற்கான வியூகத்தை கட்சியின் முதன்மை வேட்பாளர் அலிசாகிர் மௌலானா அமைத்திருப்பதை காண முடிகின்றது.

இவற்றைவிட சிலதமிழ்குழுக்களும்போட்டியிடுகின்றன.

அத்தோடு மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் சுயேச்சைக் குழுக்களில் அநேகமானவை பிரதான அரசியல் கட்சிகளினால் ஏற்பாடு செய்யப்பட்டவைகளாகவே இருக்கின்றன. வாக்குச் சாவடிகளிலும், வாக்கு எண்ணும் பொழுதும் அதிக எண்ணிக்கையிலான தமது ஏஜண்டுகளை உள்நுழைக்கும் நோக்கத்துடன் சில கட்சி கள் இந்த ஏற்பாடுகளைச் செய்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆகமொத்தத்தில், மட்டக்களப்பு மாவட்டம் இம்முறை போட்டிகள் அதிகம் இல்லாததும், ஆனால் தடைகள் பல உள்ளதுமான ஒரு தேர்தல் களமாகவே தோற்றம் அளிக்கின்றது.

— சாத்வீகன்

## வாசகர் இதயம் பேசுகிறது

சுடர் ஒளியே 'உயிரியல் கிருமிப் போர்' பற்றியும் களநிலைச் செய்திகள் பற்றியும் தந்து அசத்தினாய். புதிதாகத் தொடரும் 'கவிதைச் சமர்' மிகவும் சுவாரஸ்யமாக உள்ளது.

அளவை கலைக்கரன்.

சென்றவார இதழில் தேர்தல் திருவிழா செய்திகள் அபாரம். வடபுல செய்திகள். ஓயாத அலைகள் என அனைத்தும் படுஜோர்.

ஜே.எம். பாரீஸ், தெல்தெனிய.

சுவை பொங்கும் சுடர் ஒளியே உன்னில் தான் உண்மையின் தத்துவத்தை அறிய முடிகிறது. ஆரம்பம் முதல் இன்றுவரை நீ தாங்கி வரும் அனைத்து அம்சங்களும் பிரமாதம். புரியாத விடயங்கள் ஓயாத அலைகள் தொடரில் தெளிவாகின்றன. உன் மூலம் வாசகர்கள் நண்பர்களை பெற்றுக் கொள்ள பேனா நண்பர் பகுதி ஒன்றை ஒளிவீச முடியுமா?

ப. வசந்தன், வவுனியா.

கொடிய போரின் வடுக்கள் நெஞ்சை நெருடவில்லையா புகைப்படங்கள் கலங்காத நெஞ்சங்களையும் கலங்க வைத்தன. போரின் வடுக்கள் என்று தான் ஆறுமோ?

க. சுதர்சன், செங்கலடி.

சுடர் ஒளி தரும் அத்தனையும் மக்கள் மத்தியில் ஒளி வீசுகின்றன. அரசியல் கட்டுரைகள் சூப்பர் 'சுடர் ஒளி' ஒளி வீச என்னுடைய வாழ்த்துக்கள்

சாய்ந்தமருதுபைறோஸ், சாய்ந்தமருது—11.

ஒக்டோபர் 28 இல் வெளியான "மலையகத்தில் பலமான கூட்டணி விடிவுக்கு வழிகோலுமா," "கிழக்கு மாகாணத்தை ஐ.தே.க. கைவிட்டது பச்சைத் துரோகம்" என்ற செய்திகள் அசத்தி விட்டன.

சே. அக்கீத், செட்டிகுளம்.

நீ சுமந்து வரும் களநிலைவரம், பித்தன் பதில்கள், கவிதைப்புனல், தேரடி அரட்டை, அரசியல் அம்பலம், மிஸ்டர் க்றோ செய்திகள் யாவும் இனிமையிலும் இனிமை. சுடர் ஒளியே நீ — இன்னும் பல புதிய அம்சங்களை இணைத்து வெளிவர உனது வாசகனின் நல்வாழ்த்துக்கள்.

சு. நீலன், வேணாவில்.

சுடர் விட்டு ஒளிபரப்பிக் கொண்டிருக்கும் எனது அன்புக்கினிய சுடர் ஒளியே. அகில உலகத்தின் ஆக்கங்களை எல்லாம் எமக்குத் தந்து தரத்திலே உயர்வாக நிற்கும் உனக்கு, ஈழமக்கள் சார்பில் எனது நன்றிகள். உனது சேவை மென்மேலும் வளர வாழ்த்துக்கூறி விடைபெறும் வாசகன்.

அ. நகுலேஸ்வரன், கிளிநொச்சி.

முள்ளில் ஒரு ரோஜாவாய் சேற்றில் ஒரு செந்தாமரையாய் வாசகர்களுக்கு ஓர் அறிவொளியாய் வாரா வாரம் வெளிவரும் சுடர் ஒளியே உனது ஆக்கம் அனைத்தும் சூப்பர்.

ஜி. தினேஷ், முருங்கன்.

என் இதய பூங்காவில் என்றுமே வாடாமல் பூத்திருக்கும் சுடர் ஒளியே. நான் பாலை வனம் தாண்டும் போது உன்னை தீண்டு வதை விடவில்லை. காரணம் நீ சுமந்து வரும் ஆக்கங்கள் அனைத்தும் என் தனிமைக்கும் என் சோகங்களுக்கும் அறிவுப் பொக்கிஷம்.

ச. அசோக், முருங்கன்.

என் இனிய சுடர் ஒளியே உன்னை வாரம் ஒரு முறை பார்க்காமல் என்னால் இருக்க முடியாது. நீ படைத்த படைப்புக்கள் அனைத்தும் சூப்பர். அதிலும் விசேமாக என் இயத்தை கொள்ளை கொள்ளும் பித்தன் பதில்கள் என்ற பகுதி எனக்கு பிடித்தது.

இ. தவசீலன், பொற்பதி, குடத்தனை.

உன் ஒவ்வொரு இதழுக்காகவும் தவம் இருக்கும் நாம் பாதைத் தடையால் பரிதவிக்கின்றோம். சிலசமயம் ஒரு மாத காலம் பிந்தியும் கிடைக்கிறாய். இருப்பினும் உன் ஒவ்வொரு இதழையும் நாம் வரவேற்கின்றோம்.

கே. என். குருபரன், கருநாட்டுக் கேணி.

07.10.2001 அன்று வெளிவந்த சுடர் ஒளி சஞ்சிகையில் வந்த அட்டைப் படம் மனதை உருக்கிவிட்டது. "களநிலமை எப்படி" மிகவும் சூப்பர். செப்டெம்பர் பற்றிய தகவல் தந்த ஈழவேந்தனுக்கு எனது பாராட்டுக்கள். ஐ.தே.க எம்.பி அஸ்வர் பார்வையில் அஷ்ரப் கட்டுரை மிகவும் அருமை!




ச. கங்கை அமரன், சுண்டிக்குளம்.

# மேல் நாட்டு குளிர்பானம் இனிமேல் வேண்டாமே!

குளிர்பானம் அருந்துவதில் முஸ்லிம் மக்களுக்குத் தனிவிருப்பம் இருக்கிறது. ஆயினும் இந்தியாவிலுள்ள முஸ்லிம் மக்கள் மேல்நாட்டுக் குளிர்பானம் அருந்துவதில்லை என்று தீர்மானித்திருக்கிறார்கள். ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்க — பிரிட்டிஷ் தாக்குதல் நடைபெறுவதைக் கண்டித்து அந்த நாடுகளின் உற்பத்திப் பொருட்களையும் இனி அவர்கள் வாங்க மாட்டார்கள். இதனால் இந்திய குளிர்பானங்களுக்கு மதிப்பு அதிகரித்திருக்கிறது.





# மகாத்மா காட்டிய வழி மிகவும் சிறப்பானது தான்

இந்திய மக்களின் தேசபிதா மகாத்மா காந்தியின் தத்துவங்களை மேல் நாட்டவர்களும் மதிக்கிறார்கள். அமெரிக்காவின் இந்தியத் தூதுவர் றொபர்ட் பினாக் அண்மையில் மும்பாயிலுள்ள காந்தியின் இல்லமான மணி பவனுக்குச் சென்றிருந்தார். அங்கிருந்த காந்தியின் உருவப் பலகையின் அருகில் நின்று அவர் புகைப்படம் எடுத்துக் கொண்டார். உலகுக்கு மகாத்மா காட்டிய வழி மிகவும் சிறப்பானது என்று அவர் தெரிவித்தார்.


# மின்னல் வேகப் பயணம் மேற்கொள்ள ஆயத்தம்

ஒளியை விட ஒலி வேகமானது என்பார்கள். இந்த ஒலியின் வேகத்தை விட வேகமாகப் பறக்கும் "சூப்பர் சோனிக்" விமானமும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதை விட மின்னல் வேகத்தில் அதாவது ஒலியை விட எட்டு மடங்கு வேகத்தில் பறக்கக்கூடிய "ஹைப்பர் சோனிக்" விமானம் அண்மையில் பரீட்சார்த்தமாகப் பறக்க விடப்பட்ட காட்சி இது. மேலும் பரீட்சார்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு மின்னல் வேக விமானங்கள் உருவாக்கப் படவுள்ளன.



# கயிற்றுப் பாலம் மீது ஆற்றைக் கடக்கும் துணிவு

பின்தங்கிய பகுதிகளில் வாழ்பவர்கள் உறுதி வாய்ந்த பாலங்கள் இன்றி ஆறுகளைக் கடந்துசெல்லப் பரிதவிப்பார்கள். இலங்கையிலும் எத்தனையோ பேரின் நிலை இதுதான். மலைப்பாங்கான நாடு நேபாளம். அங்கு மிகவும் சின்னஞ்சிறிய கயிற்றுப் பாலத்தின் மீது ஏறி ஒரு ஆற்றைக் கடக்க எவ்வளவு துணிவு தேவைப்படுகிறது என்பதை இந்தப்படம் விளக்கவில்லையா?



# ஒளிந்திருக்கும் முகம் எது?

ஒக்டோபர் 28, சுடர்ஒளி மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் நடிகை ஜோதிகாவினுடையது. சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகளின் பெயர் விவரம் வருமாறு.

1. செ. மகேந்திரன், வவுனியா.
2. ஆர். பிளட்மேரி, பலாங்கொடை.
3. எம். வை.ரிஸ்மி முகம்மது, அக்குறணை.

சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய வாசகர்கள் அனைவருக்கும் பாராட்டுகள்.



அதிஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.

கடந்த வாரம் (04.11.2001) மசாலாமிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகத்திற்குரிய நடிகர் யார்? சரியான விடையைத் தபால் அட்டையில் எழுதி அனுப்பும் வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகள் பெயர், விவரம் இப்பகுதியில் வெளியிடப்படும்.



இந்த வாரம் பிரசுரமாகியிருக்கும் இந்த உருவம் யாருடையது? அப்பாவின் மரணத்திலிருந்து தேறி மீண்டும் சுறுசுறுப்பாகி விட்டார் இந்த இளைய திலகம்.

இந்த முகத்திற்குரிய நடிகரைக் கண்டுபிடித்து அவர் பெயரைத் தபால் அட்டையில் எழுதி பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

"சுடர்ஒளி"
36/2, பிரெட்ரிக்கா வீதி,
கொழும்பு — 06.

# மசாலா மிக்ஸ்

# குகைக் கோவிலுக்குள் விக்கிரகங்கள் துப்புரவு

இமயத்தின் உச்சியிலுள்ள பூட்டான் நாட்டில் குகைக் கோவில்கள் பல இருக்கின்றன. இந்தக் குகைக் கோவில்களுக்குள் புராதன விக்கிரகங்கள் ஏராளம். அந்த விக்கிரகங்களைத் துப்புரவு செய்வது ஒரு கலை என்றே சொல்லலாம். ஒரு கயிற்றில் தொங்கியபடி குகைக் கோவில் விக்கிரகங்களைத் துப்புரவு செய்யும் இந்த அழகியின் துணிவு எத்தகையது?



# குறி தவறிய மனித வெடிகுண்டு இலக்கு பிரதமர்தானா?

## மர்மம் துலக்கும் முயற்சியில் படைத்தரப்பு

கடந்த வாரம் நாரஹேன்பிட்டி சித்திரா ஒழுங்கையில் தற்கொலைக் குண்டுதாரி ஒருவர் தன்னைத்தானே வெடிக்க வைத்ததுடன் மூன்று பொலிஸார் உட்பட7 பேரைக் கொன்றும் மேலும் 15 பேரை கடும் காயங்களுக்கும் உள்ளாக்கியிருக்கிறார்.

நாரஹேன்பிட்டியில் கொழும்பு மாவட்ட செயலக புதிய கட்டடத் தொகுதிக்கான அடிக்கல் நடும் வைபவத்தில் கலந்துகொண்ட பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவை இலக்கு வைத்தே இத்தாக்குதல் நடத்தப்பட இருந்ததாகவும் பொலிஸ் உத்தியோகத்தர்களினது சாதுரியத்தால் அது தவிர்க்கப்பட்டு விட்டதாகவும் உடனடியாக வெளியாகிய படைத்தரப்பு ஊகங்கள் தெரிவித்தன.

படைத்தரப்பில் பெரும் பகுதியினர் இதனை வலுவாக நம்புகின்றபோதிலும் மற்றும் சிலர் பிரதமர்தான் உண்மையான இலக்கா என்பதில் சந்தேகம் கொண்டிருக்கின்றனர்.

அவர்களின் கருததுப்படி, பிரதமர் அல்லாத வேறொரு அரசியல் முக்கியஸ்தரை அல்லது இராணுவ உயர் அதிகாரிகளில் ஒருவரை இலக்கு வைக்கவே குண்டுதாரி தயாராக இருந்திருக்கலாம் என்றும் நம்பப்படுகிறது.

அவர்களது கருத்துப்படி, பிரதமர்தான் இலக்காக இருந்திருந்தால் அவர் புறப்படும் நேரம், பயணம் செய்யும் பாதை, மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் என்பன பற்றி நன்றாக தகவல்களைச் சேகரித்துக் கொண்டுதான் தாக்குதல் திகதியையும் இடத்தையும் தீர்மானித்திருப்பர்.

இவ்வாறு வீதியின் இருமருங்கிலும் பொலிஸார் வேட்டை நாய்கள் போல காக்கி உடையிலும் சிவிலிலும் காவல் ரோந்து புரிவார்கள் என நன்கே அறிந்துள்ள குண்டுதாரி அவர்கள் கண்களில் படும்படியாகவோ அல்லது பொதுமக்களுக்கு சந்தேகம் ஏற்படக்கூடிய வகையிலோ அங்கும் இங்கும் நடமாடித் திருந்திருக்க மாட்டார். அல்லது அவ்வாறு பொலிஸார் கூறுவதுபோல அவரை முதலில் சோதனையிட்ட பொலிஸ் உத்தியோகத்தர் அவரிடம் தற்கொலை அங்கி இருப்பதைத் தெரிந்துகொண்டும் அவரை அவ்விடம் இருந்து நழுவ விட்டு பின்தொடர்ந்து சென்றதாக வைத்துக்கொண்டாலும் ஒருமுறை பொலிஸாரிடம் குண்டுடன் மாட்டிக்கொண்ட குண்டுதாரி மீண்டும் வந்து பொலிஸார் தன்னைச் சுற்றி வளைக்கும் வரை பார்த்துக்கொண்டு இருந்திருப்பாரா?

ஆக மொத்தத்தில் பெரும்பாலும் அரசியல் இலக்கொன்றை மையம் கொண்டுதான் இத்தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட இருந்தவேளை படையினரின் அதிரடி நடவடிக்கைகளால் அது குறி தவறி வெடித்திருக்கிறது.

இலக்கு யாராக இருந்தாலும் அது பிரதமரைத் தான் குறி வைத்து மேற்கொள்ளப்பட்டதாக அரச தரப்பினர் எடுத்துக் கொண்டு அதையே தேர்தல் துரும்பாக பாவிக்க முனைந்திருப்பதை இங்கு நன்கு அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

விசேடமாக புலிகளுக்கும் ஐ.தே.கவினருக்கும் இடையில் ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகஅரச தரப்பு அரசியல்வாதிகள் வாதாடுகின்றனர்.

கொழும்பில் அண்மைக் காலங்களில் தற்கொலைத் தாக்குதல் முயற்சிகள் எல்லாம் இலக்குத் தவறி தோல்வியில் முடிவடைந்தமைக்கு படையினரின் உஷாரான பாதுகாப்பு ஏற்பாடுகளையே பிரதான காரணியாகக் கொள்ளலாம்.

கடந்த வருடம் டிசம்பர் 18 ஆம் திகதி ஜனாதிபதி மீதான தற்கொலை குண்டுத் தாக்குதல் தொடக்கம் பிரதமரின் உத்தியோகபூர்வ அலுவலகத்துக்கு முன்பாக நடத்தப்பட்ட தாக்குதல், கொழும்பு மாநகர சபைக்கு முன்னால் நடத்தப்பட்ட தாக்குதல், கொழும்பு கண் வைத்தியசாலைக்கு முன்னால் நடத்தப்பட்ட தாக்குதல் எல்லாமே இலக்கை அடையும் முன்னரே அன்றி இலக்கு தவறிய தாக்குதல்களாகவே தோல்வியில் முடிவடைந்திருக்கின்றன.

எது எப்படி இருப்பினும் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் மேற்கொண்ட இத்தாக்குதல் இலக்குத் தவறி வெடித்திருந்தாலும் அது படைத்தரப்பு மத்தியிலும் ஆளும் கட்சி அரசியல்வாதிகள் மத்தியிலும் ஒரு குழப்ப நிலையை ஏற்படுத்தியிருக்கிறது.

நோர்வே அரசின் அனுசர[illegible]ன்



மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகள் தற்காலிகமாக ஒரு தேக்க நிலையை அடைந்திருந்தாலும் கொள்கையளவில் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வின் அடிப்படையில் புலிகள் தெற்கில் தாக்குதல்கள் எவற்றிலும் ஈடுபடுவதில்லை எனவும் அரசு வன்னிப் பகுதிக்கு மேலதிக உணவு மற்றும் அத்தியாவசிய பொருட்களை அனுப்புவது எனவும் உடன்பாடு காணப்பட்டது.

கட்டுநாயக்கா விமானத்தளம் மீதான தாக்குதலின் பின் மீண்டும் அரசியல்வாதிகளை இலக்கு வைத்து தற்கொலைக் குண்டுதாரித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாகக் கருத்துத் தெரிவித்த இராணுவ உயர் அதிகாரி ஒருவர், ''தேர்தல் காலங்களின்போது பரப்புரைகளில் ஈடுபடும் முக்கிய அரசியல் தலைகளை இலக்குவைத்து சுமார் 15க்கும் மேற்பட்ட நன்கு பயிற்றப்பட்ட – தற்கொலைக் குண்டுதாரிகள் கொழும்புக்குள் ஊடுருவியிருக்கிறார்கள் என புலனாய்வுத் துறையினருக்கு தகவல் கிடைத்திருப்பதாகக் கூறினார்.

தெற்கில் அரசியல் பிரபலங்கள் தமது அரசியல் எதிரிகளைத் துவம்சம் செய்ய பாதாள உலக ஜாம்பவான்களின் உதவியை நாடியிருக்கும் இவ்வேளையில் இச்சந்தர்ப்பத்தைப் புலிகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த வாய்ப்புக்கள் நிறையவே இருக்கின்றன என்றும் அவர் சொன்னார்.

இதேவேளை நாரஹேன்பிட்டி தாக்குதல் சம்பவம் நடைபெற்ற அடுத்த 24 மணி நேரத்துக்குள் சி.ஐ.டியினர் நீர்கொழும்பு தலுபொத்த பகுதியில் புலிகளின் நீண்ட கால மறைவிடம் என்று கூறப்படும் ஒன்றை முற்றுகையிட்டனர்.

அங்கு சென்ற சி.ஐ.டி. விசேட அணியினர் மூன்று தற்கொலை அங்கிகளையும் 10 உயர் வலு கொண்ட குண்டுகளையும் சுமார் 9000 தோட்டாக்களையும் கைப்பற்றினார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

அதைவிட அங்கு காணப்பட்ட மோசடி செய்யப்பட்ட கடவுச்சீட்டுக்களையும் அவர்கள் கண்டுபிடித்தனர்.

இது தொடர்பாக சி.ஐ.டி. தகவல் தருகையில் பாரிய கொழும்புப் பிரதேசம் மீதான தாக்குதல் நடவடிக்கைகளின் பிரதான தலைமையகமாகவும் ஆயுதக் களஞ்சியமாகவும் அந்த மறைவிடம் இருந்திருக்கலாம் எனத் தெரிவித்தனர்.

அத்துடன் கட்டுநாயக்கா மீதான அழித்தொழிப்பு தாக்குதலுக்கு இங்கிருந்துதான் ஆயுதங்கள் விநியோகிக்கப்பட்டிருப்பதாகவும் தாக்குதல் தினத்துக்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் தாக்குதலில் ஈடுபட்டவர்கள் இங்கு தங்கிச் சென்றதாக தமக்குத் தகவல் கிடைத்திருப்பதாகவும் கூறினர்.

மூன்று வர்த்தகப் பெரும் புள்ளிகளும் ஒரு பெண் உறுப்பினரும் மூன்று வருடங்களுக்கு முன்னர் வாங்கிய அந்த மறைவிடததில வசித்து வந்தனர் என்றும் அவர்கள் அனைவரும் கைதுசெய்யப்பட்டு தடை உத்தரவின் பெயரில் சிஐ.டியினரின் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருக்கின்றனர் என்றும் தெரியவருகிறது. அவர்கள் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் மேலும் பல கைதுகள் இடம்பெற இருப்பதாகவும் சி.ஐ.டியினர் தெரிவித்தனர்.

இது இவ்வாறு இருக்க நாரஹேன்பிட்டியில் நடத்தப்பட இருந்த தாக்குதல் புலிகளின் மூத்த உறுப்பினர் கேணல் சங்கரின் மறைவுக்குப் பதிலடியாக இருந்திருக்கலாம் என்றும் புலனாய்வுத்துறையினர் கருதுகின்றனர்.

கடந்த மாதம் விகாரமகாதேவி பூங்காவில் கண்டெடுக்கப்பட்ட தற்கொலை அங்கி அன்றைய தினம் புனித பிரிஜட்ஸ் கன்னியர் மடம் பரிசளிப்பு விழாவில் கலந்துகொள்ளச் சென்ற ஜனாதிபதியை இலக்காக வைத்து கொண்டுவரப்பட்டிருக்கலாம் என இப்போது அவர்கள் கருதுகின்றனர்.

கேணல் சங்கர் கடந்த மாதம் அதிக தூரம் ஊடுருவி சென்று மறைந்திருந்து தாக்கும் இராணுவ நடவடிக்கையின்போது ஒட்டிசுட்டான் பகுதியில் வைத்து கொல்லப்பட்டார்.


புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு மிகவும் நெருங்கிய உறவினரான கேணல் சங்கர் புலிகளின் விமானப் பிரிவின் தளபதியாகவும் இருந்தவர். இவரது மறைவினைத் தொடர்ந்து புலிகள் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் அரச படைகளின் இந்த நடவடிக்கை மிகவும் கண்டனத்துக்குரியது என்றும் நோர்வேயின் அனுசரணையுடனான சமாதான முயற்சிகளை இத்தாக்குதல் கடுமையாகப் பாதித்திருப்பதாகவும் தெரிவித்திருந்தனர்.

இதனால் ஏற்படப்போகும் பாரதூரமான விளைவுகளுக்கு அரசே பொறுப்பேற்க வேண்டும் என்றும் எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

ஜூலை முதலாம் திகதி வன்னிப் பகுதி மீதான கண் மூடித்தனமான விமானத்தாக்குதல்களுக்கும் புலிகளின் தலைவரின் நம்பிக்கைக்கு பாத்திரமான சங்கரின் மறைவுக்கும் நிச்சயமாக பதிலடி தெற்கிலேயே நிகழும் என எதிர்பார்த்திருந்த படைத்தரப்பு பாதுகாப்பு வலையமைப்புக்களைச் சற்று உஷாராகவும் நேர்த்தியாகவும் இறுக்கிவைத்திருக்கிறார்கள்.

சர்வதேச பயங்கரவாதிகளின் பட்டியலில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் புலிகளையும் அடக்கியுள்ள இவ்வேளையில் தெற்கில் புலிகள் எவ்வாறு தமது நடவடிக்கைகளை இனிமேல் மேற்கொள்ளப் போகிறார்கள் என்பது எவராலும் ஊகிக்கப்படமுடியாத ஒரு விடயம். ஆனாலும் கள முனையில் இது புலிகளின் நிலைப்பாட்டில் எந்தவித தாக்கத்தையும் ஏற்படுத்தப்போவது கிடையாது.


இது இவ்வாறு இருக்க சென்ற வாரம் புலிகள் பருத்தித்துறைக் கடலுக்கு சுமார் 12 கடல் மைல்கள் தொலைவில் வைத்து ''துன்கிந்த'' என்ற எண்ணெய்க் கப்பலை தாக்கியிருப்பது எதிர்காலத்தில் குடாநாட்டில் தங்கியிருக்கும் படையினருக்கான கடல்வழி வழங்கல் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி இருப்பதை எதிர்வு கூறியிருக்கிறது.




ஏற்கனவே தமது யுத்தமுனைகளை கடலின் மடியில் திறந்திருக்கும் புலிகள் கடல் சமர்களின்போது முக்கிய தளபதிகளை இழந்தபோதிலும் வலுக்குறையாத ஒரு நிலைமையே காணப்படுகிறது.

கடற்படையினரின் கடற் கலங்கள் பலவற்றைக் கடலில் வைத்தே சமாதி கட்டிய கடற்புலிகள் பருவ பெயர்ச்சி மழையின் சீற்றத்துடன் தமது தாக்குதல் நடவடிக்கைகளை கடலில் அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

மறுபுறத்தில் சிக்கலான ஒரு தேர்தலை சந்திக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு தேர்தல் களத்தில் வாழ்வா சாவா என்பதை தீர்மானிக்க வடபகுதியில் போர் முரசு கொட்டினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.






# மனந் திறந்து பேசாவிட்டால் நாடு துண்டாடப்படும் ஆபத்து!

## ஐ.தே.க. நிலைப்பாடு பற்றி மிலிந்த மொறகொட

அரசு — புலிகள் இரு தரப்பும் பேச்சு வார்த்தை மேசைக்குச் சென்று திறந்த மனதுடன் பேச வேண்டும். அதன் மூலம் தான் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். இது கடைசிச் சந்தர்ப்பம். இந்தச் சந்தர்ப்பத்தைத் தவற விட்டால் நாடு துண்டாடப்படலாம். இதுவே நான் சார்ந்த ஐ.தே.க வின் கருத்தும் நிலைப்பாடும்.

மேற்கண்டவாறு சுடர் ஒளிக்குத் தெரிவித்தார் ஐ.தே.க. கொழும்பு மாவட்ட வேட்பாளரும் கட்சியின் மேல் மட்ட முக்கியஸ்தர்களில் ஒருவருமான மிலிந்த மொறகொட.

பொதுத் தேர்தலில் ஐ.தே.க வெற்றி ஈட்டும் பட்சத்தில் மிலிந்த மொறகொட பெருமைக்குரிய நிதி அமைச்சர் பதவியை வகிப்பார் என்று இப்போது பலரும் பந்தயம் கட்டத் தொடங்கி விட்டார்கள்.

அந்த அளவுக்கு தொழில் துறையிலும், சமூக அந்தஸ்திலும் உயர்ந்து நிற்பவர் மிலிந்த மொறகொட. அவர் சுடர் ஒளிக்கு நேரம் ஒதுக்கி பேட்டி அளித்தார். விவரம் வருமாறு:—

**சுடர் ஒளி :** வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் என்று நம்புகிறீர்களா?

**மிலிந்த :** கடந்த இருபது வருடங்களுக்குள் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் ஏதோ ஒரு வகையில் பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்தன. அவை ஒவ்வொன்றும் தோல்வியிலேயே முடிந்துள்ளன. நாம் விட்ட தவறுகளிலிருந்து பாடம் கற்க வேண்டும். இனி ஒரு புதிய அணுகுமுறை தேவை.

**சுடர் ஒளி :** புதிய அணுகுமுறை வெற்றியளிக்குமா?

**மிலிந்த :** இது ஒரு இலகுவான காரியமல்ல. ஒரே இரவில் சமாதானத்தை ஏற்படுத்தி பிரச்சினைக்குத் தீர்வு கண்டு விடலாம் என்று நான் பொய் சொல்ல மாட்டேன். எந்த நிபந்தனையும் இன்றி முதலில் இரு தரப்பினரும் பேச்சு வார்த்தை மேசைக்கு வர வேண்டும். அதன் பின்பு கோரிக்கைகள் பற்றி கலந்தாலோசனை செய்ய வேண்டும். அந்த வகையில் வெற்றிக் கம்பத்தை அடையலாம்.

**சுடர் ஒளி :** நிச்சயமாகச் சொல்கிறீர்களா?

**மிலிந்த :** இது வரை காலமும் நாம் மோதல்கள் ஆரம்பித்த வுடனே பேசுவதை நிறுத்தி வந்துள்ளோம். இந்த நிலை மாற வேண்டும். மோதல்கள் நடக்கும்போதும் பேச்சுவார்த்தை தொடர்வது அவசியம். மூன்று அடிகள் வைக்கும் போது இரண்டு அடிகள் சறுக்கலாம். அதைக் கண்டு மனம் தளர்ந்து போகக் கூடாது.

**சுடர் ஒளி :** எந்த அடிப்படையில் பேச்சு வார்த்தை நடை பெற வேண்டும் என்று சொல்ல முடியுமா?

**மிலிந்த :** பேச்சு வார்த்தைகளில் ஈடுபடும் போது திறந்த மனதுடனும் தெளிவான சிந்தனையுடனும் செயற்பட வேண்டும். இது அரசாங்கம், புலிகள் இயக்கம் ஆகிய இரு சாராருக்கும் பொருந்தும். நோர்வே நாட்டின் அனுசரணையையும் சரிவரப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

**சுடர் ஒளி :** இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்குப் பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டுள்ளது. மக்களின் நலன் கருதி இது நீக்கப்பட வேண்டும் என்று நீங்கள் கருதவில்லையா?



மிலிந்த மொறகொட

**மிலிந்த :** யுத்தத்தினால் அப்பாவிப் பொதுமக்கள் தான் அதிகமாக பாதிக்கப்படுகின்றனர். அவர்களின் கஷ்டங்கள் நீக்கப்பட வேண்டும். இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் உள்ள பொருளாதாரத் தடையை நீக்குவது தொடர்பாக ஐ.தே.க ஆராய்ந்து வருகிறது.

**சுடர் ஒளி :** தமிழ் மக்கள் தமக்கு அநீதி இழைக்கப்பட்டி ருக்கிறது என்று கூறுகிறார்களே அது உண்மை என்று ஒத்துக் கொள்கிறீர்களா?

**மிலிந்த :** உண்மைதான் ஆனால் அதற்காக வன்முறையை அனுமதிக்க முடியாது.

**சுடர் ஒளி :** எந்த வகையில் அந்த அநீதியை ஒழிக்கலாம் என்று நினைக்கிறீர்கள்?

**மிலிந்த :** அரசமைப்புச் சீர்திருத்தங்கள் மூலம் பிரச்சினைகளை தீர்க்க முடியும் எனப் பலர் நினைக்கிறார்கள். நான் அப்படி நினைக்கவில்லை. சட்டங்களாலும் நிறுவனங்களாலும் பிரச்சி னைகளை தீர்க்க முடியுமானால் இலங்கை எப்பொழுதோ சொர்க்க பூமியாகி இருக்கும். சட்ட ரீதியான அதிகாரப் பரவலாக்கல் மூலம் தான் ஓரளவு பயனைப் பெறலாம்.

மக்களின் மனங்களில் மாற்றம் ஏற்பட்டால் தான் பிரச்சினைக்குச் சரியான தீர்வை எட்ட முடியும். இலங்கை இராணுவத்தினரை 'சிங்கள கொலையாளி'களாகவே தமிழ் மக்கள் பார்க்கிறார்கள். அந்த நிலைமை மாற வேண்டும். கடந்த ஐம்பது வருடங்களாக எமது அரசியல் வாதிகள்தான் மக்களின் மனதில் துவேஷத்தை அதிகமாக வளர்த்தார்கள்.

**சுடர் ஒளி :** ஓர் இனம் தனது பெருமையைப் பேண முயல்வது தவறு என்கிறீர்களா?

**மிலிந்த :** அப்படியில்லை ஒவ்வொருவரும் தத்தமது இனம், மொழி, கலாசாரம் முதலா னவை தொடர்பாக பெருமைப்பட வேண்டி யதுதான், அதில் தவறில்லை. அவற்றை பேணிப் பாதுகாப்பதும் அவசியம். ஆனால் அவற்றை அடிப்படையாக வைத்துக் கொண்டு பிரச்சினைகளை ஆரம்பிக்கக் கூடாது. தேசிய மட்ட விடயங்களில் ஒரு நாட்டு மக்களாகச் செயற் பட வேண்டிய கடப்பாடு எமக்கு உண்டு.

**சுடர் ஒளி :** அப்படியானால் என்ன தான் செய்ய வேண்டும் என்கிறீர்கள்?

**மிலிந்த :** இவற்றை எல்லாம் நினைத்த உட னேயே செய்து விட முடியாது. இது எமக்கு கிடைக்கும் கடைசி சந்தர்ப்பம். இதைச் சரியாகப் பயன்படுத்தாவிட்டால் சில வேளை நாடு துண்டாடப்படும் அபாயம் உண்டு. எனவே தமிழ் பேசும் மக்களின் மனதில் நம்பிக்கையை ஊட்டும் வகையில் அடுத்த ஆட்சி அமைக்கும் அரசாங்கம் செயற்பட வேண்டும். இராணுவத்தினரின் நிலைமையும் இதுதான்.

**சுடர் ஒளி :** இராணுவத்தினரின் அத்துமீறல்கள் பற்றி...?

**மிலிந்த :** அவர்கள் பெரும்பாலும் சரியான இராணு வப் பயிற்சி பெறாதவர்கள். அதனாலேயே பல அசம் பாவிதங்களுக்கும் காரணகர்த்தாக்களாக இருக்கிறார்கள்.

**சுடர் ஒளி :** பொதுவாக என்ன கூறுகிறீர்கள்?

**மிலிந்த :** உதட்டளவிலேயே இன்று பலர் செயற்படுகின் றனர். இதிலிருந்து விடுபட்டு சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரும் மனச்சாட்சிப் படி — நேர்மையாக செயற்படும் போதே நாட்டிலுள்ள பிரச்சினைகளை முற்றாகத் தீர்க்க முடியும்.

நேர்காணல்: ராலியா ஆதம்

# யாழ் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு

## "சாதி அடக்குமுறையின் உச்சக்கட்டம்"

தமிழ் சமுதாயத்தின் உயர் கல்வி நிறுவனமான யாழ் பல்கலைக்கழகம் சிறந்த தமிழ் இலக்கிய கர்த்தாவான டொமினிக் ஜீவாவை அவமதித்த செயல் சாதி அடக்குமுறையின் உச்சக் கட்டம் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

ஏனெனில், தாங்கள் செய்வது சரியா பிழையா என்பதைத் தீர்மானிக்க முடியாதவர்களல்லர் செனட்டிலும் கவுன்சிலிலும் இருப்பவர்கள்.

விஞ்ஞான ரீதியிலான விளக்கங்களுடன் விரிவுரையாற்றி பல்துறை விற்பனர்களை வெளிக் கொணரும் விவேகிகளுக்கு தாங்கள் செய்வது என்ன என்பது தெரியாமலா போய்விடும்?

தமிழ் மக்களின் உயர்ந்த விழுமியங்களையும், பாரம்பரியமான பண்பாடுகளையும் பார்முழுதும் வளர்க்க வேண்டிய யாழ் பல்கலைக்கழகம் தமிழ் மக்களுக்கே ஓர் சாபக்கேடான சாதிப்பாகுபாடு, ஒடுக்கு முறையை வளர்ப்பதில் கங்கணம் கட்டிக் கொண்டு நிற்கிறது. இது தமிழ் கூறும் நல்லுலகம் வெட்கித் தலைகுனியும் செயலாகும்.

ஓர் தொழிலதிபருக்கு கலாநிதிப்பட்டம் வழங்கி கௌரவிக்க முடியுமென்றால் "உலகம் அறிந்த இலக்கிய கர்த்தா"வுக்கு ஏன் இலக்கிய கலாநிதிப் பட்டம் வழங்க முடியாது? இதற்காக தொழிலதிபரைக் குறை கூறுகிறோமென்பதல்ல.

**ஜீவாவுக்கு யாழ் பல்கலை கௌரவப் பட்ட சர்ச்சை**

தமிழ் சமுதாயத்தில் சிறந்த உ தார்த்த வாதியும் இலக்கிய கர்த்தாவும், மூதறிஞருமான டொமினிக் ஜீவாவை அவமதித்த செயல் தமிழ் நெஞ்சங்களில் ஆறாதவடுக்களை ஏற்படுத்தி விட்டது.

அரை நூற்றாண்டுகளுக்கும் மேலாக சிங்கள இன வெறியர்களால் அடக்கி ஒடுக்கப்படும் தமிழ் இனம் தன் இனவிடுதலைக்காக இரத்தம் சிந்தி உயிரைத் தியாகம் செய்து போராடுகின்ற இந்த வேளையிலும் கூட, சாதிப் பாகுபாடும் அடக்கு முறை மேலாதிக்கமும் தொடர்ந்தும் இருந்து கொண்டே வரவேண்டும் என்று கனவு காண்பவர்களின் இழிசெயலை நினைத்து தமிழ் அன்னை இரத்தக் கண்ணீர் வடிக்கின்றாள்.

தங்களின் பதவியும் அந்தஸ்தும் காப்பாற்றப்பட வேண்டும் என்ற ஒரே காரணத்துக்காக மேல்மட்டத்தில் உள்ளவர்களின் காலைக் கையைப்பிடித்து காரியமாற்றும் இவர்கள் தாங்கள் உயர்ந்தவர்கள்(?) என்பதைச் சாதிப்பதற்காக நினைத்ததை எல்லாம் செய்து முடிக்கின்றார்கள்.

இதே உயர்ந்தவர்கள் தங்களின் மேலாதிக்கத்தை நிலை நிறுத்திக் கொள்வதற்காக, எழுபதாயிரத்திற்கும் அதிகமான அப்பாவித் தமிழ் மக்களையும், 17 ஆயிரத்திற்கும் அதிகமான போராளிகளையும் இழந்து தன் இனத்தின் விடியலுக்காக தொடர்ந்தும் போராடும் தமிழ் இனத்தின் உரிமைப் போராட்டத்திற்கே குழி பறிக்க மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்?


இத்தகையவர்கள் ஒன்றைமட்டும் உணர்ந்து கொள்ள வேண்டும். எந்த அடக்கு முறைக்கும் ஒடுக்கு முறைக்கும் எமதிராகத் தன் உயிரைத் துச்சமென நினைத்துப் போராடும் தமிழ் இனம், தங்கள் ஆதிக்க வெறியும் சாதித்திமிரும் இந்த மண்ணில் தொடர்ந்தும் இருக்க வேண்டும் என்ற முனைப்போடு செயல்படும் சாதி வெறியர்களுக்கு குடை, கொடி, ஆலவட்டம் பிடிக்குமா?

''சமநீதியோடு தான் சார்ந்த சமூகத்திற்கு சேவை புரிய வேண்டிய ஓர் பல்கலைக்கழகம் அநீதி விளைவிக்கின்றது'' என்றால் தமிழ் இனம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய வரலாற்றுத் தேவை உருவாகி விட்டதென்பதை சமூக நலனில் அக்கறை கொண்டவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

— அ. இந்திரராசா

# வாஜ்பாய் அரசுடன் மோத கருணாநிதி தயாராகிறாரா?

## "பொடோ" சட்டத்தை எதிர்க்க முடிவு


கருணாநிதி

தி.மு.க. தலைவர் மு. கருணாநிதியின் போக்கில் பெரிய மாற்றம் ஏற்பட்டிருப்ப தைக் கண்டு அரசியல் அவதானிகள் ஆச்ச ரியம் அடைகிறார்கள். மத்திய அரசாங் கத்தை எதிர்ப்பதற்கு அவர் தயாராகிறார் என்று அவர்கள் தெரிவிக்கிறார்கள்.

இந்திய மத்திய அரசில் தி.மு.க.வும் அங்கம் வகிக்கிறது. கருணாநிதி தமிழக முதலமைச்சராக இருந்தபோது அவருடைய குரலுக்கு மத்தியில் பெரும் மதிப்பு இருந்தது.

தமிழக சட்ட சபைத் தேர்தலில் தி.மு.க தோல்வி கண்டதையடுத்து கருணாநிதியும் ஒதுக்கப்பட்டு விட்டார். கருணாநிதியை ஒதுக்கி விட்டு அவருக்குக் கொடுத்த மதிப்பை மத்திய அரசு ஜெயலலிதாவுக்குக் கொடுக்கவில்லைதான். இருப்பினும் கருணாநிதியின் முக்கியத்துவம் படிப்படியாகக் குறைந்து விட்டது என்றே சொல்ல வேண்டியிருக்கிறது.

கருணாநிதி மீது ஜெயலலிதா பொலிஸாரை ஏவி விட்டபோது மத்திய அரசு பெரும் கோபம் கொண்டது உண்மைதான். ஆனால் அந்த சம்பவத்தை முன்னிலைப்படுத்தி ஜெயலலிதாவைப் பதவியிலிருந்து விரட்டிவிட தி.மு.க. கனவு கண்டது. ஆயினும் தி.மு.க அங்கம் வகிக்கும் மத்திய அரசு அது விடயத்தில் மிகவும் மந்தமான போக்கில் நடந்து கொண்டிருக்கிறது.

ஜெயலலிதாவைப் பதவியிலிருந்து விரட்ட உயர் நீதிமன்றம்தான் நடவடிக்கை எடுத்தது. ஜெயலலிதா முதலமைச்சர் பதவியை இழந்தார். ஆனாலும் அவருடைய பிடிக்குள்தான் தமிழக அரசு இருக்கிறது.

உள்ளாட்சித் தேர்தலில் பாரதீய ஜனதா கட்சிக்கு அதிக இடங்களைத் தந்து தமது கூட்டணியைத் தொடர்ந்தார் கருணாநிதி. ஆயினும் அ.தி.மு.க அணியை மூலையில் வீசிவிட முடியவில்லை.

அண்மைக்காலமாக கருணாநிதி புதுடெல்லிக்குச் செல்வதையும் நிறுத்தி விட்டார். பிரதமர் வாஜ்பாய், உள்துறை அமைச்சர் அத்வானி போன்றவர்கள் சென்னை வரும் வேளையில் அவர்களைச் சந்திப்பதையும் நிறுத்திவிட்டார்.

பிரதமர் வாஜ்பாய் சென்னைக்கு இறுதியாக வந்திருந்த போது "கருணாநிதி மீது தாக்குதல் நடத்திய பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமா என்று நிருபர்கள் கேட்டார்கள்.

"குற்றச் சாட்டுகள் உண்மையாக இருந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்" என்று வாஜ்பாய் கூறினார். இந்தப் பதில் தி.முக. வினரை ஆத்திரமடையச் செய்து விட்டது.

"அப்படியானால் தி.மு.க வின் குற்றச்சாட்டில் பொய்யும் இருக்கலாம்" என்று சந்தேகப்படுவது போன்ற தொனி அங்கே ஏற்படுகிறது தானே.

சென்னையில் பா.ஜ.க. தலைவர் ஜனா கிருஷ்ணமூர்த்தி இல்லத்தில் நடந்த திருமணத்தில் கலந்து கொள்வதற்காக வாஜ்பாய் வந்திருந்தார். கூடவே அத்வானியும் வந்தார்.

இந்தத் திருமணத்திற்கு கருணாநிதி செல்லவில்லை. தனது பேரப்பிள்ளைக்கு கடுமையான நோய் வந்ததால் திருமணத்திற்குச் செல்லவில்லை என்று கருணாநிதி முதலில் கூறினார். ஆனால் திருமணத்திற்கு அழைப்பு வரவில்லை என்று பின்னர் காரணம் கூறப்பட்டது.

கருணாநிதிக்கு விருப்பம் இருந்திருந்தால் அவர் விமான நிலையம் சென்று பிரதமரைச் சந்தித்திருக்க முடியும். எனவே மத்திய அரசிலிருந்து அவர் தாமாகவே ஒதுங்கத் தொடங்கியிருக்கிறார் என்பது புலப்படுகிறது.

மத்திய அரசின் மீது தமக்குள்ள வெறுப்பினை கருணாநிதி பத்திரிகையாளர்கள் மத்தியில் வெளிப்படுத்தியிருக்கிறார்.

கடந்த சில நாட்களாக உள்ளாட்சித் தேர்தல் பரபரப்பில் பா.ஜ. கட்சி உடன் கருத்து வேறுபாடு ஏற்பட்ட நிலையில் மத்திய அரசின் "பொடோ" சட்டத்தை எதிர்த்து தி.மு.க தலைவர் கருணாநிதி கருத்து வெளியிட்டார்.

மத்தியில் ஆளும் கூட்டணியில் இடம்பெற்றிருக்கும் சமதா, தெலுங்கு தேசம், சிவசேனா உட்பட சில கூட்டணிக் கட்சிகள் மத்திய அரசை விமர்சிப்பது போல தி.மு.கவும் துவங்கியிருக்கிறது.

குறிப்பாக ஆப்கான் மீதான அமெரிக்கத் தாக்குதலில் அப்பாவிக் குழந்தைகள் மாய்வதை நயமாகச் சுட்டிக்காட்டி. அப்போரில் மனிதாபிமானம் இல்லை என்பதைத் தெரிவித்த தி.மு.க தலைவர் கருணாநிதி தீவிரவாதிகளை ஒடுக்க மத்திய அரசு கொண்டு வந்திருக்கும் "பொடோ" அவசரச் சட்டம் சரியானது அல்ல என்று கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

முன்பு இந்திரா ஆட்சிகாலத்தில் அவசர நிலையை எதிர்த்ததையும் அதேசமயம் அவர் அமுல்படுத்திய 20 அம்சத் திட்டத்தை ஆதரித்ததையும் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இதன் மூலம் எதிர்வரும் 19ஆம் திகதி கூடும் லோகசபை கூட்டத்தில் "பொடோ" சட்டம் பற்றி விவாதம் வந்தால் அரசுக்கு எதிராக தி.மு.க குரல் கொடுக்கும் புதிய சூழ்நிலைக்கு கட்சியினரைத் தயார்படுத்தும் தொனி அவர் கருத்தில் இடம்பெற்றது.

நடந்து முடிந்த உள்ளாட்சித் தேர்தலை விரிவாக விளக்கிய அவர் தன் பேட்டியில் மேலும் கூறியதாவது:—

இந்தத் தேர்தல் ஜனநாயக முறைப்படி நடந்ததாக கூற முடியுமா?

வாக்குச் சாவடிகள் கைப்பற்றப்பட்டன. வாக்குகள் எண்ணும் இடங்களும் ஆக்கிரமிக்கப்பட்டன. வாக்குகள் செல்லாத வாக்குகளாக ஆக்கப்பட்டன. வாக்குகளை மாற்றினார்கள்.

மதுரையில் இரண்டு வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது பற்றி அறிவிக்கக் கூடாது என்று ரகளை, தடியடி நடந்துள்ளது. அதன்பிறகு தேர்தல் ஆணையத்திடமும் ஆளுனரிடமும் முறையிட்ட பிறகு இந்த முடிவு கிடைத்தது. எனவே ஜனநாயக முறைப்படியே தேர்தல் நடந்தது என்று சொல்ல முடியாது.

தமிழகத்திற்கு புதிய ஆளுநர் வேண்டுமென்று முதல்வர் பன்னீர் செல்வம் கடிதம் எழுதி இருக்கிறார். அதற்கு நான் வேண்டாமென்றா சொல்லப் போகிறேன்?

ராஜ்யசபா உறுப்பினர் தேர்தலுக்கு புதிய மசோதா கொண்டுவரப்படுகிறது.

எந்த மாநிலத்தில் இருந்து வேண்டுமானாலும் ராஜ்யசபா உறுப்பினர் பதவிக்கு நிற்கலாம் என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. அந்தந்த மாநிலங்களைச் சார்ந்தவர்கள்தான் அங்கே போட்டியிடவேண்டும். அந்தந்த மாநிலத்திற்கு உரியவர்கள்தான் அங்கிருந்து செல்ல வேண்டும் என்பது என்னுடைய கருத்து.

பொடோ சட்டத்தை எதிர்ப்பது தேசவிரோத செயல் என்று சிலர் கருத்து சொல்லியிருக்கிறார்கள்.

தீவிரவாதம் தடுக்கப்பட வேண்டும். அதே நேரத்தில் அதற்காக கொண்டுவரப்படுகிற சட்டம் துஷ்பிரயோகம் செய்யப்படக் கூடாது. எனவே லோக சபையில் விவாதம் நடத்தி திருத்தங்களை மேற்கொண்டு செயல்படுத்த வேண்டும்.

தவறானவர்கள் கைக்கு இந்தச் சட்டம் போனால் என்ன ஆகும் என்பதை யூகித்துப்பார்த்து பிறகு கொண்டு வரப்பட வேண்டும்.

இந்திரா ஆட்சிக் காலத்தில் 'மிசா' சட்டத்தை நாங்கள் எதிர்த்தோம். ஆனால் இந்திராகாந்தியின் 20 அம்சத் திட்டத்தை நாங்கள் ஏற்றுக் கொண்டோம்.

'மிசா' தவறாக பயன்படுத்தப்படுகிறது என்பதையும் எடுத்துச் சொன்னேன். அதுபோல இந்த சட்டத்தையும் பயன்படுத்தக்கூடாது என்பது எங்கள் எண்ணம். மிசாவை நாங்கள் எதிர்த்த போது மார்க்சிஸ்ட் கட்சி எதிர்த்தது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மிசாவை ஆதரித்தது.

பஞ்சாயத்து தலைவர்களை நீக்கும் அதிகாரம் கலெக்டர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த அதிகாரத்தை ரத்துச் செய்ய வேண்டுமென்ற கருத்து உள்ளது.

ராஜிவ்காந்தி கொண்டு வந்த பஞ்சாயத்து சட்டம் பற்றி நான் விரிவாக எதுவும் சொல்ல விரும்பவில்லை. அப்போதே மாநில அரசுகளின் கருத்துக்களை கேட்டபோது அதில் உள்ள பல குறைபாடுகளை நாங்கள் சுட்டிக்காட்டி காமராஜர் காலத்தில் இருந்த அதே முறைதான் இருக்க வேண்டும் என்று சொன்னோம். தொடர்ந்து அதைத்தான் வலியுறுத்தி வருகிறோம். இதைத் தவிர அச்சட்டத்தின் ஒவ்வொரு பிரிவாக எடுத்து விவாதிக்க நான் இப்போது விரும்பவில்லை.

பின்லேடனுக்கு எதிரான போரில் அப்பாவிகள் பாதிக்கப்படக்கூடாது என்று சொல்லியிருக்கிறேன். அமெரிக்காவின் நடவடிக்கையை இந்திய அரசு ஆதரிக்கிறது.

மத்திய அரசின் வெளிநாட்டுக் கொள்கையை நாங்கள் ஆதரிப்பவர்கள்தான். அதற்காக அப்பாவி மக்களும் குழந்தைகளும் ஆப்கானில் கொல்லப்படுவதை அங்கீகரிக்க முடியாது.

—இவ்வாறு கருணாநிதி கூறியுள்ளார்.

கருணாநிதியின் இந்தக் கருத்துகள் பிரதமர் வாஜபாய் மீது அவருக்கு ஏற்பட்டிருக்கும் வெறுப்பைப் புலப்படுத்தவதாக இருக்கிறது.

ஆனால் மத்திய அரசுடன் தாம் காரசாரமாக மோதினால் அது ஜெயலலிதாவுக்கு மேலும் நன்மைகளைத் தேடித்தந்து விடும் என்பது அவருக்குப் புரியும். எனவே மிகவும் அவதானமாகவே தமது கணைகளை அவர் வீசுவார் என்பது உறுதி.

—கதாசி

## பித்தன் பதில்கள்

வசந்தன், வவுனியா.

கே : தற்காலப் பெண்களின் நாகரீக உடை அலங்காரத்தால் இலாபம் யாருக்கு, நஷ்டம் யாருக்கு?

ப : பருகும் விழிகளுக்கு இலாபம் உருகும் உடலுக்கு நஷ்டம்.



பேரின்பராஜா, நிலாவெளி.

கே : பித்தா!.. ஜே.வி.பி. கூறியது போல யானை, புலி, நரி சேர்ந்து நாட்டை ஆட்சி செய்தால் எப்படி இருக்கும்.

ப : யானை போன்ற தலைமை, புலி போன்ற தளபதி, நரி போன்ற மந்திரி இருந்தால் வெற்றி கொள்ள முடியாத அரசு நிலவும்.

கலாவதி, மருதானை.

கே : கொழும்பில் புலிகள் பலர் ஊடுருவி விட்டார்களாமே?

ப : இனிக் கொழும்பில் சிங்களவரும், புலிகளும் தான் என்ற பார்வையில் பொலிஸ் தேடுதல்கள் தீவிரமாகவுள்ளன. அதற்கான அறிவிப்பு இது.

ஜெயக்குமார், வவுனியா.

கே : எய்தவனும், அம்புமிருக்க நின்ற நிலத்தை நோவது போன்றதல்லவா அமெரிக்காவின் செயல்.

ப : மக்களின் வேதனை, இரண்டு கழுதை களையும் பொதி சுமக்க வைக்கும்.

சொரூபன், வவுனியா.

கே : வவுனியாவில் இடம்பெற்றுள்ள கட்சிகளுக்கிடையிலான முறுகல் நிலை எப்படி?

ப : தேர்தல் சூடு என்பது இது தான்.

க. வினோத்குமார், திருகோணமலை.

கே : பித்தா...! சமையல் செய்வது போல் எனக்கு அடிக்கடி கனவு வருகிறதே?

ப : கையைக் கொடுங்கள் "அட்வான்ஸ்" திருமண வாழ்த்துக்கள்.

நிசால்தீன், வாழைச்சேனை.

கே : முதலில் காதல் வலையில் சிக்கிக் கொள்வது ஆண்களா? பெண்களா?

ப : வலைவிரிப்பவர்கள் ஆண்கள் வலையில் வீழ்பவர்கள் பெண்கள் வசப்படுகிறவர்கள் ஆண்கள் வசப்படுத்துகிறவர்கள் பெண்கள்.

குருபரன், கருநாட்டுக்கேணி.

கே : வாழ்க்கை பற்றி ஒரு சில வரிகள்

ப : நிறைவடைந்து போன தொடர்.

ராஜேஸ்வரி, அக்கரைப்பற்று.

கே : காதலித்து ஏழை என்று அறிந்ததும் குளிர்காய்ந்து விட்டு தப்பிவிடும் ஆண்கள் பற்றி?

ப : பாலைவனத்தில் கட்டி, கழுகுக்கு இரையாக்கப்பட வேண்டியவர்கள்.



நிமலன், செங்கலடி.

கே : மலர்ந்த மலர் செடியில் (இருப்பது) அழகா? குமரியின் கூந்தலில் (இருப்பது) அழகா?

ப : திருமணம் முடித்த பெண் சொந்த வீட்டில் இருப்பது அழகா? புகுந்த வீட்டில் இருப்பது அழகா?

ரியாய்தீன், வாழைச்சேனை.

கே : எனது கனவில் ரம்பா, ஜோதிகா, சிம்ரன் மூவரும் ஒரே நேரத்தில் வருகிறார்கள் எப்படி சமாளிப்பது?

ப : சமாளிக்க முடியாது. சமாதியாக வேண்டியது தான்.

சொர்ணம், மருதானை.

கே : பித்தனே...? நீங்கள் பொறுமை இழப்பது எப்போது?

ப : வேலையால் களைத்து வர மனைவி முணு முணுக்கும் போது.



எஸ்.கே.அரசி, இணுவில்.

கே : எனது நண்பி பிரிந்து செல்கிறாள் பிரிவுத் துயரை மறக்க உமது அட்வைஸ்?

ப : உருவங்கள் பிரிந்தாலும், நினைவுகள் மாறாதிருக்கட்டும்.

சிவா, வெள்ளவத்தை.

கே : பிரதமரை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதல் பலித்திருந்தால்?

ப : அதுதான் அவரே சொல்லி விட்டாரே நாடு ஒரு நல்ல "ஜனநாயக கனவானை" இழந்திருக்கும் என்று.

சுப்பிரமணியம், கோண்டாவில்.

கே : யாழ். தேர்தல் களம் பற்றி?

ப : ஊர் படுகின்ற பாட்டில் ஊமையன் விசிலடித்த கதைதான்.

சுமதி, மன்னார்.

கே : நனைத்துச் சுமக்கிறதுக்கு நல்ல உதாரணம்?

ப : பொ.ஐ.மு – ஜே.வி.பி கூட்டு.

ஏ.எல்.எம்.றியாஸ், மருதமுனை.

கே : 'பூவெல்லாம் உன் வாசம்' படத்தில் ஒரு பாடலின் மூலம் தமிழ்த் திரையுலகிற்குத் தலை காட்டிய உலக அழகி யுக்தா முகி மும்பைக்கு மூட்டைகட்டி விட்டாரா?

ப : இல்லை. முன்னாள் நடிகை ஜெயப்பிரதா இயக்கும் 'கிளாஸ்மேட்ஸ்' படத்தில் கதாநாயகியாக நடிக்கப் போகிறார்.

என். மிலான், சண்டிலிப்பாய்.

கே : குற்றவாளிகள் தப்பி விடுகிறார்களே நம் நாட்டுப் பொலிஸார் என்ன செய்கிறார்கள்?

ப : காசுவாங்கி வண்டி வளர்த்தவர்கள் கடையங்களைக் காப்பாற்றவும் வேண்டும் தானே.



# படையினரை திசை திருப்ப புலிகள் கையாண்ட தந்திரம்

ஓயாத அலைகள்
வெளிவராத தகவல்கள்
4

கிழக்கில் பெரிய தாக்குதல் ஒன்றை நடத்தி படையினரின் முழுக் கவனத்தையும் கிழக்கின் பக்கம் திருப்பலாம் என்று பிரபாகரனின் முக்கிய தளபதிகள் அவருக்கு ஆலோசனை கூறினராம். ஆனால் பிரபாகரன் அதனை ஏற்கவில்லை.

அதற்குப் பதிலாகக் கிழக்கில் தமது முக்கிய தளபதிகளை இறக்கி ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை வீழ்த்த அவர் திட்டமிட்டார்.

## கிழக்கில் தாக்குதல் நடத்துவது போல் பாசாங்கு

அதன்படி தமது முக்கிய தளபதிகளை ஒரு சிறு தொகை வீரர்களுடன் கிழக்குக்கு அனுப்பி, அந்தத் தளபதிகள் கிழக்கில் நிலை கொண்டிருப்பது குறித்தும், அங்கு பெரும் தாக்குதல் நடவடிக்கைக்கு அவர்கள் தயாராகி வருவது குறித்தும் செய்திகளை வெளியே கசியவிட்டார். இதன் மூலம் கிழக்கில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையான படைகளை தொடர்ந்து பேணிக் கொண்டு, அங்கு எந்நேரமும் ஒரு பெரும் தாக்குதலை எதிர்பார்த்து 'டென்ஷனுடன்' இருக்கும் நிலையை அரசுத் தரப்புக்கு அவர் ஏற்படுத்தினார்.

அதே சமயம், புலிகளின் தாக்குதல் இலக்கு கிழக்கின் பக்கம் திரும்பியிருப்பதாக அரசின் தரப்புக்கு ''பாவ்லா'' காட் டிக் கொண்டு வன்னியில் ஒரு பெரும் பாரிய தாக்குதலுக்குத் தயாரானார்.

முல்லைத்தீவுத் தாக்குதலுக்கு சில நாட்களுக்கு முன்னர்வரை திருகோணமலையிலிருந்து கொண்டு அங்கு பெரும் தாக்குதலுக்குத் தயாராவது போல காட்டிக் கொண்டிருந்த புலிகளின் முக்கிய தளபதிகளில் ஒருவரான சொர்ணமும் அவரின் படைப்பிரிவினரும் கூட, முல்லைத்தீவுத் தாக்குதலுக்கு சற்று முன்னர் — இறுதி நேரத்தில்தான் வன்னிக்கு இரகசியமாக அழைத்து வரப்பட்டனர்.

## ஏற்பாடுகளை பிரபா நேரில் கவனித்தார்

மணலாறு முகாம் மீது அதற்கு முந்திய ஆண்டு ஜூலையில் நடத்தப்பட்ட பெரும் எடுப்பிலான தாக்குதல் நடவடிக்கை பற்றிய தகவல், முன்னரே அரசுப்படைகளுக்கு நேரத்துடன் கிடைத்துவிட்டதால் அத்தாக்குதல் நடவடிக்கையில் தனக்குக் கிடைத்த பெரும் தோல்வி என்ற பாடத்தினால் இம்முறை சகல தாக்குதல் முன்னேற்பாடுகளையும் பிரபாகரன் தமது நேரடிக் கவனிப்பிலேயே வைத்துக் கொண்டார்.

புலிகளின் துணைத்தளபதி பால்ராஜ் தலைமையில் தான் தாக்குதல் நடத்தப்பட்டது. சொர்ணம், கடற்புலிகளின் தளபதி சூசை போன்றோரின் தலைமையில் சிறப்புப் படையணிகள் தாக்குதலுக்கு உதவின. கரும்புலிகளின் அணிதான் ஊடுருவும் முதல் அணியாகப் பாய்ந்தது.

## அழித்தொழிப்பு யுத்தம்

முல்லைத்தீவு முகாம் மீதான போரை வெறும் தாக்குதல் யுத்தமாகப் பிரபாகரன் திட்டமிடவில்லை. பதிலாக அதனை ஓர் அழித்தொழிப்பு யுத்தமாகவே அவர் திட்டமிட்டார்.

ஒரு முகாமை அல்லது ஒரு படையணியைத் தாக்கும்போது அந்த முகாமுக்கு அல்லது படை அணிக்கு ஏனைய முகாம்களிலிருந்து அல்லது நிலைகளிலிருந்து வரும் உதவிகளைத் தடுக்கச் செய்வதற்காக முன்னேற்பாடாகச் செய்யும் நடவடிக்கைகளை ''கட்—அவுட்'' என்று பொதுவாகக் குறிப்பிடுவதுண்டு.

முல்லைத்தீவு முகாமுக்குத் தரைப் பாதை வழியாகவோ அல்லது கடற்பாதை வழியாகவோ வரக்கூடிய உதவிகளைத் தடுப்பதற்கு உரிய 'கட்—அவுட்' ஏற்பாடுகளைப் போட்டு விட்டுத்தான் முகாமின் மீது கை வைத்தார்கள் புலிகள்.

ஆகாய வழியாக வரக்கூடிய உதவிகளை அல்லது வந்திறங்கக் கூடிய மீட்பு அணிகளை முறியடிப்பதற்கான திட்டம் குறித்தும் புலிகள் சிரத்தை எடுத்ததாகக் கூறப்படுகின்றது.

## ஆயுத்த களம் இடம் மாறியது

இதே சமயம் 1996 ஜூலை மாத நடுப்பகுதியில் கிளிநொச்சி நகரைக் கைப்பற்றுவதற்கான தாக்குதல் நடவடிக்கை ஒன்றை ஸ்ரீலங்காத் துருப்புக்கள் ஆரம்பிக்கக் கூடும் எனப் புலிகள் எதிர்பார்த்தனர். அதனால் கிளிநொச்சிப் பகுதி யில் தற்பாதுகாப்புக்குத் தேவையான ஒரு சில அணிகளை மட்டும் விட்டு விட்டு, முல்லைத்தீவுத் தாக்குதலுக்கான தனது ஆயுத்தக் களத்தை கிளிநொச்சியின் தெற்கேயும், தென் கிழக்கேயும் உள்ள வேறு காட்டுப் பகுதிகளுக்கு மாற்றிவிட்டனர் என்றும் கூறப்படுகிறது.

இவ்வளவு ஏற்பாடுகளையும் செய்து கொண்ட புலிகளின் தலைவர், தாக்குதலுக்கு முன்னர் அரசுப்படைகளின் கவனத்தைத் திசை திருப்ப வைக்கும் வேறு நடவடிக்கைகளையும் எடுக்கத் தவறவில்லை.

## மாயைத் தோற்றம்

ஜூன் மாத இறுதியிலும், ஜூலை மாத



முற்பகுதியிலும் ஆனையிறவுக்கு அப்பாலும் பூநகரிப் பகுதியிலும் பெரும் எண்ணிக்கையான விடுதலைப் புலிகளைக் குவித்திருப்பது போன்ற மாயைத் தோற்றத்தை அவர் ஏற்படுத்தினார்.

தேவையில்லாமல் பல நூற்றுக்கணக்கான புலி வீரர்கள் அப்பகுதியில் ஆரவாரத்துடன் நடமாடினர், வாகனங்கள் அப்பகுதியில் பெரும் ஏற்பாடு ஒன்றுக்குத் தயாராவது போல ஓடித்திரிந்தன. தமது பாதுகாப்பு முன்னணிக் காவலரண்களில் நிலை கொண்டிருந்த படைகளுக்குப் புலனாகக் கூடிய வகையில் பல நூற்றுக்கணக்கில் பிரேதப் பெட்டிகள் அப்பிரதேசத்துக்குக் கொண்டு வரப்பட்டு, இறக்கி வைக்கப்பட்டு அங்கும் இங்கும் மாற்றி அடுக்கி வைக்கப்பட்டன.

## பாதுகாப்பற்ற இடத்தில் முல்லைத்தீவு முகாம்

தாக்குதலுக்கு இலக்காகி வீழ்ந்த முல்லைத்தீவு முகாம் கடற் போக்குவரத்தைப் பொறுத்தவரை கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசத்தில் அமைந்திருந்தது என்றாலும் கூட—

பாதுகாப்பாக — முகாம் ஒன்றைப் பேணக்கூடிய — வலிமையான இடத்தில் அது அமைந்திருக்கவில்லை. சுருக்கமாகக் குறிப்பிடுவதானால் மிக ''வீக்'' ஆன இடத்தில் அந்தத் தளம் அமைந்திருந்தது.

தளத்தின் கிழக்கு எல்லை — கடல், மேற்கு எல்லை — நந்திக் கடல் என்ற பரந்த பரப்பு; வட எல்லை — வட்டு வாகல் கிராமம்; தெற்கெல்லை — புதர்க்காடுகள் பரந்து காணப்படும் சிலாவத்தைப் பிரதேசம்.

புலிகளின் அதிரடித் தளத்தைச் சுற்றிய மேற்படி எந்தப் பிரதேசத்திலும் படைகள் பின்வாங்கிச் சென்று நிலை கொள்ளவோ, அங்கு ஒருங்கிணைந்து தம்மைத் தயார் படுத்தவோ, பதிலடி கொடுக்கவோ, பாதுகாப்பாக நின்று போராடவோ இயற்கை அரண் நிலைகள் ஏதுமில்லை.

1993 நவம்பரில் பூநகரி முகாம் மீது விடு தலைப்புலிகள் ''தவளைப்பாய்ச்சல்'' பெருந் தாக்குதலைத் தொடுத்த போது முகாமிலி ருந்து பின்வாங்கிச் சென்ற பெருமளவு படையினருக்கு பூநகரிப் பிரதேசத்தில் காணப்பட்ட பெரும் மணற்குன்றுகளும், பனை வடலிகளும் அவர்கள் தப்பிச் செல்ல சாதகமான சூழலைப் பெற்றுத்தந்தன.

ஆனால் அந்த வசதி ஏதுமற்ற — பொருத்தமற்ற சூழலில் அமைந்திருந்த முல்லை முகாம் மீது — 1996 ஜூலை 18ஆம் திகதி அதிகாலை 1.30 மணிக்கு அமாவாசைக் கால இருட்டு கவ்வியிருந்த போது விடுதலைப்புலிகளின் ''ஓயாத அலைகள்'' ஓங்கி அறையத் தொடங்கின.

(வளரும்)

## முகாமின் பாதுகாப்பு முன்னேற்பாடுகள்

மூன்றாம் பிறை வடிவத்தில் நந்திக்கடல் நீரேரி முல்லைத்தீவு முகாமைச் சூழ்ந்து அரண் செய்திருந்தது. அதன் எஞ்சிய பகுதியை பெருங்கடல் சூழ்ந்து காணப்பட்டது.

வங்கக் கடலும் நந்திக்கடல் நீரேரியும் முல்லைத்தீவு முகாம் அமைந்திருந்த பகுதியை ஆமையை அதன் மேலோடும் கீழ் ஓடும் பொத்திப் பாதுகாத்து வைத்திருப்பதுபோல் பாதுகாத்திருந்தன.

இராணுவத் தளத்தின் தென்புறப் பகுதியில் மட்டும் ஒரு தனி வாசல். எனினும் அது கூட ஒரு படையணி சுலபமாக ஊடுருவிச் செல்ல முடியாத அளவுக்கு சதுப்பு நிலமாகவும் வெட்ட வெளியாகவும் அரண் செய்யப்பட்டிருந்தது.

சுமார் ஐந்து சதுரமைல் பரப்பில் முகாம் வியாபித்திருந்தது.

முகாமின் வடமேற்குப் பகுதியான வட்டு வாகல் பாலத்திலிருந்து தளத்தின் தென்கிழக்குப் பகுதியான சிலாவத்துறை வரையான தூரம் ஏறக்குறைய 3 மைல்கள். பெருங்கடலிலிருந்து நந்திக்கடல் நீரேரி வரை ஏறக்குறைய ஒன்றரை மைல் தூர அகலத்தைக் கொண்டதாக முல்லைத்தீவுத் தளம் அமைந்தது.

### பூகோள அமைப்பில் பாதுகாப்பு மிக்க இராணுவத் தளம்

இட்டுமட்டாக நீள அகலத்தைக் கூறுவதாயின் நீளம் 2 ஆயிரத்து 900 மீற்றர். அகலம் ஆயிரத்து ஐந்நூறு மீற்றர். சுற்றளவு சுமார் 8 ஆயிரத்து 500 மீற்றர்.

பெருங்கடல் — நீரேரி — வெட்ட வெளிகள் — சதுப்பு நிலங்கள் போன்றவை ஊடுருவலுக்கு அல்லது ஒரு படை நகர்வுக்குத் தடையானவை. எனவே முல்லைத்தீவு முகாம் அமைந்திருந்த தளப் பிராந்தியப் பூகோள அமைப்பு அதன் பாதுகாப்புக்குப் பெருந்துணை நின்றது.

இவ்வாறு இயற்கைப் பாதுகாப்பு நிறைந்த இந்தத் தளத்துக்கு மேலும் பாதுகாப்பை வலுப்படுத்தும் விதத்தில் பல முன்னேற்பாடுகளை பாதுகாப்புப் படைகள் செய்திருந்தன.

தளப் பகுதியைச் சுற்றி மண் அணையுடன் கூடிய ஒரு தடுப்பு வேலி. அந்த வேலியில் மண் அணைக்கு மேலதிகமாக சிலிப்பர் கட்டைகள், மணல்சாக்குகள், மரக்குற்றிகள், கொங்கிறீட் கற்கள் என இத்தியாதி வலுவான பொருள்கள் அடுக்கப்பட்டிருந்தன.

இந்த அரண் நீளத்துக்கு ஐம்பது யாருக்கு ஒன்றாக கண்காணிப்பு நிலைகள். அவற்றிலிருந்து பார்த்தால் முகாமுக்கு வெளியே நடப்பவை அப்பட்டமாகப் புலனாகும்.

தவிரவும், முகாமுக்குள் நடப்பது வெளியிலிருந்து பார்த்தால் தெரியாமல் அரண் நீளத்துக்கு பனை ஓலைகள், தகரங்கள் போன்றவற்றால் மறைப்பு.

இந்த வெளிப்புற அரணுக்கு அல்லது வேலிக்கு உள்ளே சுமார் நாற்பது ஐம்பது மீற்றர் தூரம் வரையான பிரதேசம் பற்றைகள் வெட்டப்பட்டு கட்டடங்கள் அகற்றப்பட்டு திறந்த வெளியாகக் காட்சியளித்தது.

முகாமின் வெளி அரணைத்தாண்டி எவராவது உள்ளே நுழைந்தால் முகாமின் எப்பகுதியில் இருந்து பார்த்தாலும் தெரியக்கூடியதாக இந்த ஏற்பாடு.

இந்தத் திறந்த வெளிப்பகுதியில் பெருமளவு மிதிவெடிகள், கிளைமோர் கண்ணிகள் புதைக்கப்பட்டிருந்தன. சில இடங்களில் நிலத்திலிருந்து சுமார் அரை அடி உயரத்துக்குக் கட்டைகள் நடப்பட்டு முட்கம்பிப் பாத்திகள் அமைக்கப்பட்டிருந்தன. முன் அரணைத் தாண்டி உள்ளே வரக்கூடியவர்கள் எந்த வகையில் ஊர்ந்து செல்வதையும் இந்த முட்கம்பிப் பாத்திகள் தடுத்துவிடும்.

மேலும் தடுப்பு வேலி எங்கும் மின்குமிழ்கள் மற்றும் 'சேர்ச் லைட்'.

இரவு வேளையில் எந்த அசைவு ஏற்பட்டாலும் முகாமைச் சூழ்ந்த பிரதேசத்தை ஜெகஜோதியாக்கக்கூடிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

முன்னணிக் காவலரண்களைச் சாமர்த்தியமாகத் தாண்டிக்கொண்டு உள்ளே நுழைந்தாலும்கூட மேலே செல்லமுடியாமல் தடுக்கும் வகையில் உள்ளே வளையம் வளைய மாக பாதுகாப்பு ஏற்பாடுகள். இவ்வாறு சுமார் நான்கு, ஐந்து வளையங்கள்.

இவற்றில் ஒரு வளையம் வாகனக் கண்ணிகள் புதைக்கப்பட்ட வளையமாகக் கூட அமைக்கப்பட்டிருந்தது என்றால் முகாமின் பாதுகாப்பு வலுவை ஊகித்துக்கொள்ளுங்கள்.

முகாமுக்குள் இருந்த ஒவ்வொரு வீடும் கட்டடங்களும் படையினரின் நிலைகளாகக் காட்சி தந்தன.

இதுதவிர தளத்தின் மையப் பகுதியில் இருந்த ஆட்லறி ஏவுதளம், பிரதான முகாம் தலைமையகம் போன்றவை அணுகமுடியாத அளவுக்கு வேலிக்கு மேல் வேலியாகப் பாதுகாப்பு வளையங்கள் அமைக்கப்பட்டு அதியுயர் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்தன.

முகாமுக்குள் அமைக்கப்பட்டிருந்த பல்வேறு — உயர்ந்த — காவற்கோபுரங்களிலிருந்து பார்த்தால் முகாமின் உட்பகுதியும் தளத்தின் வெளி வேலிக்கு அப்பாற்பட்ட பெரும் பிரதேசமும் துல்லியமாகக் கண்ணுக்குப் புலப்படக்கூடியதாக இருக்கும்.

அத்துடன் பாதுகாப்பு வளையம் ஒவ்வொன்றைச் சூழவும் கம்பிச் சுருள் இழுத்து தடைவலை பின்னப்பட்டிருந்தது.

இவ்வாறு தளப் பிரதேசத்தில் இயற்கை அன்னை கொடுத்த பாதுகாப்புடனும் தாம் மேற்கொண்டு அமைத்த பல்வேறு பாதுகாப்பு முன்னேற்பாடுகளுடனும் முகாமிலிருந்த படை அதிகாரிகள் திருப்தி அடைந்துவிடவில்லை.

தளத்தின் வெளி வேலிக்கு அப்பால் ரோந்துக்குழுக்களையும் அவதானிப்பு அணிகளையும் ரோந்து சுற்றவிட்டு தளத்தின் பூகோளச் சூழலை படையினர் கண்காணித்த வண்ணம் இருந்தனர்.

முகாமை வேவு பார்க்கக்கூடிய உளவாளிகளை முகாமுக்கு வெளியே வைத்தே தீர்த்துக்கட்டும் திட்ட ஏற்பாடு இது.

அதே சமயம் முகாமிலிருந்து தொலை தூரம் வரை தாக்கக்கூடிய 122 எம்.எம். ஹொவிட்ஸர் ஆட்லறிப் பீரங்கிகள் உட்படப் பல கனரக ஆயுதங்கள் கவச வாகனங்கள் போன்றவையும் முகாமிலிருந்தன.

இத்தகைய வலுமிக்க முகாமே துடைத்தழிக்கப்பட்டது.

# அஸ்தமனத்தில் ஓர் உதயம்

— குமுதா சந்திரசேகரம்



அலுவலகம் வந்தடைந்த வினோதாவை ஒரு முறை நோக்கிய ஆகாஸ் பெருமூச் சொன்றை விட்டவனாக அலுவலக வேலையில் முனைந்திருந்தான். இருந்தும் அவன் மனம் வேலையில் முனைய மறுத்தது. தினமும் வெள்ளைச் சாறியுடனும், வாடிய முகத்துடனும், அலுவலகம் வரும் வினோதாவை காணும் போதெல்லாம் ஆகாசின் மனம் அவளது நிலையினை நினைத்து வருந்தியது. இளவயதில் திருமண பந்தத்தில் இணைந்து, இன்று வாழா வெட்டியா, பட்டமரமாக நிற்கிறாள். ஆம் பெற்றோரின் வற்புறுத்தலுக்கு இணங்க அவளது மாமன் மகனை பதிவுத் திருமணம் செய்து கொண்டாள் வினோதா. பதிவுத் திருமணம் நடந்த மறுநாள் எதிர்பாராத விபத்து ஒன்றில் சிக்கி மாண்டு விட்டான் அவள் வருங்காலக் கணவன்.

அன்று தொட்டு வினோதா பூவை மறந்தாள். பொட்டை இழந்தாள், ஏன் வண்ண வண்ணமாக உடுத்தும் சாறிகளையும் மறந்தாள். வீட்டில் எவ்வளவோ தடுத்தும் அவள் வெள்ளைச் சாறி கட்டுவதை நிறுத்தவில்லை. எந்த விடயத்திலும் நாட்டம் இல்லாது நடைப்பிணமாகவே நடமாடினாள். இந்த வேளையில் தான் அவள் வேலை செய்யும் அலுவலகத்தில் இன்ப துன்பங்களில் பங்கு கொள்ளும் உற்ற இனிய நண்பனாக ஆகாஸ் கிடைத்தான். ஓய்வு வேளைகளில் தனது உள்ளத்தில் ஏற்படும் வேதனைகளையெல்லாம் ஒவ்வொன்றாகச் சொல்லி ஆறுதல் அடைவாள் வினோதா.

''என்ன ஆகாஸ் பலத்த யோசனை எந்தக் கோட்டையைப் பிடிக்க இந்தத் திட்டமோ? என்ற வினோதாவின் குரல் கேட்டு சிந்தனைச் சிறையிலிருந்து விடுபட்டான் ஆகாஸ். வினோதா நான் எந்தக் கோட்டையையும் பிடிக்க திட்டம் போடல்ல எல்லாமே எங்கட பெண்களப் பற்றித்தான் யோசிக்கிறன் என்றான் அவன். எதைச் சொன்னாலும் தான் பிடிக்கிற முயலுக்குத் தான் மூன்று கால் என்கிற மாதிரி தங்கட பிடிவாதத்தில இருந்து விட்டுக் கொடுக்க மாட்டாங்களே''என்றும் அவன் சொன்னான். ''யார் ஆகாஸ் பிடிவாதம் பிடிக்கிறாங்க'' என்றாள் வினோதா. ''ஏன் நீங்க ஒருத்தியே உதாரணத்துக்கு போதுமே. ஏன் வினோதா நீங்க வெள்ளை சாறி கட்டணும் நானும் எவ்வளவோ எடுத்து சொல்லியும் செவிடன் காதிலை ஊதுகின்ற சங்கு மாதிரி வாங்காது, சின்னப் பிள்ள மாதிரி அடம் பிடிக்கிறீங்களே ஏன்'' என்றான் ஆகாஸ். பாசம் நிறைந்த கண்டிப்புடன்.

'இல்ல ஆகாஸ் இளவயதிலேயே திருமணப்பந்தத்தில் இணைய வைத்த இறைவன் என்னை வாழ வைக்காது உடனே அவரை என்னிடமிருந்து பறித்து என்னைப் பட்ட மரமாக்கிட்டான் இனி... என்ன... ஆகாஸ் என் வாழ்க்கை கானல் நீர் தான்' என்றாள் வினோதா வேதனைக் கண்ணீருடன். ''அப்படிச் சொல்வாதே வினோதா எத்தனை நாட்களுக்குத் தான் ஒரு பெண் தனிய இருந்து... காலம் கழிப்பது...ம்... அவளுக்கென்று ஒரு துணை பாதுகாப்பு வேண்டாமா? சொல்லுங்க, நீங்களும் தாய் தகப்பனை நம்பி எத்தன நாட்களுக்கு தனிய இருக்கப் போறீங்க? எங்கட நாட்டுச் சூழநிலை உங்களுக்கு நல்லாவே தெரியும். அப்படியிருக்கும் பொழுது உங்களுக்கென ஒரு துணையை ஏன் சேர்க்க கூடாது? ஏன் நீங்க மறுமணம் செய்து கொண்டாலென்ன வினோதா''என்றான் ஆகாஸ்.

''ஆனால் பதிவுத் திருமணம் எழுதிய உடனேயே புருசனை அழிச்சிட்ட பிசாசு, தோஷக்காரி, இன்று வரை என்னை ஊர் பேசிக் கொள்வதையே என்னால தாங்கிக்க முடியல்ல. அப்படியிருக்கும் போது இன்னும் ஒருமுறை இந்த நிலைக்கு ஆளாக நான் விரும்பல்ல ஆகாஸ். என் மனசுபட்ட வேதனையும் வலியும் எனக்குத் தான் தெரியும். வெளியில இருந்து பாக்கிறவங்களுக்குத் தெரியாது. என்ர உள்ளம் துன்பத்தால அழுது கொண்டிருக்கு ஆனால் என்ர உதடுகள் ஊருக்காக மட்டும் சிரிக்கிறது'' என்றாள் வினோதா அழுத கண்ணீருடன்.

''அழாத வினோதா, மற்றவங்களுடைய பழிக்கும் பாராட்டுதலுக்கும் காது கொடுத்தால் எப்படியான மகத்தான காரியம் எதுவானாலும் செய்ய முடியாது. இஞ்ச பாரு வினோதா 'விழல்ல ஒரு காலமும் நெல்லு விளையாது ஆனால் நெல்லை விளைவிக்கின்ற அந்தப் பயிரை அதால அழிக்கத்தான் முடியும்' ஏன் வினோதா சாதாரண பூச்சி இருக்கல்லவா அந்தப் பூச்சியாலபூவை ஒரு நாளும் உற்பத்தி செய்ய முடியாது. ஆனால் அந்தப் பூச்சியால் அந்தச் செடிய அழிக்கத்தான் தெரியும். அது போலத் தான் எங்கட சமுதாயமும் ஒரு பெண்ணை தலை நிமிர்ந்து ஒரு நாளும் வாழ விடாது. எப்படியும் அவள் நடத்தை கெட்டவள் என அவதூறுகளை கதைத்து அவளுடைய வாழ்கையை கலைக்கத்தான் தெரியும்.

''வினோதா இப்ப நீ இந்த ஊருக்காகப் பயப்படுறாய் பின்னால நீ தனிய இருக்கும் பொழுது இந்த ஊரே உன்ன தப்பாகக் கதைக்காது என்று எப்படிச் சொல்ல முடியும். ஆகவே வினோதா மற்றவங்க என்ன சொல்லு வாங்களோ என்பதைப் பற்றிச் சிந்திக்காம உன் வாழ்க்கையைப் பற்றி நீயே சிந்தித்து முடிவெடு. அதற்காக இப்படியே இருந்து உன்ர வாழ்க்கையை அழித்து விடாதே. கொட்டிக் கிடக்கிற கழிவுக் கற்களால கூட கட்டலாம் பெரிய கோபுரம். அது நீயே நினைத்தால் உன்னால முடியும்'' என்றான் ஆகாஸ்.

''என்ன ஆகாஸ் பாலைவனமாகிப் போன என்ர வாழ்க்கைய மீண்டும் பசுஞ் சோலையாக்க நினைப்பது மடைத்தனம் இல்லையா? நான் திருமணம் ஆனவள் என்பது ஊரே, அறியும். அப்படியிருக்கும் பொழுது என்ர நிலைய உணர்ந்து என்னை யார் வாழ்க்கைத் துணையாக ஏற்கப் போறாங்க, குளிர்ந்த பொய்கைய விட்டிட்டு நீரற்ற பாலைவனத்தைத் தேடி யாரும் வருவாங்களா...ம்.. விடுங்க பட்டமரம் பட்டமரம் தான்''.

அவளை இடைமறித்த ஆகாஸ் ''ஏன் வினோதா பட்டமரம் சில வேளை தழைப்பதில்லையா? ஏன் குளங்களைப் பார். கோடை காலத்தில் வற்றி, மாரி காலத்திலே நிரம்புவதில்லையா? அதுமட்டுமா நிலம் கூட வெப்பத்தால் வரட்சி பெற்று பின்பு தான் பசுமை அடைகிறது.

ஏன் மரமும் கூட இலை உதிர்ந்து தானே பின்னர் தழைக்கிறது. அது போலத்தான் உன்ர வாழ்க்கையும் என்று நினைத்துக் கொள் வினோதா. நீ விரும்பினால் நான் இப்பவும் தயார் இந்தச் சமுதாயத்திற்கு ஒரு எடுத்துக் காட்டாக உன்னை இந்த ஊர் உலகம் அறிய என்ர மனைவியாக்கி நல்லபடியா வாழ வைக்கிறேன்'' என்றான் கெஞ்சுதலாக.

வினோதாவிற்கு என்ன பதில் சொல்லுவதென்றே தெரியவில்லை. கண்களில் ஆனந்தக் கண்ணீர் கோர்த்து நின்றது அவன் கரம் பற்றி கண்ணீரைத் துடைத்த ஆகாஸ் ''வினோதா நீ இருளிலே மறைந்து கொள்ள முயன்றாலும் அது உன்னால முடியாத காரியம். உன்ர வாழ்க்கையில உதயம் என்ற ஒன்று வந்தே தீரும்'' என்றான் ஆகாஸ்.

ஆம் இதுவரை காலமும் வாடி இருந்த மலர் மீண்டும் பூத்தது. வினோதாவின் விருப்பத்திற்கு இணங்க மிகவும் எளிமையான முறையில் சம்பூர் பத்திரகாளி கோவில் அம்மன் சாட்சியாக வினோதாவின் சங்குக் கழுத்தில் மூன்று முடிச்சுகளைப் போட்டான் ஆகாஸ். இதயத்தில் அடக்கி வைத்திருந்த பாச உணர்ச்சியால் கண்ணீர் பெருக கணவனை நன்றிப் பெருக்கோடு நோக்கினாள் வினோதா.

(யாவும் கற்பனை)

சுடர் ஒளி சிறுகதை

# ராசி பலன்

**11.11.2001 முதல் 17.11.2001 வரை**

**பொ.சந்திரன்.**

### மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.

செவ்வாய், சுக்கிரன், சூரியன், புதன் போன்ற கிரகங்களால் நன்மையுண்டாகும். ராகு, கேதுக்களால் ஓர் அளவு நன்மையான பலனை எதிர்பார்க்கலாம். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்காது. எடுத்த கருமம் இலகுவில் நிறைவேறும். வீடு, வாகனங்களால் லாபம் இருக்காது. உடல் நிலை நல்ல ஆரோக்கியமாக இருக்கும். பிரயாண வாய்ப்பு பிரகாசமாக இருக்கும். தொழில் விருத்தியுண்டு.

### இடபம்: கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம் 1,2

குரு, சுக்கிரன், செவ்வாய் போன்ற கிரகங்களால் நன்மையுண்டு. புதன், சூரியன், கேது போன்றவையால் ஓர் அளவு மிதமான பலனை எதிர்பார்க்கலாம். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்காது. எடுத்த செயல் வெற்றியாய் முடியும். வீடு, வாகனம் லாபம் தரும். பிரயாண வாய்ப்புண்டு. திருமண வாய்ப்புண்டு. உடல் நிலை சிறிது பாதிக்கலாம். தொழில் துறை சீராக இருக்கும். தெய்வ அருள் கிட்டும்.

### மிதுனம் : மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3

புதன், சுக்கிரன், சூரியன் போன்ற கிரகங்களால் நன்மையான பலனை எதிர்பார்க்கலாம். சனி, செவ்வாயால் ஓர் அளவு நன்மையான பலனை எதிர்பார்க்கலாம். பணம் தட்டுப் படலாம். கல்வியில் கவனம் குறையலாம். மன அமைதி இருக்காது. வீடு, வாகனம் லாபம் தரும். பிரயாண வாய்ப்பு உண்டு. எடுத்த கருமத்தைச் செய்து முடிக்கலாம். உடல் நிலை ஆரோக்கியமாக இருக்கும். செய்தொழில் மெல்ல மெல்ல முன்னேறும்.

### கடகம் : புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.

புதன், சுக்கிரன், சூரியன் போன்ற கிரகங்களால் நன்மையுண்டு. சனி, கேது போன்ற கிரகங்களால் ஓர் அளவு நன்மையுண்டு. பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். வீடு, வாகனங்களால் லாபம் இருக்கும். எடுத்த கருமம் தடைப்பட்டு நிறைவேறும். பிரயாண வாய்ப்பு உண்டு. உடல் நிலை ஆரோக்கியமாக இருக்கும். தொழில் துறையில் முன்னேற்றம் இருக்கும். தெய்வ அனுகூலம் உண்டு.

### சிங்கம் : மகம், பூரம், உத்தரம் 1

புதன், குரு, சனி போன்ற கிரகங்கள் நன்மை செய்யும். சூரியன், சுக்கிரன், ராகு போன்ற கிரகங்களால் ஓர் அளவு நன்மையுண்டு. பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்கும் எடுத்த கருமம் தாமதிக்கலாம். வீடு, வாகனம் லாபம் தரும். பிரயாண வாய்ப்பு உண்டு. திருமண வாய்ப்புண்டு. உடல் நிலை ஆரோக்கியமாக இருக்கும். தொழில் துறையில் சீரான முன்னேற்றம் காணப்படும். பெரியவர்களின் ஆசிர்வாதம் கிடைக்கும்.

### கன்னி : உத்தரம் 2,3,4 அத்தம், சித்திரை 1,2

சனி, சுக்கிரன், புதன், ராகு போன்ற கிரகங்களால் நன்மையுண்டாகும். குருபகவானால் ஓர் அளவு நல்ல பலனை எதிர்பார்க்கலாம். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்கும். வீடு, வாகனங்களால் செலவுக்கு இடமுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. திருமண வாய்ப்புண்டு. எடுத்த செயலை இலகுவில் செய்து முடிக்கலாம். உடல் நிலை ஆரோக்கியமாக இருக்கும். தொழில் துறை சீராக முன்னேறும்.

### துலாம் : சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3

குரு, சுக்கிரன், புதன் போன்ற கிரகங்களால் நல்ல பலனை எதிர்பார்க்கலாம். செவ்வாய், ராகு, கேது போன்றவையால் ஓர் அளவு நல்ல பலனை எதிர்பார்க்கலாம். பணம் வரும். ஆனால் உடனே செலவாகிவிடும். கல்வியில் ஆர்வம் குறையலாம். மனசஞ்சலம் இருக்கும். எடுத்த செயலை இலகுவில் நிறைவேற்றலாம். திருமண வாய்ப்புண்டு. பிரயாண வாய்ப்புண்டு. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். தொழில்துறையில் சில பின்னடைவு வரலாம்.

### விருச்சிகம் : விசாகம் 4, அனுஷம், கேட்டை

செவ்வாய், சுக்கிரன், சூரியன் போன்ற கிரகங்களால் நன்மை உண்டாகலாம். ராகு, புதன் போன்றவையால் ஓர் அளவு நன்மையை எதிர்பார்க்கலாம். பணம் தட்டுப்படலாம். கல்வியில் கவனம் குறையலாம். மன சஞ்சலம் இருக்கும். வீடு, வாகனம் லாபம் தரும். எடுத்த செயலை இலகுவில் செய்து முடிக்கலாம். பிரயாண வாய்ப்புண்டு. உடல்நிலை சிறிது பாதிக்கலாம். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்கும்.

### தனு : மூலம், பூராடம், உத்தராடம் 1.

குரு, சுக்கிரன், புதன் போன்ற கிரகங்களால் நன்மை உண்டாகலாம். சனி, செவ்வாய், சூரியன் போன்ற கிரகங்களால் ஓர் அளவு நன்மையான பலனை எதிர்பார்க்கலாம். பணம் இருக்கும். கல்வியில் கவனம் குறையலாம். மன அமைதி இருக்காது. எடுத்த செயலை இலகுவில் முடிக்கலாம். வீடு, வாகனங்களால் லாபத்தை எதிர்பார்க்கலாம். உடல் நிலை சிறிது பாதிக்கலாம். தொழில் துறையில் முன்னேற்றம் இருக்கும். திருமணவாய்ப்புண்டு. பிரயாண வாய்ப்புண்டு.

### மகரம் : உத்தராடம் 2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2.

புதன், சுக்கிரன், சூரியன் போன்ற கிரகங்களால் நன்மையுண்டாகலாம். செவ்வாய், ராகு, கேது போன்ற கிரகங்களால் ஓர் அளவு நன்மையான பலனை எதிர்பார்க்கலாம். பணம் இருக்கும் கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்கும். எடுத்த செயலை இலகுவில் நிறைவேற்ற லாம். வீடு, வாகனங்களால் லாபம் கிடைக்கும். உடல்நிலை ஆரோக்கியமாக இருக்கும். தொழில் துறையில் முன்னேற்றம் இருக்கும்.

### கும்பம் : அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3

புதன், சுக்கிரன், குரு போன்ற கிரகங்களால் நன்மையுண்டாகலாம். சூரியன், செவ்வாய், கேது போன்ற கிரகங்களால் ஓர் அளவு நன்மையான பலனை எதிர்பார்க்கலாம். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். எடுத்த செயலை இலகுவில் நிறைவேற்றலாம். மன அமைதி இருக்கும். வீடு, வாகனங்களால் செலவு ஏற்படலாம். உடல் நிலை ஆரோக்கியமாக இருக்கும். திருமண வாய்ப்புண்டு தொழில்துறை முன்னேறும்.

### மீனம் : பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி

செவ்வாய், குரு, புதன் போன்ற கிரகங்களால் நன்மை உண்டாகலாம். கேது, சனி போன்ற கிரகங்களால் ஓர் அளவு நன்மையான பலனை எதிர்பார்க்கலாம். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்கும். எடுத்த செயலை தாமதமாக நிறைவேற்றலாம். வீடு, வாகனங்களால் செலவு ஏற்பட வாய்ப்புண்டு. பிரயாண வாய்ப்புண்டு. திருமண வாய்ப்புண்டு. உடல் நிலை ஆரோக்கியமாக இருக்கும் தொழில்துறையில் பெரிய முன்னேற்றம் இருக்காது.



ஆங்கிலோ இந்தியப் பெண். கோவாவைச் சேர்ந்தவர். இவருடைய சொந்தப் பெயர் லைலா ஃபெர்னான்டோ.

லைலா படிப்பதற்காக மும்பையில் தங்கியிருந்தார் அப்போது சக மாணவனுடன் ஏற்பட்ட காதல்

தடவை காதலில் ஏமாந்த லைலா இன்னொரு முறை ஏமாறத் தயாராக இல்லை. அதனால் நாயகன் பற்றி தயாரிப்பாளரிடம் முறையிட்டிருக்கிறார். இந்தப் பிரச்சினையால் படத்திலிருந்தே நீக்கப்பட்டார் லைலா.

ஆனால் வி.ஐ.பி படத்தில் இருந்து லைலா நீக்கப்பட்டதற்கு லைலாவின் கால்ஷீட் குளறுபடிதான் காரணம் என்று கூறப்பட்டது வேறு விடயம்.

இதன் பின்னர் மீண்டும் தன்னை அறிமுகப்படுத்திய தெலுங்கிற்கே போனார் லைலா. அங்கு அவர் நடித்த படங்கள் எல்லாம் சூப்பர் ஹிட். அதனால் ராசியான நடிகை என்ற பெயரும் சேர்ந்து கொண்டது.

கனவு தேவதையாக ரசிகர்கள் நினைத்திருக்கையில் லைலாவின் ஆறு வயதுக் குழந்தை மும்பாயில் உள்ள கிறிஸ்தவக்கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கிறது என்ற செய்தி ரசிகர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

படப்பிடிப்பில்லாத நேரங்களில் மும்பை சென்று தன் குழந்தையுடன் நேரத்தைச் செலவிடுகிறார் அதுமட்டுமல்ல, படப்பிடிப்பில் இருக்கும் போதும் தன் குழந்தையுடன் செல்போனில் பேசுவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார். இவ்வாறு லைலாவைப் பற்றிய செய்திகள் அதிர்ச்சிடையச் செய்கின்றன.

— ஷாம்

# ஏற்கனவே மணமுடித்தவர் லைலா குழந்தையும் உண்டு, அதிர்ச்சிச் செய்தி!!



**கோ**டம்பாக்கத்தின் இப்போதைய 'ஹொட் கேக்' லைலாதான். இளம் ஹீரோக்களோடு வலம் வந்து கொண்டிருக்கிறார்.

இந்த நேரம் பார்த்து 'நந்தா' பட டைரக்டர் பாலாவிற்கும் லைலாவிற்கும் இடையில் காதல் என்ற கிசுகிசுவினால் பத்திரிகையாளர்கள் மீது கொதித்துப்போயிருக்கிறார்.

''கால்ஷீட் தரவில்லை,'' ''சம்பளம் அதிகமாகக் கேட்கிறார்'' இப்படி ஏதாவது எழுதினால் கூடப் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் என் லைஃபையே பாதிக்கும் வகையில் இப்படி எழுதிவிட்டார்களே என்று லைலா மனம் நொந்து கூறிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் லைலா ஏற்கனவே திருமணமானவர் என்றும் அவருக்கு ஆறு வயதில் குழந்தையும் உண்டு எனவும் பரபரப்பான செய்திகள் வெளியாகியுள்ளன.

இதனால் திரையுலகினரும் லைலாவை தங்கள் படங்களுக்கு ஒப்பந்தம் செய்துள்ள தயாரிப்பாளர்களும் கதிகலங்கிப் போயுள்ளனர். இன்றைய நிலையில் தமிழ்த் திரையுலகின் நம்பர் வன் ஸ்தானத்திலிருக்கும் ஜோதிகாவையே அசைத்துப் பார்க்கும் அழகு மயில் லைலா.

மேற்படி செய்திகளை லைலா தரப்பு மறுத்தாலும் ஒரு காலத்தில் அவருக்கு நெருக்கமாக இருந்தவர்கள் இந்தச் செய்தியை உண்மை என்று ஏற்றுக் கொண்டுள்ளமை தான் அதிர்ச்சியடைய வைக்கின்றது.

இதற்கு அத்தாட்சியாக லைலாவின் மேக்கப் பெட்டியில் தனது குழந்தையின் படத்தை ஒட்டி வைத்திருக்கிறார் என்றும் சொல்கிறார்கள்.

மும்பை இறக்குமதி என்ற பெயரில் கோலிவுட்டைக் கலக்கி வரும் லைலா

திருமணத்தில் முடிந்ததாம். இனிய இல்லறத்தின் அடையாளமாக வெகு விரைவிலேயே பெண் குழந்தைக்குத் தாயானார் லைலா.

இல்லற வாழ்க்கையில் எதிர்பாராமல் வீசிய புயலினால் கணவர் பிரிந்து போய்விட்டார்.

குழந்தையுடன் தனி மரமாகிய லைலா வாழ்க்கையைத் தொலைத்து விட்ட விரக்தியில் மனநோயாளி போலாகி விட்டாராம்.

இவரை சகஜ நிலைக்குக் கொண்டு வருவதற்குப் பெற்றோர்கள் பட்ட சிரமம் கொஞ்ச நஞ்சமல்ல. இந்த நிலையிலும் பெற்றோரின் ஆறுதல் வார்த்தைகள் தான் லைலாவைக் காப்பாற்றியிருக்கின்றது.

ஆனாலும் மனதளவில் எதையோ பறிகொடுத்தவர் போல் லைலா காணப்படவே பெற்றோர் கவலையடைந்திருக்கின்றனர்.

இந்த நேரத்தில்தான் சினிமாவில் நடிப்பதற்கு அழைப்பு வந்திருக்கின்றது. லைலா மறுத்த போதும் சினிமாவில் நடித்தாலாவது மகள் பழைய நினைவுகளை மறந்து சந்தோஷமாக இருப்பாள் என்று நினைத்த பெற்றோர் லைலாவை வற்புறுத்தி சம்மதிக்க வைத்திருக்கின்றனர்.

குழந்தையை அம்மாவிடம் விட்டு விட்டு அரிதாரம் பூச ஆரம்பித்தார். தெலுங்குப் படமொன்றில் அறிமுகமான லைலாவை தமிழிற்கு அழைத்து வந்தவர் கலைப்புலி தாணு. வி.ஐ.பி படத்தில் ஒப்பந்தம் செய்யப்பட்ட லைலா சில நாட்கள் படப்பிடிப்பில் கலந்துகொண்டார்.

வி.ஐ.பி படத்தின் நாயகன் அவரிடம் சில்மிஷம் செய்திருக்கிறார். ஏற்கனவே ஒரு

மளமளவென முன்னேறி அங்கே நம்பர்வன் நடிகையானார். இவரது கால்ஷீட்டுக்காகத் தயாரிப்பாளர்கள் வரிசையில் நிற்கும் நிலையும் உருவானது.

தயாரிப்பாளர்கள் லைலாவைத்தேடி ஆந்திராவிற்குப் போனார்கள்.

ரஜினியின் புதிய படத்திலும் ஜோதிகா வோடு லைலா நடிப்பார் என்று பேசப்படுகின்றது. இப்படி லைலாவைத் தமது

## என்றென்றும் செம்பருத்தி ரோஜா





அறிமுகமான நேரத்தில் ஒருமுகம். பின்னர் முன்னேறிவிட்ட நிலையில் வேறுமுகம் என்று வளர்ச்சிக்கு வளர்ச்சி முகம் மாறுகின்ற நடிகைகள் உண்டு. ஆனால் நடிகை ரோஜா இதிலிருந்து வித்தியாசமானவர். செம்பருத்தியில் அறிமுகமான அதே ரோஜாவாகவே இப்போதும் நடந்து கொள்கிறார். குணச்சித்திரமா, கிளாமரா, பக்தி வேடங்களா எதற்கும் மறுப்புச் சொல்வதில்லை சகஜமாகவும் பழகுகின்றார். அதனால் அன்று பார்த்த அதே 'செம்பருத்தி' யாக இன்றும் ஜொலிக்கிறார்.

## இழுபறிப்படுகிறார் சிவலட்சுமி

புதிய படங்கள் எதுவும் இல்லாத நிலையில் சின்னத்திரைத் தொடர்களில் நடிக்க வந்து விட்டார் சுவலட்சுமி. 'சூலம்' தொடரில் அவர் நடித்து வருவது தெரிந்த செய்தி. ஆனால் அவருக்கு சினிமாவில் நடிக்கும் ஆசை இருந்து கொண்டு தானிருக்கின்றது. டைரக்டர்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாய்ப்புக் கேட்டு வருகிறார். ஆனால் நடிகை சின்னத்திரைப் பக்கம் போய்விட்டார் என்றதும் ஏற்கனவே ஒப்பந்தம் செய்திருந்த சில டைரக்டர்கள் கூட இப்போது சுவலட்சுமியின் பெயரை நீக்கிவிட்டு வேறு நடிகைகளை தங்கள் படங்களில் நடிக்க வைக்கப் போகிறார்கள். சின்னத்திரை நடிகையாகி விடுவதா? அல்லது சினிமா வாய்ப்புத் தேடுவதா? என்று இழுபறிப்பட்டுக் கொண்டிருக்கிறார்.

# தலைமறைவானார் நவரச நடிகர்!

## கண்டுபிடித்து நல்வழிகாட்டினார் விஜயகாந்த்

**கு**றும்புத்தனமான நடிப்பு, கிண்டல் பயலாக், கலகலப்பான பேச்சு, பளிச் என்ற தமிழ் உச்சரிப்பு... இப்படி பல பெருமைகளுக்கு சொந்தக்காரர் அவர். கடந்த காலங்களில் அவர் சரிவர ஷூட்டிங்கிற்கு வருவதில்லை, கால்ஷீட் கொடுத்தபடி வாக்கைக் காப்பாற்றுவதில்லை... இப்படி பல புகார்கள். காரணம், அவருக்கு இருந்த பழக்கவழக்கம் தான் என்கின்றனர் திரையுலகத்தினர். இப்போது அவர் அடியோடு மாறி விட்டார். மாற்றியவர் வேறு யாருமல்ல, பிரபல சீனியர் நடிகர்தான். 'இனியும் ஒளிவு மறைவு வேண்டாமே. விஷயத்தை அறிய மேலும் படியுங்கள்.

மறைந்த குணச்சித்திர நடிகர் முத்துராமனின் மகன் கார்த்திக். 'அலைகள் ஓய்வதில்லை' படம் மூலம் பாரதிராஜாவால் தமிழ்த் திரையுலகிற்கு அறிமுகமானவர். இவரது நடிப்பில் எந்த நடிகரின் சாயலும் இருக்காது. தனக்கென தனிப்பாணி அமைத்து இன்று வரை நடித்து வருபவர். பல ஆண்டுகளாகவே முன்னணி நடிகராக இருந்து வருபவர்.

இவர் நடித்த மௌனராகம், அக்னி நட்சத்திரம், வருஷம் 16 உள்ளிட்ட பல படங்கள் வெகுவாகப் பாராட்டப்பட்டவை. இவர் நடித்த 'சோலைக்குயில்' படத்தின் நாயகி ராகினியை காதலித்து கைப்பிடித்தார். இவர்களுக்கு இரண்டு மகன்கள் இருக்கின்றனர். சிறிது நாட்களுக்கு பிறகு தன் மனைவி ராகினியின் தங்கையை ரகசியமாக மணந்தார். அவருக்கு ஒரு ஆண் குழந்தை உண்டு. பிரச்சினை இன்றி சென்று கொண்டிருந்த இவரது வாழ்க்கையில், இரண்டாவது திருமணம் அம்பலமாகிவிட்டபோது, மனைவியோ மறைத்து வைத்திருந்தும் விஷயம் அம்பலமானது.



கார்த்திக் — ரம்பா

குடும்பத்தில் விரிசல் ஏற்பட்டது. பிரச்சினை பூதாகரமானது. தாங்கிக்கொள்ள முடியாத கார்த்திக், வீட்டை விட்டு வெளியேறி நட்சத்திர ஓட்டலில் அறை எடுத்து தங்கினார். கார்த்திக்கை விட்டுக் குடும்பம் பிரிந்தது.

மகன்கள் மீது அளவில்லாத பாசம் வைத்திருந்தார் கார்த்திக், பணப் பிரச்சினையும் குடும்பப் பிரச்சினையும் ஒன்று சேர்ந்து அலைக்கழிக்க நிம்மதி இழந்தார். 'தன்னையறியாமல்' அவர் கொஞ்சம் கொஞ்சமாக தூக்கம் இன்றி தவித்தார் நிம்மதியை தேடி அவர் தவறான பாதையில் சென்றார். ஒரு புறம் தூக்கமில்லாமல் மறுபுறம் அட்வான்ஸ் வாங்கிய தயாரிப்பாளர்களுக்குபதில்சொல்ல முடியாமல்தவியாய் தவித்து, கிட்டத்தட்ட 'தலைமறைவு' வாழ்க்கை வாழவேண்டிய நிலை கூட ஏற்பட்டது.

தயாரிப்பாளர்களும் விநியோகஸ்தர்களும் கார்த்திக் மீது சரமாரியாகப் புகார் கூறினர். நடிகர் சங்கத் தலைவர் விஜயகாந்த், கார்த்திக்கைக் காப்பாற்றும் முயற்சியில் இறங்கினார். அவர் நேரடியாக கார்த்திக்கைத் தேடி களம்

இறங்கினார். அவர் தங்கியிருந்த இடம் தெரியாமல் பல பக்கத்திலும் தேடினார். அதே சமயம் தயாரிப்பாளர்களின் நச்சரிப்பும் தொடர்ந்தது.

இதனிடையே, விஜயகாந்த், ஒரு வழியாக கார்த்திக் இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்துத்தானே நேரடியாக சென்றார். கார்த்திக் தான் தங்கியிருந்த அறைக்கு பதிலாக மற்றொரு அறையில் இருந்தார். விஜயகாந்த், கார்த்திக்கை உட்கார வைத்து, "நீங்கள் நல்ல நடிகர் உங்களுக்குள்ள பிரச்சினை என்ன? ஏன் வீணாக தயாரிப்பாளர்களிடம் கெட்ட பெயர் வாங்குகிறீர்கள்? மனதில் உள்ளதை ஒளிவுமறைவின்றி கூறினால், என் உடன் பிறந்த சகோதரனுக்கு என்ன செய்வேனோ? அதை செய்கிறேன்,'' என்று அன்போடு பேசினார்.

விஜயகாந்தின் அன்பான வார்த்தையைக் கேட்டு கார்த்திக் கண் கலங்கி தன் மனக் குமுறலைக் கொட்டித் தீர்த்தார். தனக்குள்ள பிரச்சினைகள் பற்றியும், இந்த 'பழக்கத்திற்கு' தான் அடிமையானது பற்றியும் கார்த்திக் விலாவாரியாக விளக்கியுள்ளார். இதனை கேட்ட விஜயகாந்த், ''இரண்டு வருடங்களில் உங்கள் அனைத்துப் பணப்பிரச்சினையையும் போக்கி விடலாம். நான் சொல்வதைக் கேட்டால்போதும், நீங்கள் பணம் கொடுக்க வேண்டிய தயாரிப்பாளர்களிடம் நான் பேசிக் கொள்கிறேன்,'' என்று ஆதரவாக பேசி யுள்ளார். பேச்சோடு மட்டும் நிற்காமல் உடனடியாக சம்பந்தப்பட்ட அனைத்து தயாரிப்பாளர்களையும் அழைத்துப் பேசினார் விஜயகாந்த். ஒப்பந்த மாகியுள்ள படங்கள் அனைத்தையும், தினந்தோறும் பகல் 2 மணியில் இருந்து இரவு 9 மணி வரை கார்த்திக் நடித்துக் கொடுக்க வேண்டும் என்று முடிவாகியுள்ளது.

# சிக்கவில்லை சிம்ரன்

ரம்பாவின் சொந்தப்படமான 'த்ரீ ரோஸஸ்' படத்தில் முதலில் சிம்ரனை நடிக்கக் கேட்டதும், சிம்ரன் மறுத்ததும் இப்போது அந்த வேடத்தில் ஜோதிகா நடித்து வருவதும் தெரிந்த செய்திகள். ஆனால் சிம்ரன் மறுத்ததற்கான காரணம் இப்போதுதான் தெரியவந் திருக்கிறது. அந்தக் கரெக்டரில் சிம்ரனுக்கு முக்கியத் துவம் இல்லையாம். படத்தில் ரம்பா விற்குத் தானாம் முக்கிய வேடம். தனது தனித் தன்மையைப் பிரதிபலிப்பதற்கு வாய்ப்புகள் இல்லாததனால் தான் சிம்ரன் மறுத் திருந்தாராம். ஆனால் ஜோதிகா, லைலா விடம் கதை சொல்லும் போது அவர்க ளுக்கு முக்கியத்துவம் இருப்பது போன்று சொல்லுமாறு இயக்குநர் பரமேஸ் வரிடம் சொல்லிவைத்திருந் தாராம் ரம்பா.



## கோடீஸ்வரியை தாக்கும் கேடீஸ்வரி

''நேற்று வந்தவர்களெல்லாம் இப்படி ஆட்டம் போடும்போது நாங்கள் மட்டும் சளைத்தவர்களா என்ன?'' என்று சீறிப்பாய்கிறார் கனகாவின் அம்மா தேவிகா.

கூடவே வாய்ப்பில்லாமல் இருக்கும் தன் மகளை வைத்து ஒரு நிகழ்ச்சி தயாரிக்கப் போகிறார். அதற்கு அவர் வைத்திருக்கும் பெயர் கேடீஸ்வரி. தனியார் சானல்களுக்கு வலை விரித்திருக்கிறார். எந்தச் சானல் கிடைத்தாலும் கேடீஸ்வரி ஆரம்பமாகும் என்று அடித்துச் சொல்கிறார் தேவிகா.



## ரஜினி பேச்சு ஜனவரியில்தான்

ரஜினியின் படங்களான 'முத்து', 'படையப்பா' போன்ற படங்களை இயக்கியவர் கே.எஸ். ரவிக்குமார்.

ரஜினியின் அடுத்த படத்தையும் கே.எஸ்.ரவிக்குமாரே இயக்குவார் என்ற ஒரு பேச்சு சமீபகாலமாகத்தமிழ்த் திரையுலகில் நிலவி வந்தது.

ரஜினி கடந்த மாதம் திடீரென்று அமெரிக்கா சென்றார். அங்கிருந்தே புதுப்படம் பற்றி முடிவுகளை எடுப்பார் என்று கருதப்பட்டது.

ஆனால் ரஜினி இதுவரை புதிய படத்தைப் பற்றி எதுவும் தன்னிடம் பேசவில்லை என்று வெளிப்படையாகக் கூறி விட்டார் இயக்குநர் கே.எஸ். ரவிக்குமார்.

அதேபோல் தயாரிப்பாளர் தேனப்பனும் படையப்பா நிர்வாகியாகப் பணியாற்றியவர். தேனப்பனும் ரஜினிக்குப் பிடித்த மனிதர்களுள் ஒருவர்.

அதனால் ரஜினியின் புதிய படவேலைகள் ஆரம்பிப்பதாக இருந்தால் அவருக்கு தேனப்பனும் வேண்டும், இயக்குநர் கே.எஸ். ரவிக்குமாரும் வேண்டும்.

ஆனால் இவர்கள் இரண்டு பேருமே கமலின் பம்பல் கே. சம்பந்தம் படத்தில் பிஸியாகி விட்டனர். அடுத்த ஆண்டு ஜனவரி வரையிலும் இவர்கள் கமலின் படத்தில் பிஸியாக இருப்பார்கள். அதனால் அடுத்த பட விஷயமாக ரஜினி பேசுவது என்றால் ஜனவரியில் தான் என்று கூறுகின்றனர் தமிழ்த்திரையுலகினர்.

## மோனலுக்கு மும்தாஜ் வேட்டு

அக்கா சிம்ரனைவிட தொப்பை கூடிவிட்டது. அதனால் தான் இடைதெரியவில்லை. இடையில்லாது போனால் தமிழ்த்திரையுலகில் இடைவெளி ஏற்பட்டு விடும் என்று சிம்ரனின் தங்கை மோனலுக்கு நெருங் கியவர்கள் கூறி விட்டனர். இதனால் உடல் நிறையைக் குறைப்பதற்கு ஹொலிவூட் நடிகைகள் கடைப்பிடிக்கும் 12பி புரோட்டின் டயட்டில் இருந்து கொண்டி ருந்தார் மோனல். இந்த நேரம் பார்த்து 'விவரமான ஆளு' படத்தில் முதன்முதலாக மும் தாஜும் மோனலும் இணைந்து நடிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. மும்தாஜின் புஷ்டிக்கு முன்னால் தனது தொப்பை ஒன்றும் பெரிதாகத் தெரியப் போவதில்லை என்று நினைத்த மோனல் டயட்டைக் கைவிட்டு விட்டு கவர்ச்சிப் போட்டிக்குத் தயாராகி வருகிறார். இதனைக் கேள்விப்பட்ட மும்தாஜ் 'விவரமான ஆளு' படக்கம்பனியின் வழக்கமான பி.ஆர்.ஓ. வைத்தூக்கி விட்டுத் தனது மனேஜரையே பி.ஆர்.ஓ வாகப் போடும்படி கண்டிசன் போட்டுள்ளார். அதுமட்டுமல்ல, படத்தில் மோனல் நடிக்கிறதாகவே தெரியக்கூடாது. மோனலுடைய ஸ்டில்கள் விளம்பரத்தில் வரக்கூடாது என்று ஏகப்பட்ட யோசனைகளைத் தனது மனேஜரிடம் கூறியுள்ளாராம்.

## தமிழிற்குப் போட்டி தமிழனா!

திடீரென்று தமிழ்த் திரையுலகத்திற்கு தமிழ் மீது பற்றுதல் ஏற்பட்டிருக்கின்றது. பிரசாந்த் – சிம்ரன் ஜோடியாக 'தமிழ்' உருவாகிக் கொண்டிருக் கின்றது. இப்போது விஜய் – ப்ரியங்கா சோப்ரா ஜோடியாக நடிக்கும் படத்திற்கு 'தமிழன்' என்று பெயர் வைத்திருக்கிறார்கள்.

'தமிழன்' படத்தை ஏ.வி.எம். நிறுவனம் தயாரிக்கின்றது. (தமிழிற்குப் போட்டி தமிழனா?)



## திரை மறைவில்

ஹொலிவூட் நடிகைகளைப் போன்று உற்சாக பானம் அருந்துவது, புகைபிடிப் பது போன்ற அட்டகாசங்களை திறந்த வெளியிலேயே செய்து பிரபலமாகி வருகிறார் மனதைத் திருடிய நாயகி.

* *

அவுட்டோர் ஷீட்டிங்கிற்காக எங்கு சென்றாலும் காலை உணவில் கண்டிப் பாக இடியப்பம் வேண்டும் என்று அடம்பிடித்து வருகிறார் 'தாஜ்' நடிகை.

* *

'பாண்டவர் பூமி' படத்தின் நாயகியைத் திருமணம் செய்ய முடிவெடுத்துள்ளாராம் கொங்குநாட்டு ராசாவான இயக்குநர். இத்தனைக்கும் இவர் ஏற்கனவே திரும ணமாகி இரண்டு குழந்தைகளுக்கும் தந்தை. தனக்கு திரை வாழ்வு கொடுத்த டைரக்டர் என்பதால் தனது வாழ்க்கையையே டைரக்டரின் காலடியில் போட்டு விட்டு சர ண்டர் ஆகியிருக் கிறார் நடிகை. நடிகையை புதிய படத்திற்கு ஒப்பந்தம் செய்ய வருபவர்கள் கொங்கு நாட்டு ராசாவின் அனுமதியைப் பெற்றே அம்மணியை அணுக வேண்டுமாம். இவர்களது காதலுக்கு பூரண ஆதரவு கொடுப்பவர்கள் மற்றவர்களின் காதலை வளர்த்து விட்டு (ஸ்ரீதேவி உட்பட) புண்ணியம் தேடிக் கொள்ளும் கலைக்குடும்பம் தானாம்.

* *

ஒரு காலத்தில் 'அம்மா' புராணம் பாடிய அமெரிக்க ரிட்டர்ன் 'அம்பி' நடிகை இப்போது அம்மா என்றாலே எரிந்து விழுகிறாராம். வேறு ஏதாவது விஷயம் இருந்தால் பேசுங்க. என்று பேசவருபவரின் கவனத்தைத் திசை திருப்பி வருகின்றாராம்.

* *

குமார நடிகரின் தந்தை மகனோடு கோபித்துக் கொண்டு போய் அமெரிக்காவில் இருக்கும் மகனுடன் செட்டிலாகி விட்டாராம்.

* *

குமார நடிகரின் 'ரெட்' படமும் வில்வத்தை நடிகரின் அசோகச் சக்கரவர்த்தியின் பெயர் கொண்ட படமும் ஒரே கதைச்சாயல் கொண்ட படங்கள் என்பது தெரிய வந்தது. குமார நடிகரின் படம் ஏற்கனவே தொடங்கப்பட்டு படப்பிடிப்பும் நடந்து விட்டது. அதனால் அசோகச்-சக்கர வர்த்தியின் படம் நிறுத்தப் பட்டது. ஆனால் வில்வித்தை நடிகரோ தனது அடுத்த படம் என்று அசோகச் சக்கரவர்த்தி யின் பெயர் கொண்ட படத்தையே கூறி வருகின்றார்.

* *

திருமணத்திற்குப் பின் மீண்டும் வந்திருக்கிறார் 'மது' நடிகை அழைத்து வந்திருப்பவர் ராதிகா. இவர் இயக்கும் 'காவேரி' என்ற டி.வி தொடரில் 'மது' நடிகைக்குத் ...ன் முக்கிய ...ரெக்டராம்.

* *



திருமணம் முடித்த பின்னர் ஏற்கனவே நடித்தது போன்று கவர்ச்சியாக நடிப்பதற்கு மறுப்புத் தெரிவித்து விடுகின்றார் 'விசித்திர' நடிகை.

## மீண்டும் கௌதமி

அமெரிக்க மாப்பிள்ளைக்குக் கழுத்தை நீட்டியதோடு தமிழ்த் திரையுலகிற்கு குட்பை சொல்லிச் சென்றவர் கௌதமி.

'குருசிஷ்யன்' படத்தில் அறிமுக மாகி பல படங்களில் கதாநாயகியாக நடித்தவர். ஏறக்குறைய எல்லா முன்னணி நடிகர்களுடன் நடித்து விட்டவர். இப்போது கணவருக்குக் குட்பை சொல்லி விட்டு மீண்டும் சினிமாவில் நடிக்க வருகின்றார். மீண்டும் அவர் தலை காட்டுவது விஜய் நடிக்கும் 'தமிழன்' படத்தில் விஜய்க்கு அம்மாவாக நடிக்கிறார்.

## இனி இவர்கள்..!

* நிறைய இலாபம் கிடைக்கும் வகையில் குறுகிய காலபடம் ஒன்றை லோ பட்ஜெட்டில் நடித்து தயாரிக்கப்போகிறார் முரளி.

*டி.எஸ். பாலையாவின் வாரிசு மனோசித்ரா 'சீனு', 'பாண்டவர் பூமி' படங்களில் நடித்தவர்.

இப்போது 'சவுண்ட் பார்ட்டி' படத்தில் பிரதாப் போத்தனுக்கு ஜோடியாக நடித்து வருகிறார்.

# ஆண்களின் மார்பக வளர்ச்சி பெண் தன்மையின் அறிகுறியா?

கே: எனக்கு வயது 18 (ஆண்) சுடர் ஒளியில் இடம்பெறும் இந்த சேவையின் மூலம் சில விடயங்களை சொல் லவும் கேட்கவும் முற்படுகிறேன்.

பெண்கள் பருவமடையும்போது அவர்களுக்கு பலவிதமான ஆதரவும் அறிவுரைகளும் கிடைக்கின்றன. அவர்களில் ஏற்படும் மாற்றங்கள் பற்றிய விளக்கங்கள் அவர்களுக்கு பெரியோர் களால் கொடுக்கப்படுகின்றன. ஆனால் ஆண்கள் பருவமடைவதை யாரும் கண்டுகொள்வதில்லை. எதுவித விளக்கங்களோ அறிவுரைகளோ அவர் களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. நண்பர்களின் மூலம் அரைகுறையாக அறியப்படும் சில விடயங்கள் மூலம் பல தப்பான அபிப்பிராயங்களும் பயங்க ளும் சந்தேகங்களும் பல ஆண்களுக்கு இருந்து வருவதை என்னால் இப்பொழுது அறியமுடிகிறது. இவ்வாறான தப்பான அபிப்பிராயங்கள் சுடர் ஒளி மூலம் தெரிவுபடுத்தப்பட்டு வருவது மகிழ்ச் சியான விடயம். எனது உடம்பு சோர்வா கவும் சற்று மெலிவாகவும் இருக்கிறது. எனக்கு நித்திரையில் விந்து வெளி யேறுகிறது. இதன்மூலம் சக்தி இழக்கப் படுவதால்தான் இந்த உடல் மெலிவும் சோர்வும் ஏற்படுகின்றனவா? அப்படியாயின் இதைத் தடுப்பது எப் படி? இதை விட எனக்கு கரமைதுனம் (சுய இன்பம்) காணும் பழக்கமும் இருக்கிறது. உடல்மெலிவுக்கோ அல் லது பிற்காலத்தில் ஆண்மைத்தன்மை குறைவடைவதற்கோ காரணமாக இது அமையுமா?

ப : நீங்கள் தெரிவித்துள்ள கருத்துக்க ளுக்கு நன்றி. நித்திரையிலே விந்து வெளியேறுவது இயற்கையான ஒன்று. இதனால் சக்தி இழக்கப்படு வதில்லை. உண்மையில் இது உடல் ஆரோக்கியத்திற்கு நல்ல ஒரு அறிகுறியாகும். இது உங்கள் உடற் சோர்வுக்கோ உடல் மெலிவுக்கோ காரணமல்ல. ஆனால் நித்திரையில் விந்து வெளியேறுவதை நீங்கள் ஒரு தீய நிகழ்வாகக் கருதினால் உளவியல் ரீதியில் உங்களுக்கு ஒரு மனச் சோர்வு ஏற்படலாம். எனவே இதனை ஒரு தவறான நிகழ்வாகக் கருத வேண்டாம். இது சம்பந்தமான தப்பான அபிப்பிராயம் உங்கள் நண்பர்களுக்கும் இருப்பின் அதனை நிவர்த்தி செய்து விடவும்.

சுய இன்பம் காணுவதும் (கரமைதுனம்) சக்தி இழப்புக்கோ உடல் மெலிவுக்கோ அல்லது சோர்வுக்கோ காரணமாக அமையாது.

> ஒற்றைத் தலைவலி ஆபத்தான நோய் அல்ல. தொடர்ச்சியாக மருந்து எடுத்தால் குணமடையலாம்.

இதன்மூலம் எந்தவித மான தீய விளைவுகளும் ஏற்பட மாட்டாது. வீரியக்குறைவிற்கும் இது ஒரு காரண மல்ல. தப்பான விடயங்கள் உங்க ளில் நடப்பதாக நீங்கள் நினைத்துக் கொள்வ தாலேயே உங்களி டம் ஒரு மனச்சோர்வு ஏற்படுகிறது. இந்த தப்பான அபிப்பிரா யங்களை நீக்கி விட்டால் இந்த மனச் சோர்வு தானாக நீங்கிவிடும்.

கே : எனது மனைவிக்கு வயது 46. கடந்த 3 வருடங்களாக இவ ருக்கு ஒரு வினோத மான நோய் ஏற்பட்டு பலவகையான கஷ் டங்களைக் கொடுக் கிறது. இவ ருக்கு தலைக்குள் ஏதோ விராண்டுவது போலவும் குழைவது போல வும் இருக்கிறாதாம். சிலசமயம் தலைக்குள் ஏதோ ஊருகிறதாம். இரவு 9 மணிக்கு படுக் கைக்கு சென்றுவிடுவார். சாமம் 11--12 மணிக்கிடையில் இரண்டு மூன்று தடவைகள் திடுக்கிட்டு எழும்பி புலம்புவார். என்னையும் கைகாட்டி வெருட்டுவார். பின் இரண்டு மூன்று முடறு தண்ணீர் குடித்துவிட்டு படுத்துத் தூங்கிவிடுவார்.

நாங்கள் செய்யாத வைத்தியமில்லை. திரியாத, வணங்காத கோயிலுமில்லை. கையில் சன்னதி நூல், துர்க்கை அம்மன் நூல், சிவன்கோயில் நூல் எல்லாம் கட்டியிருக்கிறார். பகலில் அன்பாக எல்லோரிடமும் கதைப்பார். வீட்டு வேலை கள் எல்லாம் செய்வார். நல்ல அழகாக உடுத்தி துப்புரவாக இருப்பார். ஆனால் தலையில் ஏற்பட்டிருக்கும் நோய் குறைந்த பாடில்லை. தனது உயிர் விரை வில் பிரிந்துவிடும் என்று கூறி கவலைப் படு கிறார். இந்த ஆபத்தான நோயைக் குணமாக்க முடியுமா?' இந்தக் கஷ்டத்தி லிருந்து எங்கள் குடும்பம் மீளுவதற்கு உங்கள் ஆலோசனையை எதிர்பார்க்கிறேன்.

> இலவச மருத்துவ ஆலோசனைகளை 'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார் டாக்டர் சி.சிவன்சுதன். நீங்கள் கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி:—
> இலவச மருத்துவ ஆலோசனை
> 'சுடர் ஒளி'
> 36/2, பிரெட்றிகா வீதி,
> கொழும்பு — 06.

ப : இது ஓர் ஆபத்தான நோய் அல்ல. உங்களுடைய மனைவிக்கு உயிராபத்து ஏற்படப்போவதாக நினைத்து நீங்கள் பயப்பட வேண்டிய அவசியமில்லை. உங்களுடைய மனைவிக்கு ஏற்பட்டிருப்பது ஒரு மனம் சம்பந்தமான நோய். இதனைக் குணப்படுத்த முடியும். அவருடன் நீண்ட நேரம் உரையாடு வதன் மூலம் அவருடைய இந்த நிலைக் கான அடிப்படைக் காரணத்தைக் கண்டறியமுடியும். அதனைக் கண்டறிந்து அதற்கேற்ற சிகிச்சை முறைகளையும் கொடுக்கமுடியும்.

எனவே நீங்கள் உங்கள் மனைவியுடன் சென்று ஒரு மனநல மருத்துவரைச் சந்திக்க வேண்டும். நீங்கள் வசிக்கும் யாழ்ப்பாணப் பிரதேசத்திலே மிகச் சிறந்த மனநல மருத்துவர்கள் இருக்கி றார்கள். நீங்களும் தயங்காமல் ஒரு மனநல மருத்துவரின் உதவியை நாடி உங்கள் மனை வியை சுகப்படுத்திக் கொள்ளுங்கள்.

கே : சாவகச்சேரியை வசிப்பிடமாகக் கொண்ட எனக்கு (பெண்) வயது 30. எனக்கு ஒவ்வொரு மாசமும் மாத விலக்கு வந்து 3ஆம் நாள் இடது பக்க தலைவலியும் சத்தியும் இருக்கின்றன. இந்தத் தலை வலி என்னைக் கொன்று விடும் போல் இருக்கிறது. மாதவிலக்கு வந்ததும் தலைவலி வரப்போகிறது என்ற பயத்தினால் உடல் நடுக்கமும் சோர்வும் ஏற்படுகின்றன. தலைவலி இல்லாத நேரங்களில் சுகமாக இருக்கிறேன். தலை வலி வந்தால் ஒன்றும் செய்ய முடியாது. வெளிச்சத்தைப் பார்க்க முடியாது. வாந்தி வரும். இதனைச் சுகப்படுத்த முடியாதா? இது சம்பந்தமான உங்கள் ஆலோசனையை எதிர்பார்க்கிறேன்.

ப : உங்களுக்கு இருப்பது *Migraine* என்று சொல்லப்படுகின்ற ஒற்றைத் தலைவலி நோய் ஆகும். இது ஓர் ஆபத்தான நோய் அல்ல. இது சம்பந்தமான முழு விவரங் களும் ஜூலை 1ஆம் திகதி வெளியான சுடர் ஒளியில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. இந்த தலைவலியை நிறுத்துவதற்கு நீங் கள் தொடர்ச்சியாக சிறிதுகாலம் மருந்து பாவிக்க வேண்டி யிருக்கும். இதற்காக புறொப்றனலோல் எனப்படும் மருந்து அதிகமாக பயன்படுத் தப்பட்டு வருகிறது. இதற்கான மருந்தை நீங்கள் ஒரு மருத்துவரின் கண்காணிப் பின் கீழ் பயன்படுத்தி வந்தால் உங்கள் தலைவலி முற்றாக நீங்கி விடும்.

> நித்திரையில் எழும்பிப் புலம்புவதும், கைகாட்டி வெருட்டுவதும் ஒரு மனநோயே.

கே : எனது வயது 14 (ஆண்). எனக்கு ஏற்பட் டிருக்கும் ஒரு நோய் காரணமாக நான் வெட்கமும் மிகுந்த மன வேதனையும் அடைந்துள்ளேன். எனது மார்பு இரண்டும் பெண்களின் மார்பகங்களைப்போல் பெருத்து வருகிறது. சிலசமயம் வலியும் ஏற்படுகிறது. உடம்பு சோர்வாகவும் எதிலும் நாட்டம் குறைந்தும் காணப்படுகிறது. சகமாணவர்கள் இதை அறிந்தால் கேலிசெய்வார்கள் என்பதற்காக நான் இறுக்கமான சேட் அணிவதைத் தவிர்த்து வருகிறேன். இவ்வாறான பெண்மைத் தன்மை என்னில் ஏற்படுவதற்கு காரணம் எதுவாக இருக்குமென பல வாறாக யோசித்து மனம் குழம்பிப் போய் இருக்கிறேன். உங்கள் பதில் மூலம் எனக்கு ஒரு தீர்வு கிடைக் கும் என்ற நம்பிக்கையில் காத்திருக்கிறேன்.

ப : உங்களுக்கு ஏற்பட்டிருப்பதை கைனகோ மஸ்ரியா (*Gynaecomastia*) என்று சொல்லுவார்கள். பருவம டையும் காலங்களில் சிலருக்கு இது ஏற் படலாம். இது ஓர் ஆபத்தான அறி குறியோ அல்லது பெண்மைத் தன்மைக்கு அடையாளமோ அல்ல. இந்த மார்பக வளர்ச்சி சிலசமயம் ஒருபக்கத்தில் அதிகமாகவும் மறு பக்கத்தில் குறைவாகவும் காணப்படலாம். ஆண்கள் பருவம டையும் காலத்தில் ஏற்படும் இந்த மார்பக வளர்ச்சி 6 தொடக்கம் 18 மாத காலத்தினுள் எந்தவித சிகிச்சை முறைகளுமே இல்லாமல் குறை வடைந்து மறைந்து விடும். எனவே நீங்கள் உங்களுக்கு ஏற்பட்டுள்ள இந்த நிலைபற்றி கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. இன்னும் சிறிது காலத்தில் குறைவடைந்து மறைந்து விடும். ஒருசிலருக்கு சிலசமயம் இந்த மார்பக வளர்ச்சி இந்த காலப்பகுதி யினுள் முற்றாக மறையாமல் விடக் கூடும். அவர்களுக்கு ஒரு சிறு சத்திர சிகிச்சை மூலம் இதனைக் குறை வடையச் செய்யலாம். 30 வயது கடந்த ஆண்களுக்கு புதிதாக இவ்வாறான மார்பக வளர்ச்சி ஏற்பட்டால் அது சில பாரதூரமான நோய்களான நுரையீரல் புற்று நோய், சிறுநீரகக் கோளாறு, கல்லீரலில் ஏற்படும் நோய்கள், விதை, அதிரீனல் சுரப்பி போன்றவற்றில் ஏற்படும் புற்று நோய்கள் போன்றவற்றின் அறிகுறி யாக இருக்கலாம். சிலசமயம் சில மருந்துப் பாவனைகளாலும் இது ஏற்படலாம். எனவே 30 வயது கடந்த ஆண்களுக்கு புதிதாக இவ்வாறான மார்பக வளர்ச்சி (*Gynaeiomastia*) ஏற்பட்டால் உடனடியாக ஒரு வைத்தியரைச் சந்தித்து சோதனைகள் செய்துகொள்ள வேண்டியது அவசியமாகும். வயது கூடிய ஒரு சிலரில் எந்தவிதமான அடிப்படைக் காரணங்களும் இல்லாமலும் இந்த மார்பக வளர்ச்சி ஏற்படமுடி யும். இவர்களுக்கு தேவை ஏற்படின் சத்திரசிகிச்சை மூலம் இதனைக் குறைவடையச் செய்ய முடியும்.

## சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 10.00–10.30 | சாட். ஷோ | ஆனந்தபவன் | ஆலோசனை நேரம் | பில்லர் | இப்படிக்கு நீங்கள் | | |
| 10.30–11.00 | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | | |
| 11.00–11.30 | சின்னத்திரை | சனிதபதனி | புஷ்பாஞ்சலி | போராங்களே சிமொட்டி.. | இப்படிக்குத் தென்றல் | குட்டிச் சுட்டி | காலைக்கதிர் குட்டிச் சுட்டி |
| 11.30–12.00 | தேனிசை சங்கமம் | தேனிசை சங்கமம் | தேனமுது | சப்தஸ்வரங்கள் | திரை இசை | | |
| 12.00–12.30 | பி.பி.சி. செய்தி | பி.பி.சி. செய்தி | பி.பி.சி. செய்தி | பி.பி.சி. செய்தி | பி.பி.சி. செய்தி | சின்னச் சின்ன ஆசைகள் | |
| 12.30–13.00 | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | | |
| 13.00–13.30 | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சக்தி வீக்கெண்ட் மெட்னி | சக்தி வீக்கெண்ட் மெட்னி |
| | | | | | | | |
| 13.30–14.00 | குலவிளக்கு | குலவிளக்கு | குலவிளக்கு | வணக்கம் தமிழகம் | வணக்கம் தமிழகம் | | |
| 14.00–14.30 | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | | |
| 14.30–15.00 | | | | | | | |
| 15.00–16.00 | | | | | | இளைய கானம் | ரிலாக்ஸ் |
| 16.00–16.30 | | | | | | டொப் 10 மூவிஸ் | டைம் |
| 16.30–17.00 | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | செம்பருத்தி | ஜனனி |
| 17.00–17.30 | பூஞ்சோலை | தில்லானா தில்லானா | தமிழ் கார்ட்டூன் | பெரும் பொட்டு | தமிழ் கார்ட்டூன் | இயந்திரப் பறவை | சனிதபதனி |
| 17.30–18.00 | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | தேனிசை சங்கமம் | தேனிசை சங்கமம் |
| 18.00–18.30 | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | டெப்ஸி உங்கள் ... | தந்திர பூமி | ஆலோசனை நேரம் | இப்படிக்கு நீங்கள் |
| 18.30–19.00 | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | சாட் ஷோ | ஆனந்த பவன் |
| 19.00–19.30 | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | செம்பருத்தி | [illegible] |
| 19.30–20.00 | சின்னத்திரை | சனிதபதனி | புஷ்பாஞ்சலி | போராங்களே சிமொட்டி.. | இப்படிக்குத் தென்றல் | இளைய கானம் | பில்லர் |
| 20.00–20.30 | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் |
| 20.30–21.00 | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | இயந்திரப் பறவை | ஜன்னல் |

# பெண்ணே உனக்கு பயம் வேண்டாம்



''குழப்படி செய்யும் குழந்தையிடம், பிள்ளை பிடிகாரனிடம் பிடித்துக் கொடுப்பேன்'' என்று தாய் பயம் காட்டுகிறார்.

குழந்தைகளைப் பொறுத்த வரை பயம் என்பது பயங்கரமான உருவங்கள் அல்லது செயற்பாடுகளுடன் தொடர்புடையது. ஆனால் பெரியவர்களின் பயம் இதிலிருந்து வேறுபடுகிறது. சிறுசிறு விடயங்களுக்கும் இவர்கள் அதிகமாகப் பயப்படுவார்கள்.

நேரத்திற்கு பஸ் கிடைக்குமா என்பது முதல் எத்தனையோ பயங்கள் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கும்.

ஒரு சாதாரண மனிதனுக்கு ஏற்படும் பயத்தில் 85 சதவீதம் கற்பனையானது. அதில் 45 சதவீத பயம் அநேகமாக தீர்க்கக் கூடியது.

கணவன் ஏசுவாரோ, அப்பா என்ன கூறுவாரோ, அம்மாவுக்கு தெரிந்தால் என்ன நடக்குமோ? என்று எப்போதும் பல பெண்கள் பயந்து கொண்டே இருப்பார்கள்.

பயப்படுவதாக ஒருவர் கூறுவது பெருமைப் படத்தக்க விடயமல்ல. தேவையான விடயங்களுக்கு பய உணர்வு இருக்கலாம். ஆனால் அது ஒரு பெண்ணை முழுமையாக ஆக்கிரமிக்கக் கூடாது.

பயத்தினால் ஏற்படும் முடிவுகள் பாரதூரமானவையாக அமையலாம். சுலபமாக எடுக்கக்கூடிய ஒரு முடிவைக் கூட எடுக்க முடியாமல் போய் விடலாம்.

உங்களுக்கு பத்துச் சந்தர்ப்பங்களில் பயம் ஏற்பட்டால், அவற்றில் எட்டுச் சந்தர்ப்பங்களில் ஏற்படும் பயம் சூழ்நிலை காரணமாக வரலாம்.

நீங்கள் வீடு செல்லும் போது பஸ்ஸுக்கு பிந்தி விடுகிறீர்கள். ஆட்டோவில் போகலாம் என்றால், இரவில் தனியாக ஆட்டோவில் போவது பயம்.

இது தான் சூழ்நிலை பயம். நம்மைச் சுற்றி நடக்கும் சம்பவங்கள் காரணமாக எம் மனதில் சில பயங்கள் ஏற்படுகின்றன.

இதே போன்று எம்மில் பலருக்கு அதிகாரத்தின் மீது பயம் ஏற்படுகிறது. எப்போதும் பயப்படாமல் தமது கருத்துகளை முன் வைக்கும் பெண்களே அதிகமாக சாதிக்கிறார்கள் என்பதை மறந்து விடாதீர்கள். அதிகாரத்திற்கு மரியாதை கொடுக்க வேண்டும். ஆனால் பயப்படுவது அநாவசியம்.

எதிர்மறையான விளைவைத் தரக் கூடிய பயத்தை தூக்கி எறிந்து விடுங்கள். இது உங்கள் வாழ்க்கை. அதன் நன்மைகளும் தீமைகளும் உங்களையே வந்தடையும்.

நியாயமான பயம் உங்களுக்கு ஓர் எச்சரிக்கையைத் தரும். தேவையில்லாத பயம் மனக் குழப்பத்தையே ஏற்படுத்தும்.

## டிப்ஸ்

* சுடு தண்ணீர்ப் போத்தலை வெகுநாட்களுக்கு பாவிக்காமல் வைக்கப் போகிறீர்களா? அப்படியானால் போத்தலினுள் சிறிதளவு சீனியை போட்டு வையுங்கள். எத்தனை நாட்கள் சென்றாலும் துர்வாடை வீசாது.
* அடுப்புக்குப் பின்புறச் சுவரில் நிறக் கடதாசி அல்லது படம் ஒன்றை ஒட்டி விடுங்கள். சமைக்கும் போது எண்ணெய் தெறித்தால் துடைத்து சுத்தம் செய்வது எளிது. பார்க்கவும் அழகாக இருக்கும்.
* பழைய உடுப்புகளைப் பிரித்து எடுங்கள். அவற்றை சரியான அளவில் வெட்டித் தைத்தால், படுக்கை விரிப்புக்கு கீழே மெத்தை மீது விரித்து விடலாம்.
* சமையலறையில் இருக்கும் பொருட்கள் மீது பெயர் எழுதும் போது சற்று சுவாரஸ்யமாக எழுதுங்கள். உதாரணமாக சீனி என்பதற்கு பதிலாக 'ஐ'ட Sweet என்று குறிப்பிடலாம்.

# சந்தோஷம் தானே வரும்



'நீ என்னை கவனிக்க வேண்டும், அல்லது கவனிக்க வைப்பேன்' என்ற நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் ஒவ்வொரு மனிதனுக்கும் இயல்பாகவே வந்து விடுகிறன. ஒவ்வொரு உயிரும் தன்னுடைய இருப்பை மற்றவர் அங்கீகரிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறது.

தன்னை வெளிக்காட்டிக் கொள்ள ஒவ்வொரு உயிரும் போராடுகிறது. கணவன் — மனைவி உறவிலும் காதல் வாழ்க்கையிலும் இப்போராட்டம் இன்னும் அதிகமாக இருக்கிறது.

எமக்கு அன்பும் அங்கீகாரமும் தருபவர் மீது அதிக பிரியம் ஏற்படுகிறது. அந்த அங்கீகாரம் சற்றுக் குறைந்தாலும் சில சந்தர்ப்பங்களில் மனம் கவலைப்படும்.

அவர் என் மீது உண்மையான அன்பை வைக்கவில்லையா? என்னிடம் ஒரு வார்த்தை கூறியிருக்கலாமே, நான் முக்கியமில்லைப் போலும் என்று உள் மனம் பல விதமாகப் பேசும்.

எப்போதும் இல்லாவிட்டாலும் அவ்வப்போது கூறும் பாராட்டுகளும் அன்பாகக் கொடுக்கும் பரிசுகளும் சந்தோஷத்தை வரவழைக்கும். மற்றவர் எம்மை அங்கீகரிக்கிறார் என்பதை உணரும் போது புத்துணர்ச்சி ஏற்படும்.

பொதுவாக எம்மை அன்பாக வரவேற்கும் உறவினரின் வீட்டுக்கே போக விரும்புவோம். நன்றாகப் பேசும் நண்பனுடன் தான் தொலைபேசியில் தொடர்பு கொள்வோம்.

ஓரிரு நிமிடங்கள் அல்லது மணித்தியாலங்களுக்கு எம்முடன் இருக்கப் போகிறவர்களிடமே இப்படி நடந்து கொள்கின்றோம். அப்படியாயின் ஒன்றாக வாழ்ந்து சுக துக்கங்களில் பங்குகொள்பவர்கள் எவ்வளவு முக்கியமானவர்கள் என்பதைச் சற்று யோசித்துப் பாருங்கள்.

காதல் அல்லது திருமண வாழ்க்கைக்குள் நுழையும் ஒவ்வொருவரும் மகிழ்ச்சியையே எதிர்பார்க்கிறார்கள். அது ஒரு மந்திர வார்த்தையோ, எட்ட முடியாத உயரத்தில் உள்ள பொருளோ அல்ல. எம் மனதில் பொதிந்துள்ள விலைமதிப்பற்ற உணர்வு தான் மகிழ்ச்சி.

வாழ்வின் நிமிடங்களை இனிமையான இசையாக மாற்றிக் கொள்வது உங்கள் கைகளில் தான் இருக்கிறது. ஒருவரை மற்றவர் அங்கீகரித்து வாழும் போது மனம் நிறைவடையும். சந்தோஷம் தானே தேடி வரும்.

# சீரற்ற மாதவிலக்கா? வைத்தியரை நாடுங்கள்



பெண்களுக்கு ஏற்படும் மாதவிலக்கை பலர் அசௌகரியமான ஒன்றாகவே நினைக்கிறார்கள். இயற்கையாக ஏற்படும் இந்நிகழ்வு பலருக்கு வேதனையையும் பிரச்சினைகளையும் ஏற்படுத்துவதே இதற்குக் காரணம்.

அதே போன்று சில பெண்களுக்கு மாதவிலக்கு சக்கரம் சரியாக தொழிற்படுவதில்லை. குறிப்பிட்டுக் கூறக் கூடிய சில காரணங்களால் இச் சக்கரம் சீரற்றுப் போகலாம்.

மாதவிலக்கு சக்கரம் சீரற்று செயற்படக் கூடிய சூழ்நிலைகளையும் அவற்றிற்கான காரணங்களையும் அறிந்து வைத்திருங்கள்.

சூழ்நிலை : புதிய தொழில் ஆரம்பித்த உடன், சுகயீனத்தின் பின்பு, மன அழுத்தமாக அல்லது கவலையாக இருக்கும் சந்தர்ப்பம்.

காரணம் : அதிக மன அழுத்தம் ஏற்பட்டால் ஹோர்மோனிலும் மாற்றம் உண்டாகும். மூன்று மாதங்களுக்கு இந்த நிலைமை தொடர்ந்தால் வைத்தியரை நாடவும்.

சூழ்நிலை : குறிப்பிட்ட ஒரு வகை மருந்தை பாவிக்கும் போது மாதவிலக்கு நின்று விடுகிறது.

காரணம் : இது நீங்கள் உட்கொள்ளும் மருந்தின் ஒரு பின் விளைவு.

சூழ்நிலை : உணவுக் கட்டுப்பாடு அல்லது உடற்பயிற்சி மூலம் உடல் நிறை குறைந்த பின்பு மாதவிலக்கு தடைப்படல்.

காரணம் : உடலில் ஏற்பட்ட திடீர் மாற்றத்துடன் ஹோமோனும் தன் இயக்கத்தை மாற்றிக் கொண்டுள்ளது.


சூழ்நிலை : உடல் உறவு கொண்டு இரண்டு வாரங்களுக்குள் மாதவிலக்கு நின்று விடல்.

காரணம் : கர்ப்பம்

சூழ்நிலை : கருத்தடை மாத்திரை உபயோகிப்பதை நிறுத்திய பின்பு மாதவிலக்கு இல்லாதிருத்தல்.

காரணம் : இம் மாத்திரைகளை பயன்படுத்தும் போது உடலில் ஹோர்மோன்களில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. அவை மீண்டும் சீராகுவதற்கு ஓரிரு மாதங்கள் செல்லும்.

எந்தக் காரணமாக இருந்தாலும் மாதவிலக்கு நின்று விட்டால் அல்லது ஏதேனும் மாறுதல்கள் ஏற்பட்டால் வைத்தியரின் ஆலோசனையைப் பெற வேண்டும். ஏனெனில் இது பல் வேறு நோய்களின் ஆரம்பமாகவும் இருக்கலாம்.




# சத்துள்ள பச்சைக் காய்கறிகள்

காய்கறிகள் உடலுக்கு அத்தியாவசியமானவை என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஆனால் அவற்றை சரியான அளவில் உண்ணும் ஆர்வம் தான் எம்மில் பலருக்கு இல்லை.

உங்கள் உணவு அட்டவணையிலும் காய்கறிகளை சேர்த்துக்கொள்ள சில பயனுள்ள டிப்ஸ்

* ஒரே நாளில் சத்து கிடைத்துவிடும் என நினைக்காமல், தினமும் காய்கறிகளை உணவில் சேர்த்து வர வேண்டும்.
* அந்தந்தக் காலங்களில் அதிகளவில் கிடைக்கும் காய்கறிகளை உபயோகித்தால் செலவு குறைவு—
* நார்ச்சத்துள்ள காய்கறிகளை அதிகமாக உணவில் சேர்த்துக்கொள்ளுங்கள்.
* பச்சையாக சாப்பிடக் கூடிய உணவுகளை அப்படியே உண்ணுங்கள். இதனால் பற்கள் உறுதியையும் வெண்மையையும் பெறுகின்றன.
* காய்கறிகளை எப்போதும் பெரிய துண்டுகளாக வெட்டிச் சமைக்கவும்.
* குறைந்தளவு தண்ணீரை பயன்படுத்தி, காய்கறிகளை குறைந்த நேரம் வேக வைத்தால் போதுமானது.
* ஒரே வகையான காய்கறிகளை தொடர்ந்தும் சமைப்பதைத் தவிருங்கள். உயிர்ச்சத்துகள், கனிப்பொருள், இரும்புச் சத்து முதலான அனைத்து சத்துகளும் உள்ளடங்கும் வகையில் வெவ்வேறு வகையான காய்கறிகளை தெரிவு செய்யவும்.

உடல் உறுதிக்கும் அறிவு வளர்ச்சிக்கும் தேவையான சத்து ஆகாரங்களை பெறக்கூடிய இலகுவான வழி காய் கறிகள் தான்.






# குழந்தைகளுடன் அமர்ந்து உண்ணுங்கள்

சிறு பிள்ளைகளுக்கு உணவு ஊட்டி முடிப்பதற்குள் பெரிய ரகளையே வீட்டில் நடந்து முடிந்து விடும். சாப்பாட்டுப் பீங்கானை பார்த்த உடனேயே கத்தி அழும் குழந்தைகளும் இருக்கிறார்கள்.

குழந்தைகள் சில சாப்பாடுகளை வெறுப்பதற்குப் பெற்றோரும் காரணமாகிறார்கள். ஏனென்றால் பெரியவர்கள் பழக்கிவிடும் உணவைத்தானே குழந்தைகள் சாப்பிடுகிறார்கள்.

என் மகன் கேக் மட்டும் தான் பாடசாலைக்குக் கொண்டு போவான். குடிப்பதற்கு தண்ணீர் எடுத்துப் போகவே மாட்டான் என்றெல்லாம் அம்மாமார் அடிக்கடி கூறுவதுண்டு.

இவ்வாறான நிலைமைகளை தவிர்ப்பதற்கு ஆரம்பத்திலேயே சற்றுக் கவனமாக இருக்க வேண்டும். குழந்தைப் பருவத்திலிருந்தே அவர்களுக்குச் சாப்பிடக் கொடுக்க உகந்த அனைத்து உணவுகளையும் பழக்கி விட வேண்டும்.

பெரியவர்கள் சாப்பிடும் போது பிள்ளைகளுக்கும் அதே மேசையில் உணவு பரிமாற வேண்டும். ஆரம்பத்தில் உணவை வெளியே சிந்தித்தான் பிள்ளைகள் சாப்பிடுவார்கள். பொறுமையாக இருங்கள். அன்பாகத் திருத்தி விடுங்கள். கேட்டுக் கொள்வார்கள்.

நாட்கள் செல்லச் செல்ல குழந்தை தானே தனக்கு வேண்டிய உணவை கேட்டுச் சாப்பிடும். அவர்களின் போக்கிலேயே சற்று விட்டுப் பிடியுங்கள்.

இதனால் சிறு வயதிலேயே பிள்ளைகளின் மனதில் தன்நம்பிக்கை வளரும். ஆனால் அவர்களுக்குள் எந்தக் கட்டுப்பாட்டையும் திணிக்காதீர்கள்.

குழந்தைக்குப் பாதையைக் காட்டுங்கள்.

சற்றுத் தூரம் கையை பிடித்து நடக்கப் பழக்குங்கள். விழுந்து எழுந்து நடக்க வேண்டியது குழந்தையின் பொறுப்பு. குழந்தைக்காக நீங்கள் நடந்தால் பயன் இல்லை தானே!

# விருப்பு வாக்கை அதிகரிக்க வித்தை காட்டும் சூரர்கள்

## யாழ்ப்பாணத்தில் அதனால் உள்வீட்டுச் சண்டை

**வ**ரும்போதே மாஸ்டர் தமிழக வார இதழ் ஒன்றை கையில் சுருட்டிப் பிடித்தபடி, வந்தார்.

''என்ன மாஸ்டர்? கையில் புத்தகம்?'' கேட்டான் டானியல்.

''நாங்கள் பெருமைப்படும்படி ஒரு விஷயம் இதில் போட்டிருக்கு. அதுதான் எடுத்துக் கொண்டு வந்தனான். உங்களுக்குக் காட்டுவம்'' என்று கூறியபடியே அந்த இதழைப்பிரித்தார் மாஸ்டர்.

''பட்டதை சொல்லியிருக்கினமோ?'' கேட்டாள் சின்னாச்சி.

அதற்கு விடை சொல்லாமல். ''இது போனமாசம் 17 ஆம் திகதி வெளிவந்த 'குமுதம்' வார இதழ். இதில் 'அரசு பதில்கள்' என்ற பகுதி வாசகர்களிடம் வரவேற்புப் பெற்றது. அதில் ஒரு வாசகர் 'நல்ல தமிழை எங்கே கேட்கலாம்? என்று கேள்வி எழுப்பியிருக்கிறார். இதற்கு அரசு பதிலில், அதற்கு துப்பாக்கிச் சத்தங்களினூடே கொஞ்சம் கடல் கடந்து செல்ல வேண்டும்' என்று கூறப்பட்டிருக்கு. இந்தக் கேள்விக்கு வாரந்தோறும் வழங்கப்படும் முதல் பரிசு கிடைச்சிருக்கு. நல்ல தமிழை கேட்பதற்கு இலங்கைக்குச் செல்ல வேண்டும் என்பதைத்தான் பூடகமாகத் தெரிவிச்சிருக்கினம்'' என்றார் மாஸ்டர்.

''கேட்க சந்தோஷமாகத் தான் இருக்கு. அதே நேரம் இன்னொரு பயமும் மனதில் எழும்புது'' குறுக்குச்சால் ஓட்டினார் விநாசியர்.

''என்னண்ணை, குண்டைத் தூக்கிப் போடுறியள்.'' கவலையாய் கேட்டான் லோகன்.

''நல்ல தமிழைக் கேட்டு மகிழ இங்கு போகச் சொல்லுற 'குமுதம்' கேவலமான தமிழ் அரசியல் வாதிகளைப் பார்க்கவும் இங்குதான் போக வேண்டும் என்று சொல்லும் காலம் வந்து விடுமோ? என்று தான் பயமாக இருக்கு!'' அச்சத்தை வெளியிட்டார் விநாசியர்.

''உந்த ஆள் அரசியல் வாதியாகியிருக்கலாம். அவை மாதிரி குழப்பல் கதை நல்லா கதைக்குது'' சினந்தாள் சின்னாச்சி.

''ஆனால், காலை வாரிவிடும் பழக்கம் எனக்கில்லை. ஆனபடியால் அரசியல் ஒத்துவராது'' சின்னாச்சிக் குப் பதிலடி கொடுத்தார் விநாசியர்.

''சின்னாச்சியை விட்டுப் போட்டு விஷயத்தைச் சொல்லுங்கோ விநாசியண்ணை.'' அவசரப்பட்டான் டானியல்.

எல்லாம் எங்கடை கூட்டமைப்பு குத்து வெட்டுத் தான்! பீடிகை போட்ட விநாசியர் தொடர்ந்தார்.

''சாகிறதுக்கு நாங்கள், பதவிக்கு நீங்களா?'' என்று கூட்டணியின் ஆனந்தமான வரையும், நகரத்தந்தையையும் கனபேர் உலுக்குகினமாம்!

'ஏன் என்ன நடந்ததாம்?'

''போன தேர்தலில் போட்டியிட 'அனுமதியளிக்க வேண்டியவர்களிடம், இருந்து எந்த வித சிக்னலும் வராததால் பெரிய கைகள் போட்டியிடத் தயங்கினவை. பிறகு தேர்தலில் பதவிகிடைத்த பிறகு ஆனந்தமானவர் கொழும்பே கதி என்று இருந்து போட்டார். சிலர் தான் யாழ்ப்பாணத்திலை தங்கடை நேரத்தை செலவிட்டவை. ஆனால் இப்ப பிரச்சினையில்லை என்று தெரிந்த பிறகு, தேர்தலில் போட்டியிட ஆனந்தமானவர் தன்னுடைய ஆள்களில் பலரைத் திணித்துப் போட்டாராம்.''

''இதனால், உயிரைப் பணயம் வைச்சு தேர்தலில் நாங்கள் நிற்க, எம்.பியாகி கொழும்புக்குப் போய் நேர்மையாக, திடமான முடிவும் எடுக்காமல், அய்யாவுக்கும், அம்மாவுக்கும் விலாங்கு மாதிரி தலையையும் வாலையையும் காட்டிக் கொண்டு, மதில் மேல் பூனையாக, காலத்தை ஓட்டின ஆனந்தமானவர், இப்ப பிரச்சினையில்லாத் தேர்தல் என்று வந்தவுடன் எங்களைப் புறக்கணிக்கிறார் என்று கூட்டணியிலை கனபேர் புலம்புகினமாம்'' என்று மூச்சு வாங்கிக் கொண்டார் விநாசியர்.

''கூட்டமைப்பிலை 4 கட்சி இருக்கு, அப்ப அந்தந்தக் கட்சிகளின் தலைமைகளுக்கு இடம் கொடுத்தால், ஒவ்வொரு கட்சி சார்பிலும் போன முறை கேட்டவையிலை சிலர் கேட்க முடியாமல் போறது நியாயம் தானே? இதுக்கு அந்த ஆள் மீது ஏன் வீணாகப் பழி போடுகினம்'' என்றார் மாஸ்டர்.

''இந்த மாதிரி நானும் யோசிச்சனான்தான் மாஸ்டர். ஆனால் இந்தப் பிரச்சினை மற்றக் கட்சிகளில் எழும்பாமல் கூட்டணியில் மட்டும் தான் கிளம்பியிருக்கு. மற்ற 3 கட்சிகளிலும் நீங்கள் சொல்லுற நியாயத்தின் படிதான் அந்த கட்சிகளிலை இருக்கிறவை யோசிச்சு, ஒற்றுமையாகத் தேர்தல் பிரசாரத்திலை ஈடுபடுகினம். ஆனால் கூட்டணியிலை மட்டும் தானே இந்தப் பிரச்சினை வெடிச்சிருக்கு'' குட்டையைக் குழப்பினார் விநாசியர்.

''இந்த விஷயம் நானும் கேள்விப்பட்டனான். இதுக்குக் காரணம் நகரத் தந்தையாக இருப்பவர், நாடாளுமன்றத் தேர்தலிலும் போட்டியிடுவதால் தான் கூட்டணிக்குள்ளை குத்து வெட்டாம்'' கேள்விப்பட்டதைக் கூறத்தொடங்கினான் டானியல்.

''நகரத் தந்தையாகப் பதவியேற்ற பின்னர் கொழும்பிலேயே தங்கிதனது தொழில் வசதிகளைப் பெருக்கிக் கொண்டு மாசக் கடைசியிலையும், அடுத்த மாசத் தொடக்கத்திலையும் இரண்டு கூட்டத்தையும் ஒன்றாகவே நடத்திப் போட்டுபோனவர். நாடாளுமன்ற உறுப்பினரானால் பிறகு அடுத்த தேர்தலில் தான் இங்கு வருவார் என்று கூட்டணிக்குள்ளை முணுமுணுக்கினமாம்.''

''இதே நேரம், வேட்பாளர் பட்டியல் அறிவிக்க முன்னர், ஒரு இழுபறி நடந்ததாம், இவர் தேர்தலில் நிற்பதென்றால் நகரத்தந்தை பதவியை வேறொருவருக்கு விட்டுக் கொடுத்துப் போட்டு, பிறகு தேர்தலிலை நிற்கட்டும். அதை விட்டுப் போட்டு, இந்தப் பதவியையும் வைச்சுக் கொண்டு தேர்தலிலையும் நிற்பினம், தேர்தலிலை வென்றால் அந்தப் பதவி இல்லாட்டி இந்தப் பதவி என்று இவை வசதிப்படி செய்வினம். உந்த ஆட்டங்களை எல்லாம் நாங்கள் வாயிலை விரலை சூப்பிக் கொண்டு பார்க்க வேணுமோ?'' என்று கூட்டணிக்குள்ளை குரல் எழும்பினதாம்.

''ஆனால் ஆனந்தமானவர், யாரின் பெயரைப் பயன் படுத்தியோ பிரச்சினையை அடக்கிப் போட்டாராம்'' சொல்லி முடித்தான் டானியல்.

### தேரடி அரட்டை



''அப்ப விருப்பு வாக்கு அடிப்படையிலை ஆனந்தமானவரும், நகரத் தந்தையும் பதவியை பிடிக்கிறது குதிரைக் கொம்புதான் என்று சொல்லுறியள்'', அங்கலாய்த்தார் மாஸ்டர்.

''நான் கேள்விப்பட்ட வரையிலை குதிரை முகம் விட்ட ஊர்க்காரர் உட்பட வேறு சிலர் விருப்பு வாக்கிலை அவைக்குள்ளை முன்னணியாம், பிறகு மாமனிதரின் ஆள்களாம், இப்படி விருப்பு வாக்கிலை மற்றவை முன்னணியிலை நிற்பதால், தங்கடை பாடு ததிங்கிணத் தோம் தான் என்று ஆனந்தமான வரும், நகரத் தந்தையும் ஆடிப்போய் இருக்கினமாம்'' என்றான் டானியல்.

''அதுதான் அவை வித்தை காட்டியிருக்கினம்'' புதுக்கதைக்கு சுழி போட்டான் லோகன்.

''என்ன வித்தை மச்சான்?'' சூரியன் உதிக்கிற அலுவலகத்திலை ஊடகவியலாளர் சிலர் ஆனந்தமானவர், நகரத்தந்தை உட்பட சில தலைகளோடை கதைச்சுக்கொண்டு இருந்தவையாம்.''

அப்பஒர் ஊடகவியலாளர் போனைத் தூக்கிமடியிலை வச்சுக் கொண்டு மாமனிதரின் மகனுக்கு போன் பண்ணினாராம்.

''நீங்கள் கொழும்பிலை தமிழ் ஆள்களை வீட்டுக்கை விடுறதில்லையாம், யாழ்ப்பாணம் வந்ததில்லையாம். இப்பதான் தேர்தலிலை நிற்க வந்திருக்கிறியளாம். இனிமேல் தமிழாக்களோடை பழகுங்கோ என்ற ரீதியிலை அந்தப் பத்திரிகையாளர் சட்டம்படித்த புகழ்பெற்ற குடும்பத்தைச் சேர்ந்த மாமனிதர் மகனுக்கு அறிவுரைகளை அள்ளி வழங்கினாராம்''

''அப்ப முன்னாலை இருந்த தலைகள் ஒன்றும் பேசவில்லையோ?'' கேட்டார் மாஸ்டர்.

''அதுதான் இல்லை. இப்படி கதைக்க வேண்டாம். அதுவும் எங்கடை அலுவலகத்திலை இருந்து கொண்டு என்று கூறியிருக்கலாம். அவைக்கும் மனதுக்குள்ளை சிரிச்சிருப்பினம் போலை. பேசாமல் இருந்திட்டினம்'' என்று, லோகன் கூறி முடிக்கவும்,

''அறிவு கெட்ட கதைகளாலை தான் நாங்கள் இன்னமும் அடிமையாக இருக்கிறம்'' சீறி வந்தது சின்னாச்சியின் குரல்.

அனைவரும் திரும்பிப்பார்க்க, பேசத் தொடங்கினாள் சின்னாச்சி.

''பாட்டன் செய்த முயற்சியாலைதான் தமிழ் மண்ணிலை 3 தொழிற்சாலைகள் வந்தன. சிங்கத்தின்ரை குகைக்குள்ளை இருந்து கொண்டே பயப்படாமல் உறுமியதால் தான் தகப்பனின் உயிர் போனது. அதுக்கும் பயப்படாமல் அந்தத் தம்பி அரசியலுக்கு வந்திருக்கு. அதை பார்க்காமல், இவ்வளவு நாளும் எங்கை போனனீர் என்று கேட்டால் அதை விட முட்டாள்த்தனம் இருக்கோ. இவை தேர்தல் நேரத்திலை இருந்து போட்டு கொழும்பிலை போய் காவலுக்குள்ளை முடங்கினதை சனம் மறக்கேல்லை.

''பொன்னர் அரசியலில் இருக்கேக்கை குமார் அதுக்கு வரேல்லை. அவர் போன பிறகு தான் அரசியலுக்கு வந்த குமார், பயண அனுமதிக்கு எதிராக வழக்கு போட்டது உட்பட எங்கடை குரலை வெளிநாடுகளுக்கு கேட்கச் செய்தவர். அதனாலேயே உயிரையும் கொடுத்து மாமனிதர் ஆகினவர். அவருக்குப் பிறகு இப்ப அவரின் மகன் வந்திருக்கிறார். மற்றவை மட்டும் லண்டனிலையும், தமிழ் நாட்டிலையும் பேசாமல் இருந்தவையை அரசியலுக்கு இழுக்கலாம், அந்தத் தம்பி வரக் கூடாதாமோ?''

''உந்த இழுபறிகளாலை கடைசியா எங்களுக்குத் தான் கேடு'' கவலையுடன் சொன்னார் மாஸ்டர்.

''ஒரு கெடுதலும் வரக்கூடாதென்றால், முடிவுகளை திடமாக எடுத்து, பேரினவாத கட்சிகளோடை நசிந்து நெளிந்து நடக்காது. எங்கடை ஆள்கள் யார் என்று பார்த்து அவைக்கு விருப்பு வாக்கை போடவேணும்! கூறியபடியே கடலைக்கடையைக் கட்டினாள் சின்னாச்சி.

— ஏகலைவன்



''நல்லா பேசிப்புருந்த நம்ம தலைவர் ஏன்டா 'சோடா' குடிச்சதும் உளறிக் கொட்டுறாரு....?''

''சோடான்னு சொல்லிஎவனோ கசிப்ப ஊத்திக் கொடுத்துட்டானுங்க''


இருபாலை கிழக்கு மண்டாக்குளம்பதி
அருள்மிகு நாச்சியம்பாள் தேவஸ்தானம்

மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம்

அம்பிகை அடியார்களே!

ஸ்வஸ்திஸ்ரீ சுழும் மங்களகரமான விஷு வருடம் ஐப்பசி மாதம் 25ஆம் நாள் (11.11.2001) ஞாயிற்றுக்கிழமை காலை 8.47 மணி முதல் 9.34 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் அம்பாளுக்கும் ஏனைய பரிவாரமூர்த்திகளுக்கும் கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கூடியுள்ளதால் அடியார்கள் வந்து தரிசித்துத் தொண்டுகள் புரிந்து நாச்சியம்பாளின் திருவருளைப் பெற்றுக்கொள்ளும்வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

ஆகம பூர்வமான கும்பாபிஷேகக் கிரியைகள்

* ஐப்பசி 21ஆம் நாள் (07.11.2001) புதன்கிழமை சூரிய உதயத்தில் கர்மாரம்பம்
* ஐப்பசி 22ஆம் நாள் (08.11.2001) வியாழக்கிழமை ஹோமம் முதலியனவும் வாஸ்துசாந்தியும்
* ஐப்பசி 23ஆம் நாள் (09.11.2001), வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணி முதல் மிருத்சங்கிரணம் அங்குரார்ப்பணம் ஆச்சாரியரட்சாபந்தனம், யாக பூஜை, ஹோமம் சிற்பாசாரியார் சம்பாவனை.
* ஐப்பசி 24ஆம் நாள் சனிக்கிழமை (10.11.2001) காலை 10.00 மணி முதல் 3.00 மணி வரை எண்ணெய்க் காப்பு சாத்துதல்.
* ஐப்பசி 25ஆம் நாள் (11.11.2001) ஞாயிற்றுக்கிழமை காலை 8.15 மணிக்கு தூபி அபிஷேகம் தொடர்ந்து 8.47 -- 9.34 வரையுள்ள சுபவேளையில் மஹாகும்பாபிஷேகம் நடைபெறும்.

மகாகும்பாபிஷேக பிரதமகுரு
ஆகமகிரியா ஜோதி, துவஜாரோஹண துரந்தரர்
சிவஸ்ரீ சதா. மகாலிங்க சிவக்குருக்கள்
(அரசடி விநாயகர் தேவஸ்தானம், நாயன்மார்கட்டு)

மண்டலாபிஷேகம் : 15 தினங்கள் நடைபெறும்.
கும்பாபிஷேகம் உபயம்: A.M.தனநாயகம் A.M.J.ரான்ஸ்போட் சேவிஸ், 102/4, ஆட்டுப்பட்டித்தெரு, கொழும்பு — 13, ஸ்ரீலங்கா.

— ஆலயபரிபாலன சபை.

(JAF-95055)

# புளொட் தனித்து நிற்பதால் வன்னியில் வாக்கு சிதறுமா?

**நா**டுமுழுவதும் தேர்தல் பிரசாரம் சூடு பிடிக்க ஆரம்பித்து விட்டது. சூடு பிடித்த கையோடேயே வன்முறைகளும் ஆரம்பித்து விட்டன. இம்முறை 196 ஆசனங்களுக்கு 4610 பேர் போட்டியிடுகிறார்கள்.

வன்னி தேர்தல் மாவட்டத்தைப் பொறுத்த வரை இம்முறை 171 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். 6 பேர் தெரிவு செய்யப்படுவர்.

வன்னி மாவட்டதில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர் 218,681 பேர், இவர்களில் வவுனியா மாவட்டத்தில் 94,853 பேரும் மன்னார் மாவட்டத்தில் 70,850 பேரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 53,158 பேரும் உள்ளனர்.

வன்னி தேர்தல் மாவட்ட வாக்காளர்களில் ஒரு பகுதியினர் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலும் இன்னொரு பகுதியினர் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதியிலும் வாழ்கின்றனர்.

இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் உள்ள வாக்காளர்களுக்காக கடந்த தடவை போன்று இம்முறையும் கொத்தணி வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட உள்ளன.

இம்முறை நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு களத்தில் இறங்கி இருப்பதால் வன்னி தேர்தல் களமும் சூடு பிடிக்க ஆரம்பித்துள்ளது.

அதுவும் புளொட் அமைப்பு தனது கோட்டை என்று கருதும் இடத்தில் இந்த கூட்டமைப்பு, புளொட்டை களத்தில் சந்திக்கிறது.

கடந்த தேர்தலில் வன்னித் தொகுதியில் புளொட் அமைப்பு ஓர் ஆசானத்தையாவது கைப்பற்றவில்லை. தற்பொழுது நான்கு தமிழ்க் கட்சிகள் கூட்டமைப்பில் உள்ள ரெலோ கடந்த தேர்தலில் மூன்று ஆசனங்களைப் பெற்றிருந்தது.

நான்கு கட்சிகள் கூட்டமைப்புக்கு எதிராக புளொட் ஏற்கனவே தனது தீவிர பிரசாரத்தை ஆரம்பித்து விட்டது.

1994 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் விட்ட சில தவறுகளினாலேயே கடந்த தேர்தலில் புளொட்டினால் ஓர் ஆசனத்தையும் பெற முடியாது போனதாக புளொட் அமைப்பின் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். இம்முறை கூட்டமைப்பு போட்டியிடுவதால் புளொட் அமைப்புக்கு மீண்டும் சோதனை காலம்.

வாக்குகள் சிதறுண்டு போவதை தடுப்பதே தமது கூட்டமைப்பின் முக்கிய நோக்கம் என்று கூட்டமைப்பின் பேச்சாளர் ஒருவர் வேட்பு மனுத் தாக்கலின் பின்பு தெரிவித்தார்.

புளொட் அமைப்பையும் சேர்த்து கூட்டமைப்பை உருவாக்கி இருக்கலாம் என்ற கருத்து வன்னி வாக்காளர்களிடம் நிலவி வருகிறது.

ஐ.தே.க இம்முறை முன்னொருபோதும் இல்லாதவாறு நான்கு தமிழ் வேட்பாளர்களையும் நான்கு முஸ்லிம் வேட்பாளர்களையும் ஒரு சிங்கள வேட்பாளரையும் களத்தில் இறக்கி உள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணியும் இம் முறை வன்னியில் போட்டியிடுகிறது. கடந்த தேர்தலின் போது பெரும் கஷ்டத்தின் பேரில் ஓர் ஆசனத்தை அது கைப்பற்றியது.

ஐ.தே.க முஸ்லிம் காங்கிரஸ் கூட்டு, வன்னி தேர்தல் மாவட்டத்திலும் சிறிய சலசலப்பை எற்படுத்தி விட்டுள்ளது.

தான் நீண்டகாலமாக ஐ.தே.க ஆதரவாளராக இருந்ததாகவும் முஸ்லிம் காங்கிரஸுடன் ஐ.தே.க கூட்டு வைத்த பின்னர் தன்னைக் கை விட்டு விட்டதாகவும் இம் முறை சுயேச்சைக் குழுவில் போட்டியிடும் ஆப்தீன் தெரிவிக்கிறார்.

வவுனியா மாவட்ட முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப் படுத்த ஒரு முஸ்லிமாவது ஐ.தே.கவினால் நிறுத்தப்படவில்லை. இதற்கு பிரதான காரணம் உயர் மட்டங்கள் மேற்கொண்ட சதிதான். இம்முறை வன்னி தேர்தல் மாவட்டத்தில் நான்கு முஸ்லிம்களுக்கு இடம் கொடுக்கப்பட்டுள்ளது. இவர்களில் மூன்று பேர் மன்னாரையும், ஒருவர் முல்லைத் தீவையும் சேர்ந்தவர்கள் என்றும் அவர் சொன்னார்.

— மகாமுனி

# கவிதைச் சமர்

## கவிதைக்கும் கவிதைக்கும் கவி—தைக்கும்

போலியானவனே ஏன் என்னை வம்புக்கு
இழுக்கின்றாய் பூ மாலை சூடுகின்றாய்
நேற்றுவரை பெண் இனம் உச்சி
குளிர்ந்தது நிஜம்
நக்கீரன் போட்டானே ஒரு போடு
நெற்றிக்கண் சுட்ட தீ அணையவில்லை
ஈரும் பேனும் கலந்த சொடுகு என்றான்
வாச(நெய்)னை சம்(பூ) கலந்த
செயற்கை தான் என் கூந்தல்

இரவில் கவி மயக்கம் விடியலில்
உன் புத்தி தெளியும் தேன் வழியும்
இதழ் என்று சொன்ன செவ்வாய்
மான் விழி என்று மயங்கி நின்ற நீ
செம்பூச்சுமை போட்ட பொய் பூ என்றாய்

என் காதுகளில் இன்னும் ரீங்காரம்
மாம்பூவில் மொய்த்த நீ கருவண்டு
காயாகி கனியாகி மண்ணில் விழுந்த பின்
துளைத்து வெளியேறி செம்பருத்தி பூ
தேன் சுவைக்கும் காமன் நீ

அழைக்காதே பெண்மைக்குள் ஒரு
புனிதம் தூங்குகிறது
பட்டு புடவை தான் நெய்த நூல் சேலை
அவிழ்க்காதே தூக்கம் கலைந்து விடும்

வெண் நிலவை புதைத்து விடு பூமிக்குள்
மலரை நீந்த விடு வானத்தில்
நதியை சுருக்கிவிடு மனசுக்குள்
நிலவும் சிரிக்காது மலரும் பூக்காது
நதியும் ஓடாது அது உனக்கு மருந்து
லோ லோ வென்று அலையாதே
சும்மா தூக்காதே காவடி
மெடோனா பாடல்கள் கேட்காதே
பெண்ணுக்கு பின் தாவாதே
வயசுக்கு வந்தவனா வராதவனா
கவிதை கிழந்துக்கும் வரும்
பஸ்ஸிலே கன்னியை பின்னால் உரசும்

என் மனசை கொடுத்து விட்டேன்
அத்தானுக்கு
வேலி கட்டி விட்டார் வானத்திற்கு
தாலி கட்டு மட்டும் காத்திருக்கிறேன்
மிச்சத்திற்கு
நீயும் வந்தால் உனக்கும் ஒரு
பிடி சோறு.

— பால நாகம்மா

## சொல்லும், முறையோ சொல்லும்?

(தி. திருக்குமரனின் கவிதைக்கு பதில் கவிதை)

பித்தாகிப் பெண்பின்னால் திரிவதுதான் பிழையாம்
பின்னிலைப் பிடித்திழுத்தல் முறையற்ற வழியாம்
சுத்தாகக் கவி கேட்டுச் சண்டையிடும் கவிஞர்
தந்தகவி என்ன வென்றால், ஒன்றுமற்ற சரையாம்!

சீர்தளைகள் கேட்டபடி திருக்குமரன் வந்தார் — அவர்
செய்தகவி தன்னகத்தே கொண்டபிழை அந்தோ!
ஊரறியும், கற்றவரும் உணர்ந்திருப்ப ரதனை
உண்மையடா, உண்மையடா, உண்மையிலும் உண்மை!

நாட்டுநிலை மோசமது, நானிலமும் அறியும்
நல்லகவி சொல்பவரின் உள்ளமதில் சரியும்
வாட்டங்களை பாடுவது காலமதன் தேவை,
உருகுகவி சொல்வதுதான் உதவா ஒரு வேலை!

பட்டவற்றை மனத்திருந்து பாடுபவன் புலவன்;
பாடியதை கேட்டெழுந்து ஆடுபவன் மறவன்;
கட்டுக் கோப்பாய்ப் பெண்ணழகை கவிதையிலே
சொன்னால்
காய்தல் பிழை! பாடுபவன் சுதந்திரத்தின் எல்லை!

— கி.குருபரன், கொழும்பு.

## தூங்காத கவிதை

(லோ. துஷிகரன், கி. குருபரன், வாயுபுத்திரன் போன்றோரின் கவிதைகளுக்குப் பதில் கவிதை)

பெருவிரல் அழுத்தத்தின்
போதாமைக்குள் இருந்து
என் பேனா முணு முணுக்கின்றது!
சுட்டு விரல் மடித்து
நிமிர்த்தும் கணங்களை
கவிதையாக்க வேண்டும் என்ற
ஆதங்கம் அதற்கு!

செதுக்கிய சிலைக்கும் சிற்பத்துக்கும்
குளிப்பாட்டிச் சேலைகட்டி, மாலையிட்டு
திருவிழாக் காணும் மாந்தரிடை
என்பு தோல் போர்த்த உடம்பை
யார் தான்
எண்ணாமல் விடுவார்கள்?

அழகு, அணிகலன் ஆபாசம் எல்லாம்
அளவிடும் கண்களைச் சார்ந்தது!
கவிஞனுக்கும் பெண் கவிதை தான்
அந்தக் கவிதையின் கருப்பையில்
கனன்றெழும் உணர்ச்சித் தளிர்களை
கவிஞன்
மீள மீள வாசித்துப் பார்க்க வேண்டும்!
கவிதைகள்
கண்மூடி உறங்குவதில்லை!

கருவறை வாசலில்
கைக்குண்டு வைத்துச் சிதைக்கப்பட்ட
கோணேஸ் வரியின் கோலத்தை
கவிஞன் பாடலாம்!
அத்திவாரத் தோண்டல்களில்
இடறும் எலும்புக் கூடுகளோடு
சேலையினதும், உள்ளாடையினதும்
மீதிகள் வெளிப்படும் அழகையும்
அங்கு புதையும் நீதியையும்
கவிஞன் பாடலாம்!

விதவைகளின் ஊர் வலத்தை
உடல் ஊனப்பட்ட வனிதையரை
வறுமைப் பட்ட அன்னையரை
ஆட்சி செய்யும் அன்னையை
அங்கங்களை, அதிகாரங்களை
நடை வண்ணத்தை நாகரிகத்தை
அழகை, அருவருப்பை, அடிமைத்தனத்தை
காட்சிக் கோலங்களை எல்லாம்
கவிஞன் பாடலாம் — நல்ல
கவிதைகள் என்றும்
கண்மூடி உறங்குவதில்லை.

— ஆரணி.
வெலிசுறை, றாகமம.

## பாடடா தமிழ்க் கவிஞா! பாடடா

அடா தமிழ்க் கவிஞா! பாரிங்கே
அன்னைத் தாய் நிலத்தில் என்ன நடக்குதடா...?
விடலைப் பருவத்தை விழியசைவை
விஞ்சிப் பிதுங்கும் சதையழகை
உடலைப் பாடத்தான் உன்னால் முடிந்ததா?
உணர்வற்ற தமிழ்க் கவிஞா நீ யார்?
கடலைப் பிளந்து காற்றை நிறுத்தும்
கதைபடைத்த பரம்பரையில் வந்தவன் நீ
சுடரொளியாய் மிளிரும் தமிழ் வீரத்தை
சுந்தர தாய் நிலத்தின் தமிழழகை
பாடடா தமிழ் கவிஞா பாடடா
பாட்டன் நட்ட பனை மரத்தை பாடடா
தேடடா உந்தன் தேமதுரத் தமிழன்
தேச வரலாற்றை தேடிப் பாடடா
நாடடா நற்றமிழர் கலாசாரத்தை
நாடி நமது தேவையை பாடடா
கூடடா தமிழ் பற்றாளர் கூட்டத்தை
கூடி கொள்ளை காக்கும் தமிழர் கூட்டத்தை பாடடா
பாடடா தமிழ்க் கவிஞா பாடடா

— ஈழத்தாசன், யாழ்ப்பாணம்.

## கனவுகளின் தொலைவுகள்

வான் அருவியில்
கால் நனைந்தபடி
கவிதை படிக்கின்றாய் நீ
விண்மீன்களுக்கு
தூண்டிலிடுகிறேன் நான்
உன் கூந்தலுக்காக
நிலவை எடுத்து என் எச்சில் தொட்டு
ஒட்டுகிறேன் உன் நெற்றியில்
ஆனந்த பரவசத்தில்
ஆங்காங்கே உன் முகத்தில்
முத்துக்குளிக்கும் வியர்வையை
முகில்களால் முத்தமிடுகிறேன்
மேகப் பஞ்சுகளில்
பொம்மை செய்தால்
அழகாக இருக்குமென்றாய்
நான் செய்து தரவும்...
வியந்து பாராட்டுகிறாய்
ஊஞ்சலாட ஆசைப்பட்டாய்
வானவில் வசதியாக இருக்குமே என்று
தேடித்... தேடித் தொலை தூரம்
செல்கிறேன்...
சூரியன் என்னை சுட்டெரித்து
அனுப்பிவிட்டான்.
உனக்கான தேடலில்...
இன்னமும்...
நான் தொலைந்தவனாய்....

— பிரியன், கிளிநொச்சி.

## மலர்ந்தும் மணக்காத மலர்கள்

போலிக் காதலால்
தாலி ஏந்த
வேலி தாண்டாத
அர்ச்சனைப் பூக்கள்
இன்று —
அடுக்களைப் பூக்களாய்
ஆகிவிட்டன.
சீதனப் புயலால் சிதையுண்டு
கன்னி மலர்கள்
காலத்தால் கை கழுவப்பட்டுவிட
சருகுகளாகச் சபதம் பூண்டன
வீட்டுக்கு மட்டும்
வாசனை வீசப்
பூத்துக் குலுங்கும்
புண்ணிய மலர்களுக்குக்
கனவில் மட்டும்
கலியாணம் நடக்கும்
வரதட்சனைக்கு வரம் வேண்டி
தவம் கிடக்கும் வரன்களுக்கும்
நெஞ்சில் உரமில்லை
ஆண்மையை அடகு வைத்துத்தான்
கரம்பிடிக்க வேண்டுமென்று
அடம் பிடிக்கிறார்கள்
இதனால்—
இப்போ—
சாதகங்களும் சீதனத்தால்
சாதகமாகி விட—
காகிதப் பூக்களும் உயிர்ப்
பெய்தி—
கலியாணப் பந்தலுக்கு
அசைகின்றன
ஆனால் —
உயிர்ப் பூக்களோ
முதிர்ந்து — உதிர்ந்து
சருகாகிச் சிதையேறுகின்றன.

— ம.விஜிதா, பிரதான வீதி,
நோர்வூட்.

## நாற்றம்


இறுதியாய்
மூக்கழுகிப் போயிற்று
எல்லோரும்
எதை எதையோ
பொத்துகின்றார்கள்
புண்கள்
தோன்றிய போது
மூக்கைப் பொத்தியும்
பொத்தாமலும்
பலர்
பேசினார்கள்
எழுதினார்கள்
படம் பிடித்தார்கள்
பணம் உழைத்தார்கள்
பதவி பிடித்தார்கள்
இப்போது,
மூக்கழுகிப் போயிற்று
எல்லோரும்
எதை எதையோ
பொத்துகின்றார்கள்.
பேச முடியவில்லை!
எழுத முடியவில்லை!!
உண்ணமுடியவில்லை!!
உறங்கமுடியவில்லை!!

— பொன் காந்தன்,
வன்னி.

## நரக இருள்

தூரத்தில் ஏதோ
சட சடப்புக் கேட்கும்
இமைக்கும் பொழுதில்
எதிர் வீட்டு விளக்கெல்லாம்
இறந்து போகும்...
விழிகள் இருப்பதை
இமைகள் மறந்து
மேலே இறுகிக் கொள்ளும்...
தொண்டைக் குழிக்குள்
உமிழ் நீர் சுரந்து
தேங்கிக் கிடக்கும்...
மணிக்கூட்டுச் சத்தம் கூட
ஒருபதட்டத்தை உண்டுபண்ணும்...
பின் பாலத்தடியில்
நாய்க் கூட்டமொன்று
தொண்டைகிழியக் கத்தி
ஏதோ பறை சாற்றும்...
நடு நிசி அண்டங் காக்கைகள்
உயரப்பறந்து
கரைந்தபடி கலைந்து போகும்...
கிணற்றடிக் காவோலை வேலி
சரசரக்கும் சப்தம் கேட்டு
இதயத்துடிப்பு மெல்ல நின்று
போகும்...
மூலைத் தென்னைக்கால்
நிலவொளி வெளிப்பட்டு
நரக இருளை துரத்திப் போக
மனங்கள் எல்லாம் லேசாகும்...
'ஓ' அந்த நரக இருள்
மிகவும் மோசமானது!

— அ. மருதம், கேதீஸ்வரன்



# சூடு பிடிக்கும் அறிக்கைப் போரும் வசைமாரி பொழியும் சொற்போரும்

## ஐக்கியத்தைக் கட்டியெழுப்ப முயலும் சக்திகளுக்கு ஏமாற்றம்

குடாநாட்டில் பொதுத்தேர்தலை ஒட்டி இந்தமுறையும் கடந்த தடவைபோன்று கட்சிகளின் 'அறிக்கைப் போர்' சூடுபிடித்திருக்கிறது.

குடாநாட்டில் 12 கட்சிகள் களத்தில் குதித்துள்ளபோதிலும் அறிக்கைப் போரும் ஒரு தரப்பு மீது மறுதரப்பு 'வசைமாரி' பொழியும் சொற்போரும் மூன்று நான்கு அணிகளுக்கு இடையிலே மாறி மாறி நடக்கின்றன.

தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ் (சுரேஷ் அணி) ஆகியன உள்ளிட்ட கூட்டமைப்பு—

மகேஸ்வரன் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அணி—

டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈ.பி.டி.பி—

மற்றும் தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பில் இடம் கிடைக்காததால் நொந்துபோய் இருக்கும் புளொட் அணி—

ஆகிய நான்கு தரப்பாருமே வரிந்து கட்டிக் கொண்டு வாய்ச் சண்டையிலும் அறிக்கைப் போரிலும் குதித்திருக்கின்றனர்.

இந்த அறிக்கைப் போரில் கட்சியினரால் மிகவும் கீழ்த்தரமான வார்த்தைப் பிரயோகங்களும் பயன்படுத்தப்படுவது ஸ்ரீமான் பொதுஜனங்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது.

உதாரணத்துக்கு ஒன்று:

பெரும்பான்மையினக் கட்சியின் பிரதிநிதியாக யாழ்ப்பாணத்தில் போட்டியிடும் தி. மகேஸ்வரன், 'யாழ்ப்பாணத்தின் ஸ்ரீகோத்தா' என்று எதிர்த் தரப்புகளால் வர்ணிக்கப்படும் பலாலி வீதியில் உள்ள தனது இல்லத்தில் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினார். அதில் இந்திய அமைதிப் படையினர் காலத்தில் சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையிலான இயக்கம் படுகொலைகளை நடத்தியதாக கடுமையாக விமர்சித்தார்.

அவரது அந்தக் கண்டனக் கணைக்குப் பதிலளிக்கு முகமாக சுரேஷ் பிரேமச்சந்திரனின் தரப்பில் இருந்து அறிக்கை விடுக்கப்பட்டது. அதில் மகேஸ்வரனின் அரசியலை 'பொறுக்கி அரசியல்' என்ற சொற்பிரயோகத்தின் மூலம் திருப்பித் தாக்கியிருந்தார் சுரேஷ் பிரேமச்சந்திரன்.


இத்தகைய கீழ்த்தரமான சொற்பிரயோகங்களுடன் கூடிய விமர்சனப் பாங்கு கட்சிகளின் அறிக்கைகளில், வேட்பாளர்களின் உரைகளில் இடம்பெறுவது தமிழர் தரப்புகளிடையே ஒற்றுமையை, ஐக்கியத்தைக் கட்டி எழுப்ப விளையும் சக்திகளுக்குப் பெருத்த ஏமாற்றத்தைக் கொடுப்பதாய் உள்ளது.

### கருத்துக் கணிப்பு

தேர்தலை ஒட்டி வாக்களிப்புக்கு முன் கூட்டியே நடத்தப்படும் கருத்துக் கணிப்புக்கள் கடைசி நேரத்தில் வாக்காளர்களின் விருப்பு வெறுப்புகளில் செல்வாக்குச் செலுத்தக் கூடியவை என்பதால் அவற்றைத் தடை செய்துவிட வேண்டும் என்ற கோரிக்கைகள் வலுவடைந்து வந்தாலும் உலகெங்கும் தேர்தல்கால கருத்துக் கணிப்புகள் இன்னமும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகவே விளங்குகின்றன.

தேர்தலை ஒட்டி தென்பகுதியில் இத்தகைய கருத்துக் கணிப்புகள் பல்வேறு தரப்பினராலும் நடத்தப்படுவது வழக்கம். எனினும் குடாநாட்டில் இதுவரை அத்தகைய முயற்சி எதிலும் எவரும் ஈடுபட்டதில்லை. தேர்தலிலேயே நாட்டம் கொள்ளாத மக்களிடம் போய் எப்படி அது குறித்துக் கருத்துக் கேட்பது?

ஆனால் இந்தமுறை யாழ்ப்பாணத்தில் வழமையைவிட தேர்தல் நடவடிக்கைகள் சூடுபிடித்து வருவதால் தேர்தலுக்கு முந்திய கருத்துக்கணிப்பு ஒன்றை மக்கள் மத்தியில் நடத்துவதற்கு சில தரப்புகளில் முயற்சி எடுக்கப்பட்டு வருவதாகத் தகவல்.



சுரேஷ் பிரேமச்சந்திரன்

யாழ். பல்கலைக்கழகச் சமூகத்தின் ஆதரவுடன் தேர்தல் கருத்துக்கணிப்பு ஒன்றை நடத்தப் பொது அமைப்புகள் ஆர்வம் காட்டி வருவதாகவும் தெரிய வருகிறது.

### இலகு வழியில் பிரசாரம்

வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு— கிழக்கு தமிழ் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் மீண்டும் மக்கள் குறைநிவர்த்தி சேவை இந்தவார இறுதியில் நடத்தப்படவுள்ளது.

ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் இந்தச் சேவை யாழ். மத்திய கல்லூரியில் 10ஆம், 11ஆம் திகதிகளில் நடத்தப்படும்.

**யாழ் தேர்தல் களம்**

பிரமாண்டமான முறையில் இந்தக் குறை நிவர்த்தி சேவையை நடத்த ஈ.பி.டி.பி கட்சியினர் ஏற்பாடுகளைச் செய்துவருகின்றனர்.

மத்திய மற்றும் மாகாண அமைச்சுக்களின் அதிகாரிகள் பலரும் இந்தச் சேவையில் கலந்து கொள்வதற்காக யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்படவுள்ளனர்.

தேர்தல் சமயத்தில் — தேர்தலில் போட்டியிடும் கட்சி ஒன்றைச் சார்ந்த அமைச்சரின் ஏற்பாட்டில் குறைநிவர்த்தி என்ற பெயரில் மக்களை ஒன்றுதிரட்டி நடத்தப்படவிருக்கும் இந்தச் சேவை— தனக்கிருக்கும் அதிகாரம் மற்றும் அரச வளங்களைப் பயன்படுத்தி ஈ.பி டி.பி அமைப்பு மேற்கொள்ளும் தேர்தல் பிரசாரத் தந்திரமே என்று யாழ்ப்பாணத்தில் போட்டியிடும் ஏனைய கட்சிகளின் வேட்பாளர்கள் சீறிச் சினக்கின்றனர்.

போட்டியிடும் கட்சிகளின் தேர்தலுக்காக அரச வளங்களையும், நிதியையும் வாரி இறைத்துப் பிரசாரம் செய்யக்கூடிய ஒரே சக்தியாக இருப்பது ஈ.பி.டி.பி என்பது உண்மைதான்.

இந்த நிலைமை தேர்தல் காலத்தில் அக்கட்சிக்குப் பெரும் ஆதாயங்களைக் கொடுக்கும் என்பதும் வாஸ்தவம்தான். ஆனாலும் குறைநிவர்த்தி சேவை எந்த நோக்கங்களோடு நடத்தப்பட்டாலும் அதன்மூலம் மக்களும் பயனடைய வாய்ப்பு இருக்கிறது.

அரச திணைக்களங்கள், அமைச்சுக்களின் சேவைகள் கிடைக்காமல் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்போர் ஒரே இடத்தில் தங்கள் குறைகளை, தேவைகளை முறையிட்டுப் பரிகாரம் காண இதன்மூலம் வாய்ப்புக் கிட்டும்.

அந்த நோக்கத்திற்காக இந்தச் சேவையை வரவேற்கலாம்.

மக்கள் குறை நிவர்த்திச் சேவை ஏற் கனவே இரு தடவைகள் யாழ்ப்பாணத்தில் பெரும் ஆரவாரங்களுடன் நடத்தப்பட்டிருந்தன. அந்த வரிசையில் இது மூன்றாவது சேவை.

இந்த நிகழ்வு தேர்தல் காலத்தில் நடத்தப்படுவதாலும் கட்சி சாராத அரசாங்க அதிகாரிகளும், பணிப்பாளர்களும் கலந்து கொண்டு மக்களின் குறைகளுக்குத் தீர்வு வழங்க இருப்பதாலும் இச்சந்தர்ப்பத்தில் கட்சி மற்றும் அரசியல் சார்ந்த விடயங்கள் மக்கள் மத்தியில் திணிக்கப்படாமல் இருப்பதை அதிகாரிகள் உறுதிசெய்ய வேண்டும்.

தங்கள் குறைகளைக் கூறிப் பரிகாரம் காணவரும் மக்களிடம் 'எமக்கு வாக்களியுங்கள்' என்று கேட்டுப் பிரசாரம் செய்யப்படுமானால் இந்தச் சேவை ஒரு தேர்தல் பிரசார நிகழ்வாக மாறிவிடும்.

இதனைத் தடுக்கும் அதிகாரம் — திராணி — சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இருக்குமா என்பதே இங்கு எழுகின்ற பெரிய கேள்வி.

அதேவேளை கடந்த மே மாதம் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட இதே மாதிரியான குறைநிவர்த்தி சேவையில் தங்களுக்கு உடனடித் தீர்வு கிடைக்கும் என நம்பித் தமது முறைப்பாடுகளை, விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த பலருக்கு ஐந்து மாத காலம் கடந்த பின்னரும் கூட உரிய பெறுபேறு கிடைக்காமல் இருப்பதையும் இங்கு சுட்டிக் காட்டியே ஆகவேண்டும். அடையாள அட்டைகளைப் பெறவும், கடவுச்சீட்டுகளைப் பெறவும் முண்டியடித்துக் கொண்டு விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த பலர் இன்னமும் அவற்றை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

சம்பந்தப்பட்டோருக்கு இது சமர்ப்பணம்.

### வீடுகளின் சுவர்களை அசிங்கப்படுத்தும் கட்சிகள்

யாழ் நகரிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் தேர்தலை ஒட்டிய பிரசுரங்கள், பதாகைகள், கட் அவுட்டுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

கட்சிகள் போட்டி போட்டுக்கொண்டு தங்கள் தங்கள் கொடிகளையும் அலங்காரச் சோடனைகளையும் வீதிகளில் கட்டிவருகின்றன.

பெரிய அளவிலான தட்டிகளை நட்டு அதில் தங்களின் வீணைச் சின்னத்தையும் வாக்குத்தேடும் வாசகங்களையும் பொறித்திருக்கிறது ஈ.பி.டி.பி.

நல்லூர் ஆலயத்துக்கு முன்பாக ஈ.பி.டி.பி தொண்டர்களால் நிறுவப்பட்டிருந்த இதுபோன்ற தட்டி ஒன்று கடந்த 3ஆம் திகதி இரவு இனந்தெரியாத சிலரால் பெற்றோல் வீசி எரிக்கப்பட்டது.

ஐ.தே.கட்சி வேட்பாளர் மகேஸ்வரனின் ஆதரவாளர்கள் நகரிலும் அதனை அண்டிய சில பகுதிகளிலும் ஐக்கிய தேசியக் கட்சியின் பச்சை வர்ணக் கொடியைக் கட்டுவதில் ஈடுபட்டிருக்கின்றனர்.

அழகிய சுவர்கள், மதில்களில் தங்கள் அனுமதி இன்றியே கட்சிகளின் சின்னங்கள் 'பெயின்ட்' மூலம் பொறிக்கப்படுவதால் பலரும் சினமடைந்துள்ளனர்.

வாகனங்களில் காற்று அழுத்தக் கருவி (கொம்பிறசர்) மற்றும் அச்சுகள், பெயின்ட் வகைகளுடன் வரும் கட்சித் தொண்டர்கள் 'பளிச்' என்று தெரியும் சுவர்களில் கட்சிச் சின்னங்களைப் பொறித்து விடுகின்றனர்.

அண்மையில் வர்ணம் பூசி மெருகூட்டப்பட்ட வீடுகளின் சுவர்கள், கட்டடங்களின் மதில்கள்கூட கட்சிகளின் இந்தச் சின்னம் பொறிக்கும் தொண்டர்களின் கண்களில் இருந்து தப்பமுடியவில்லை.

சில இடங்களில் சின்னங்களைப் பொறிக்க வருவோர் வீட்டுக்காரர் வந்து பார்ப்பதற்கு முன்பாக கனகச்சிதமாகத் தமது கைவண்ணத்தைக் காட்டிவிட்டுத் தப்பிவிடுகின்றனர்.

வாகனச் சத்தம் கேட்டு வீதிக்கு வரும் வீட்டுக்காரர்கள் சுவர்கள் அசிங்கப்படுத்தப் பட்டிருப்பது கண்டு சீற்றமடைந்து சினம் தாங்காது கட்சிகளைத் திட்டித் தீர்ப்பதையும் காண முடிகிறது.

மக்களின் பிரதிநிதிகள் இந்த அசிங்கமான செயலை அனுமதித்திருப்பது ஏன் என்பது புரியவில்லை.

— ஆதர்ஷா தாஸ்

# பத்திரிகைகளுக்கு நேசக்கரம் நீட்டும் அரசியல்வாதிகள்

தேர்தல் வந்ததும் அரசியல்வாதிகள் மக்களை நாடுவதற்கு முன்பாகப் பத்திரிகைகளை நாடுகின்றனர். பத்திரிகை நிறுவனங்களுடன், பத்திரிகையாளர்களுடன் கடந்த காலங்களில் கசப்புணர்வுகள், பிணக்குகளைக் கொண்டிருந்த கட்சிப் பிரமுகர்கள் கூட பத்திரிகைகளுக்கு நேசக்கரம் நீட்டிவிடுகின்றனர். ஏனெனில் தேர்தலில் வெற்றி தோல்விகளை நிர்ணயிப்பதிலும் மக்களை ஓர் இலக்கை நோக்கித் திருப்பிவிடுவதிலும் பத்திரிகைகளுக்குப் பெரும் பங்கு இருக்கும்.

யாழ்ப்பாணத்தில் களத்தில் குதித்திருக்கும் பிரதான கட்சிகள் தங்கள் விளம்பரங்களுக்காகப் பக்கங்களை 'ரிசேர்வ்' பண்ணி தமக்குரிய ஒதுக்கீட்டை உறுதிப்படுத்திக் கொள்ளும் முயற்சியில் முன்கூட்டியே தீவிரமாக இறங்கி விட்டன. பத்திரிகைகளில் கவர்ச்சியான பக்கங்கள் தங்களுக்கே ஒதுக்கப்படவேண்டும் என்று போட்டா போட்டி வேறு.

நாடு முழுவதும் தேர்தல் விளம்பரங்களுக்குத் தனியாக விசேட — கட்டண விகிதங்களைப் பத்திரிகைகள் வகுத்துவிட்டன. உரிய காலம் முடிவடைவதற்கு முன்னரே அடிக்கடி தேர்தல்களை நாடு சந்திக்க வேண்டியிருப்பதால் இலாபமடையும் தரப்புக்களில் இந்த ஊடகங்களும் அடங்கும் என்பதை மறுக்க முடியாது.

யாழ்ப்பாணத்தில் இந்த முறை தேர்தல் மூலம் இலாபமடையவுள்ள மற்றொரு தரப்பு உள்ளூரில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் அச்சகங்கள்.

கடந்த தேர்தல்களில் தங்கள் வர்ணப் போஸ்டர்களையும் கொள்கை விளக்கப் பிரசுரங்களையும் பெரும் தொகையில் கொழும்பில் அச்சிட்டு விமானம் மூலம் அவற்றை எடுத்து வந்து பெரும் போஸ்டர் திருவிழாவையே நடத்திக்காட்டிய கட்சிகள் இந்த முறை தங்கள் பிரசுரங்களில் பெரும்பகுதியை உள்ளூரிலேயே அச்சிட முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

இதனால் யாழ்ப்பாணத்தின் மூலை முடுக்கு எங்கும் ஏட்டிக்குப் போட்டியாய் முளைத்திருக்கும் சிறிய 'ஓவ் — செற் பிரிண்டிங் நிலையங்களின் காட்டில் மழை.



பிமல் தயாரிப்புக்களின் யாழ். மாவட்ட ஏக விநியோகஸ்தர்களான சிவா நறுமணப்பூங்காவின் ஆதரவில் சுண்டுக்குளி ஜெயசித்தாரா விருந்தகத்தில் ஆயுள்வேத மருந்துகள், மூலிகை வகைகள் தொடர்பான கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது.

பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு சிறப்பித்த பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமிக்கு சிவா நறுமணப்பூங்கா உரிமையாளர் து.குருநாதசிவம் மலர் மாலை அணிவிக்கிறார்.








சிறுவர்களுக்குப் பிடித்த வீடியோ விளையாட்டுக்களில் லெகன்ட் ஒ கீப் ட்ரகனும் இணைந்துள்ளது. நான்கு சீடி கொண்ட இந்தக்கதை உயிரோட்டம் நிறைந்ததாகக் காணப்படுகின்றது என இதனைப்பார்த்த ரசிகர்கள் தெரிவித்துள்ளனர். பிரமிப்புடன் பார்க்கத் தூண்டும் காட்சிகளைப் பதிவு செய்துள்ளனர். இதில் பிரதான பாத்திரமாக வரும் பாட் தனது பெற்றாரின் மரணத்திற்குக் காரணமானவர்களைப் பழி வாங்குவதே கதையின்கரு என்றபோதும் அட்டகாசமான சண்டைக் காட்சிகள் நேரம் கடந்து செல்வதை மறக்க வைக்கின்றன.



## பொது அறிவுக்கு...

1. ஒளியின் வேகத்தை முதலி[illegible] கணித்தவர் – பிசேயல்.
2. மின் சக்தியால் நோயைக் குணமாக்கும் முறையைக் கண்டறிந்தவர் – கல்வாணி.
3. மின் சாரத்தைக் கண்டு பிடித்தவர் – மைக்கேல் பரடே.
4. தந்தியைக் கண்டு பிடித்தவர் – மோஸ்.
5. நீரின் பகுப்பு முறையைக் கண்டு பிடித்தவர் – ஹென்றி கவண்டிஸ்.

இ. நிர்மலா, தரம் – 09A, கிளி/ மத்தியகல்லூரி.

### அன்னை

அன்னைபோன்றதெய்வம்உலகில்யாரும்கிடையாது. எல்லா அன்பையும் விட தாயன்பே மிகவும் ஆறுதல்தரக்கூடியது. அன்னையை அம்மா, தாய், மாதாஎன்றும் அழைக்கலாம். எந்தஒருஉயிரினமும் முதலில் கூறுவது அம்மாஎன்ற வார்த்தையையே. மனிதர்கள் தங்களுக்கு துன்பம் வரும்போது இறைவனிடமும் தாயிடமும் கூறி ஆறுதல் அடைவார்கள். தாயின் அன்புக்கு ஈடு இல்லை.

சாய்மா, ஆண்டு – 5, கிங்ஸ்டன் சர்வதேசப் பாடசாலை, வெள்ளவத்தை.



இன்று சிபர்

ஷர்மிலா

## ஒலியை விட வேகமாகச் செல்லும் கன்கார்ட் விமானங்கள்

கன்கார்ட் எனப்படும் பயணிகள் விமானங்கள் ஒலியைவிட இரண்டு மடங்கு வேகமாகச் செல்லக்கூடியன.

இவற்றை பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்து விமான நிறுவனங்கள் தயாரித்தன. இரண்டு நாடுகளுக்கும் இடையே உள்ள உறவை வெளிப்படுத்தும் வகையில் கன்கார்ட் என்று பெயரிடப்பட்டது.

1976ம் ஆண்டு ஜனவரி மாதம் இந்த விமானம் நியூயோர்க் நகரில் இருந்து பாரீசுக்கு 3 மணி 10 நிமிடங்களில் சென்றடைந்தது. சமீப காலம் வரை 13 கன்கார்ட் விமானங்கள் பயன்படுத்தப்பட்டு வந்தன.

பிரிட்டிஷ் ஏர்வேய்ஸ் நிறுவனம் ஏழு விமானங்களையும் ஏர் பிரான்ஸ் நிறுவனம் ஆறு விமானங்களையும் பயன்படுத்தின.

## சிறுவர் கைவண்ணம்



E.S.லக்ஷ்மீ
தரம் – ஜே.3
எலிஸபெத் மொயர் சர்வதேச பாடசாலை
கொழும்பு – 05.



அன்ரனி டேவிற் ராஜ்,
தரம் – 9
யா/ கலட்டிறோ/க/ பாடசாலை,
பருத்தித்துறை.

### சிந்திக்க சில...

1. அன்பு காட்டு, ஆனால் அடிமையாகி விடாதே.
2. இரக்கம் காட்டு, ஆனால் ஏமாந்து போகாதே.
3. பணிவாய் இரு, ஆனால் கோழையாய் இராதே.
4. சிக்கனமாய் இரு, ஆனால் கஞ்சனாய் இராதே.
5. வீரனாய் இரு, ஆனால் போக்கிரியாய் இராதே.
6. உழைப்பை நம்பு; ஆனால் கடவுளை மறவாதே.

அ.சஜிந்தன், ஆண்டு – 10B,
யா/ விக்கினேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி.

## அறிவியல் விந்தைகள்

*சீனாவில் உள்ள வூலாங் இயற்கை சரணாலயத்தில் ஷீமென்ங் என்ற பண்டா கரடி இருக்கிறது. ஷீமென்ங் என்றால் கனவுகளின் நம்பிக்கை என்பதே பொருளாகும்.

* உலகிலேயே மிகப்பெரிய கரடி கொடியாக் கரடிதான். சாம்பல் நிற கரடியை ஒத்த உருவமுடையது.


*பனிக்கரடிகள் வடக்கு மற்றும் தென் அமெரிக்கா, ஐரோப்பா, ஆசியா வில் காணப்படுகின்றன. இந்தக்கரடிகளை தோலுக்காகவும் இறைச்சிக்காகவும் மனிதர்கள் வேட்டையாடி வருகின்றனர்.

*கரடிகளில் பண்டா கரடிகள் என்று அழைக்கப்படும் கரடிகளைத் தவிர்த்து 7 வகைக் கரடிகள் உள்ளன.

*அமெரிக்க கறுப்புக் கரடி, ஆசிய கறுப்புக் கரடி, சாம்பல் கரடி, துருவக்கரடி, தேவாங்குகரடி, கண்ணாடிக் கரடி, சூரியக்கரடி ஆகியனவே அவை.

இந்த ஏழுவகைகளில் துருவக் கரடிகள் அழிந்து வருகின்றன. முழுமையாக வளர்ச்சியடைந்த பண்டா கரடிகள் தினமும் 14 மணி நேரத்தை உணவுண்ணுவதிலேயே கழிக்கின்றன.

இவை ஒரு நாளைக்கு 30 கிலோ மூங்கில் இலைகளை உணவாக உட்கொள்கின்றன என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.



## நெறியோடு வாழ்ந்தால் பலவீனம் இல்லை

பலவீனங்களே தோன்றாத வாழ்க்கை முறையை நாம் அமைத்துக் கொண்டாலன்றி வெறும் செயற்கையான நடைமுறைகளால் மட்டுமே பலவீனங்களை அடக்கவோ, விலக்கவோ முடியாது. நெறியானதொரு வாழ்க்கை முறையை நாம் அமைத்துக் கொள்ள வேண்டும். இப்படியான ஒரு வாழ்க்கைக்கான தொடக்கத்தை சிறு வயதிலேயே தொடங்கி விட வேண்டும். ஒவ்வொரு நாளும் அன்று நாம் மேற்கொள்ள வேண்டிய அலுவல்களை கால அட்டவணைப்படி பட்டியல் போட்டுக் கொண்டு முறையாக அவற்றை நிறைவேற்ற வேண்டும். எப்போதும் சுறுசுறுப்பாக இயங்க பழகிக் கொள்ள வேண்டும். உழைப்பு நமது அன்றாட வாழ்வின் ஓர் அம்சமாய் அமைய வேண்டும். உடற்பயிற்சியையும் ஒரு நியதியாக கொள்ள வேண்டும். மனத்திலே உயர்ந்த சிந்தனைகளிற்கு இடம் தர வேண்டும். தீய நினைவுகளிற்கு மனதில் ஒரு துளியும் இடம் இருக்கக் கூடாது. போட்டி மனப்பான்மை, பொறாமை உணர்ச்சி, வஞ்சக உணர்வு, புறங் கூறுதல், மனத்தாலும், உடலாலும் பிறரைத் துன்புறுத்தல் போன்றவை யெல்லாம் மனதின் நிம்மதியை, மகிழ்ச்சியை கெடுக்கும் பல வீனங்களாகும். இவற்றை அடியோடு மனத்தை விட்டு அகற்ற வேண்டும். நம்மால் முடிந்த மட்டும் பிறருக்கு உதவ வேண்டும். சமுதாயத்தில் நாம் யாருக்கும் சுமையாக இருக்க கூடாது. நமது தனித்தன்மையை காத்து நமது தேவைகளை சுய பலத்தால் பூர்த்தி செய்து வாழ வேண்டும். இறை வழிபாடு என்பது மனித வாழ்க்கையின் உயிரோட்டமான அம்சம். மனிதனுக்கு மட்டுமல்ல ஒவ்வொரு உயிரினத்திற்கும் இறைவன் ஒருவன் தான் பாதுகாவலன். நன்றாக யோசித்துப் பார்த்தோமானால் பலவீனங்கள் என்று நாம் நினைப்பவைகளில் பெரும் பகுதி நாமாகவே வலிந்து செய்து கொண்ட கற்பனை என்பது புலப்படும். எந்த வகையிலும் மனிதன் பலவீனமானவன் அல்ல இந்த உணர்வு ஒவ்வொருவரிடமும் நிலைக்கட்டும்.

க. மதிவதனி, பருத்தித்துறை.

## உங்களுக்குத் தெரியுமா?

*கடல்வாழ் பாலூட்டிகளில் மிகவும் வேகமாக நீந்தக் கூடியது 'கில்லர்' திமிங்கிலங்கள். இவை இரையை வேட்டையாடும் போது மணிக்கு 56 கிலோ மீட்டர் வேகத்தில் நீந்துகின்றன. இவற்றுக்கு ஒர்கா (orca) என்ற இன்னொரு பெயரும் உண்டு.

*ஈல் மீன்கள் உயிருள்ள டைனமோ என்று அழைக்கப்படுகின்றன. இவற்றின் உடலில் இருந்து மின்சாரம் உற்பத்தியாகின்றது.

* பெரும்பாலான பறவைகளுக்குக் காலில் முன்புறம் மூன்று நகங்களும் பின்புறம் ஒன்றும் தான் இருக்கும். ஆனால் மரங்கொத்திப் பறவைக்கு முன்புறம் இரண்டு நகங்களும் பின்னால் இரண்டு நகங்களும் இருக்கின்றன. இதனாலேயே மரங்கொத்தியினால் செங்குத்தான மரத்திலும் நிற்க முடிகின்றது.

*உலகிலுள்ள இப்போதைய பெட்ரோலியம் இன்னும் 30–60 ஆண்டுகளுக்குள் முடிந்து விடும் என்று அறிஞர்கள் கணக்கிட்டுள்ளனர்.



## திசைச் சொற்கள்

1. தெலுங்கு மொழிச் சொற்கள் – சந்தடி, ஒயில், கொலு, கொலுசு, விருந்து, பராக்கு.
2. கன்னட மொழிச் சொற்கள் – அட்டிகை, சொத்து.
3. மலையாள மொழிச் சொற்கள் – கொச்சி, தளவாடம்.
4. மராத்தி மொழிச் சொற்கள் – பட்டாணி, குண்டான், பேட்டை.
5. போர்த்துக்கேய மொழிச் சொற்கள் – ஏலம், கோப்பை, பீங்கான், ஜன்னல், அலவாங்கு, வராந்தா, அன்னாசி.
6. ஒல்லாந்த மொழிச் சொற்கள் – துட்டு, தோம்பு, உலாந்தா, சாக்கு.
7. ஆங்கில மொழிச் சொற்கள் – கம்பனி, கலண்டர், சைக்கிள், கார், பேப்பர், பென்சில், பொலிஸ்.
8. பிரெஞ்சு மொழிச் சொற்கள்.
குசினி, துருப்பு, பட்டாளம், பீரோ, லாந்தர்.
9. அரபு மொழிச் சொற்கள் – பாங்கு, கலிமா, ஹஜ், ஸலாத், சைத்தான்.
10. உருது மொழிச் சொற்கள் – அசல், அத்தர், கச்சேரி, அண்டா இனாம், கறார், ராஜினாமா.
11. சில சிங்கள மொழிச் சொற்கள்.
வல்லாரை, முருங்கை, தோடை.

அ. கார்த்திகா, தரம் – 9,
வ/பூவரசங்குளம் ம.வி. வவுனியா.

## எனது பொழுது போக்கு

எனது பொழுது போக்கு [illegible]திரை சேகரித்தல் நான் மூன்று ஆண்டுகளாக முத்திரை சேகரித்து வருகிறேன். தற்பொழுது என்னிடம் ஏறக்குறைய ஐந்நூறு முத்திரைகள் உள்ளன. நான் எனது முத்திரைகளை தனித்தனியாக தரம்பிரித்து ஒட்டி வைத்துள்ளேன். என்னிடம் இரண்டு ஒரே மாதிரியான முத்திரைகள் இருந்தால் நான் அவற்றை என் நண்பர்களிடம் கொடுத்து என்னிடம் இல்லாத முத்திரையை வாங்குவேன். எனக்கு உதவியாக எனது சகோதரர்களும் அயலவர்களும் உள்ளனர். அவர்களுக்கு கிடைக்கும் முத்திரைகளை எனக்கு தந்து உதவுவார்கள். மேலும் நான் பணம் கொடுத்து கடையிலும் வாங்குவேன். என்னிடம் பல முத்திரைகள் ஒரே மாதிரி இருந்தால் நான் அவற்றை விற்று அதில் வரும் பணத்தில் மேலும் முத்திரைகள் வாங்குவேன். இவற்றைப் போல இன்னும் பல மடங்கு முத்திரைகளை நான் சேகரிப்பேன்.

ஆண்டு – 5,
கிங்ஸ்டன் சர்வதேச பாடசாலை, வெள்ளவத்தை.

# மலையகத்தில் வன்முறையை தூண்ட தீய சக்திகள் முயற்சி

மலையகக் கண்ணோட்டம்

இரா. புத்திரசிகாமணி

மலையகத்தில் இரத்தக் களரியை ஏற்படுத்தி தோட்டத் தொழிலாளர்கள் வாக்களிப்பதைத் தடுக்க சதி முயற்சி ஒன்று மேற் கொள்ளப்பட்டு வருகின்றது. இது தொடர்பான தகவல்கள் கிடைத்தும் பொலிஸார் எதுவும் செய்ய முடியாத நிலையில் இருக்கின்றனர். அரசியல் வாதிகளின் ஆதிக்கம் பொலிஸ் நிலையங்களில் கொடிகட்டிப் பறக்கின்றது. பொலிஸாரின் கைகள் கட்டப்பட்டுள்ளன. சில தினங்களுக்கு முன்பு கண்டியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் இப்பிரதேசத்தில் பலம் வாய்ந்த அரசியல்வாதி ஒருவரின் ஆதரவாளர்கள் இரகசியக் கூட்டம் ஒன்றை நடத்தி உள்ளனர். இக் கூட்டத்தில் பெருந் தோட்டக் கம்பெனிகளைச் சேர்ந்த சில தோட்டத்துரைமாரும் கலந்து கொண்டனர் என்று தெரிய வருகின்றது.

தேர்தல் நடைபெறுவதற்கு முன்பு மலையகத்தில் ஆங்காங்கே தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு தோட்டத் தொழிலாளர்களை வாக்களிக்கச் செல்ல விடாமல் தடுப்பதே இவர்களின் பிரதான நோக்கம். இந்த அடிதடி நடவடிக்கைகளுக்காக கண்டி புற நகர் பகுதிகளில் இருந்தும் கொழும்பு போன்ற தூர இடங்களில் இருந்தும் தமிழ் பேசக் கூடிய கைக் கூலிகளை திரட்டவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றன.

இப்பொழுது மலையகத்தில் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் ஏட்டிக்குப் போட்டியாகக் களம் இறங்கியுள்ளனர். ஒருவர் மீது மற்றவர் சேற்றைவாரி வீசிக் கொண்டிருக்கின்றனர். இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மலையகத்தில் இடம்பெறும் வன்முறைச் சம்பவங்களுக்கு மலையக தமிழ் கட்சிகளே காரணம் என பழிபோடுவதே இந்த சதிக்கும்பலின் நோக்கமாம். இதற்கு ஏதுவாகவே தமிழ் பேசக்கூடிய கைக் கூலிகள் திரட்டப்பட்டுள்ளனர்.

வாக்காளர் அட்டைகளை தொழிலாளர்களுக்கு கிடைக்க விடாமல் தடுத்தல், தொழிலாளர்களிடம் இருந்து வாக்காளர் அட்டைகளைப் பறித்தல், தொழிலாளர்களை வாக்குச் சாவடிகளுக்கு செல்ல விடாமல் தடுத்தல். வாகனங்கள் செல்ல முடியாதவாறு பாதைகளை மறித்தல் போன்றவை இந்தக் கைக்கூலிகளிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன. தோட்டங்களில் உள்ள வாக்காளர்கள் எத்தனை பேர்? அவர்கள் எந்தச் சங்கத்தில் இருக்கின்றனர்? வாக்குச் சாவடிகள் எங்கே அமைக்கப்பட்டுள்ளன? போன்ற விவரங்களை சில தோட்டத்துரைமாரே வழங்கியுள்ளனர். சில தோட்டத்துரைமார் ஒருசில அரசியல் கட்சிகளின் தீவிர ஆதரவாளர்கள் என்பதும் தெரிய வந்திருக்கிறது.

இந்தத் தகவல்கள் அநாமதேயமாகப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளன. ஆனால் இது தொடர்பாக நாம் எதையும் செய்ய முடியாத நிலையில் இருக்கின்றோம் என பெயர் குறிப்பிடவிரும்பாத பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறினார்.

இந்த சந்தர்ப்பத்தில் கடந்த பொதுத் தேர்தலின்போது மலையகத்தில் இடம்பெற்ற அடாவடித்தனங்களையும் தேர்தல் வன்முறைகளையும் திரும்பிப் பார்க்க வேண்டியது அவசியமாகின்றது.

கண்டி, ரத்தோட்டை, கலகா, கம்பளை ஹங்குராங்கெத்த, வளப்பனை, நானுஓயா ஆகிய பிரதேசங்களில் தொழிலாளர்கள் தாக்கப்பட்டனர். கடைகள் வாகனங்கள் சேதப்படுத்தப்பட்டன. வாக்காளர் அட்டைகள் பறிக்கப்பட்டன. முகமூடி அணிந்த ஆயுதபாணிகள் பாதைகளில் நின்று தொழிலாளர்களை அச்சுறுத்தினர். வாக்குச் சாவடிகளுக்குள் அத்துமீறி நுழைந்து கடமையில் இருந்த அதிகாரிகளை தாக்கி விட்டு வாக்குச் சீட்டுகளை கிழித்தனர். சில உயிரிழப்புகளும் ஏற்பட்டன. சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்பட்ட போதும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பது கசப்பான உண்மை.


எனவே மலையகத்தில் போட்டியிடும் தமிழ் வேட்பாளர்கள் ஒன்றை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். நீங்கள் போட்டியிடும் கட்சிகளின் நிறம் வேறுபட்டதாக இருக்கலாம். கட்சியின் சின்னங்களும் அடையாளங்களும் வெவ்வேறாக இருக்கலாம். ஆனால் நீங்கள் வாக்கு கேட்டுச் செல்லும் மலையக தொழிலாளர்கள் அனைவரும் ஒரே இனத்தவர்கள். ஒரே சமூகத்தவர்கள். அவர்களுள் உங்களைப் பெற்றவர்களும் உடன் பிறப்புகளும், உறவினர்களும் இருக்கின்றனர் என்பதை மறந்து விடக் கூடாது.

அவர்களுடைய வாக்குகள் உங்களுக்குத் தேவை. அதை விட அவர்களுடைய பாதுகாப்பு மிக மிக முக்கியம். அற்ப சொற்ப சலுகைகளுக்காகவும், பதவிகளுக்காகவும் ஒரே சமூகத்தவர்கள் மத்தியில் குத்து வெட்டுகளை ஏற்படுத்தி விடாதீர்கள். அவர்களைப் பலிக் கடாக்களாக்கி நீங்கள் பதவியை பிடிக்க முயற்சிக்காதீர்கள்.

சிறுபான்மை இனத்தவர்களுக்குப் பொது எதிரிகளின் அச்சுறுத்தல்கள் ஏராளம். சிறுபான்மை இனத்தின் மீது வன்முறைகள் ஏற்படும் போது, இவன் கறுப்புக் கட்சிக்காரன் இவன் வெள்ளைக் கட்சிக்காரன் என்று ஒதுக்கி விட்டுத் தாக்குவதில்லை. சில வேளை, கூட இருக்கும் உங்களுக்கும் உதைவிழும். இது அனுபவத்தால் கண்ட உண்மை.

மலையக அரசியல்வாதிகள் மலையகத்தில் அமைதிகாக்க வேண்டும். பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும். அமைதியும் நேர்மையும் நிறைந்த தேர்தலை நடத்த ஆவன செய்ய வேண்டும்.

எனவே மலையக அரசியல்வாதிகள் மலையக மக்களின் பாதுகாப்புக்காக ஒன்றாக குரல் எழுப்ப வேண்டும். சுயநல நோக்குடன் தனிப்பட்ட விரோதங்களை மனதில் வைத்து உங்களை நீங்களே அழிப்பதற்கு அடுத்தவர்களுக்குத் துணை போக வேண்டாம். அப்படி நடந்தால் உங்களை உங்கள் சமூகம் ஒரு போதும் மன்னிக்காது.



மஸ்கெலியா புளும்பீல்ட் தமிழ் மகா வித்தியாலயத்துக்கு வழங்கப் பட்டு வந்த மின்சார இணைப்பை தோட்ட நிர்வாகம் துண்டித்து விட்டது. பாடசாலைக் காணியில் கொழுந்து பறித்து வருகிறது. பாடசாலைக் காணியில் தோட்ட நிர்வாகம் கொழுந்து பறிக்கக் கூடாது என தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். ஆர்ப்பாட்டத்தின் போது தொழிலாளர் தலைவர் தோட்ட நிர்வாக அதிகாரிகளிடம் நிலைமையை விவரிக்கிறார்.

படம்: மஸ்கெலியா நிருபர்

## தமிழ், முஸ்லிம் குடும்பங்கள் காவத்தையில் புறக்கணிப்பு

இரத்தினபுரி மாவட்டம் காவத்தை நகரில் வாழும் சிறுபான்மை இனத் தமிழர்களும் முஸ்லிம்களும் புறக்கணிக்கப்பட்டவர்களாக அதிருப்தியுடன் வாழ்ந்து வருகின்றனர். மாறி மாறி வரும் அரசாங்கங்களினாலும் அரசியல்வாதிகளினாலும் கூட இங்குவாழும் தமிழ், முஸ்லிம் மக்கள் கைவிடப்பட்டுள்ளனர். இது வேதனைக்குரியது.

காவத்தை நகரில் மட்டும் 1,500 தமிழ், முஸ்லிம் குடும்பங்களைச் சேர்ந்த 9 ஆயிரம் பேர் வாழ்கின்றனர்.

தமிழர்கள் வழிபடுவதற்கு ஓர் இந்துக் கோயில் இல்லை. முஸ்லிம் மாணவர்களுக்கு ஒரு முஸ்லிம் பாடசாலை இல்லை.

இரத்தினபுரி மாவட்டத்திலேயே இரத்தினக்கல் வர்த்தகத்தில் முன்னணி இடம் வகிப்பது காவத்தை நகரம். தமிழ், முஸ்லிம் வர்த்தகர்களுக்கு அடுத்து சிங்கள வர்த்தகர்களும் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

காவத்தை நகரை அண்டி உள்ள 27 தோட்டங்களைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளர்களும் காவத்தை நகரிலேயே தமது அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கின்றனர். இரத்தினபுரி மாவட்டத்தில் பிரதான கேந்திர வர்த்தக மையமாக விளங்குகின்றது காவத்தை நகரம்.

மாறி மாறி வரும் அரசாங்கங்களுக்கும் அரசியல் கட்சிகளின் வேட்பாளர்களுக்கும் லட்சம் லட்சமாக வாரி வழங்கும் வர்த்தகப் பிரமுகர்களும் இங்குதான் இருக்கின்றனர்.

இந்துக் கோயில் கட்டுவதற்கும், முஸ்லிம் பாடசாலை அமைப்பதற்கும் நன்கொடைகள் வழங்கவும் ஆதரவளிக்கவும் இவர்கள் தயாராக இருக்கின்றனர்.

ஆனால் இதனை செய்யவிடாமல் தடுக்கின்றனர் பெரும்பான்மை இனவாதிகள்.

அண்மையில் காவத்தை இந்து மகாசபை பல லட்சம் ரூபா செலவில் காணித்துண்டு ஒன்றை வாங்கியது. இந்துக் கோயில் அமைப்பதற்கான அடிக்கல் நடும் வைபவத்தையும் ஏற்பாடு செய்தது.

ஆனால் பெரும்பான்மை இனவாதிகள் அவ்விடத்தில் மறியல் போராட்டம் நடத்தினர். இந்துக் கோயில் அமைப்பதை தடுத்து விட்டனர். இதற்கு சில அரசியல் வாதிகளும் உடந்தையாக இருந்தனர்.

எனினும் மற்றும் ஓர் அரசியல்வாதி காவத்தை தமிழ் மகா வித்தியாலயத்துக்கு அருகில் கோயில் கட்ட இடம் பெற்றுத் தருவதாக உறுதியளித்தார். ஆனால் தோட்ட நிர்வாகம் காணி வழங்க மறுத்து விட்டது. காணி வழங்குவதை தடுத்ததும் ஓர் அரசியல்வாதியே. இதனால் காவத்தையில் இந்துக் கோயில் கட்டுவதற்கும் முட்டுக் கட்டை போடப்பட்டுள்ளது.

அதேபோன்று தனி முஸ்லிம் பாடசாலை ஒன்றைக் கட்ட தீர்மானிக்கப்பட்டது. அரசியல்வாதிகளும், ஒத்துழைப்பு வழங்குவதாகக் கூறினர். ஆனால் எதுவுமே நடைபெறவில்லை.

1996 ஆம் ஆண்டு சப்பிரகமுவ மாகாண கல்வி அமைச்சு முஸ்லிம் பாடசாலை அமைக்க அனுமதி வழங் கியது. ஆனால் இன்றுவரை ஒரு காணித்துண்டைக்கூட பெற்றுக் கொள்ள முடியவில்லை. இங்கும் அரசியல்வாதிகளும் பேரினவாதிகளும் ஆட்சேபனைக் குரல் எழுப்புகின்றனர்.

மூவின மக்களும் சமமாக வாழும் ஒரு நகரம் காவத்தை. இங்குள்ள தமிழ், முஸ்லிம் மக்களுடன் சிங்களவர்களும் கதிர்காமத்திற்கும், சிவனொளிபாத மலைக்கும் சென்று ஒன்றாக வழிபடுகின்றனர்.

ஆனால் நிரந்தரமாக வாழும் இடத்தில் இந்துக் கோயில் கட்டவும், முஸ்லிம் பாடசாலை அமைக்கவும் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். இதனால் இங்கு வாழும் தமிழ், முஸ்லிம் சிறுபான்மை இனத்தவர்கள் பெரும் வேதனையுடன் வாழ்கின்றனர்.

இப்படியான நிலையில் இப்பொழுது தேர்தலும் வந்துவிட்டது. அரசியல் வாதிகள் எதைச் சொல்லி இவர்களிடம் வாக்குக் கேட்பார்கள் என்பதும் இவர்களும் யாருக்கு வாக்குப் போடுவார்கள் என்பதும் புரியாத புதிராகவே இருக்கின்றது.

## டேஸ்ட் கடை தணிகாசலம்

கடைக்குத் தேவையான சாமான்களை வாங்க வேண்டும். கடையை மூடிவிட்டு ரோட்டுக்கு வந்தார் தணிகாசலம் அண்ணன். தோட்டத்து பெரியார் வரும்வரை அந்த பூமரத்து சந்தியில் நின்றார். அப்போது கந்தசாமி கையை உயர்த்தியும் வீசியும் காட்டி எதையோ காரசாரமாக கதைத்துக் கொண்டு வந்தான். அவன் பின்னால் நாலைந்து இளைஞர்களும் வந்தனர்.

''என்ன கந்தசாமி காலையிலேயே ரொம்ப சூடா வார மாதிரி இருக்கு''

''யாரு தணி அண்ணனா? கோப்டையில நெய்வடியுதுன்னு எவனோ சொன்னான் அதைக் கேட்டுப் போனா அங்க நடந்த சங்கதிய பார்த்து சும்மாவே சூடாகுது அண்ணே!''

''பொறுமையா விசியத்தை சொல்லு கந்தா. அமைதியா சொன்னாத்தானே வெவரம் தெரியும்''

''போன கெழம நம்ப தோட்டத்து கோயில் கிட்ட கூட்டம் போட்டாங்களே தெரியும் தானே?''

''ஆமாம் நம்ப தலைவர்மார் எல்லாம் ஒன்னா வந்து எங்களுக்கு ஊடு கட்ட எடம் பார்த்துட்டுப் போனாங்க, அளந்து அடையாளம் கூடப் போட்டாங்களே''


''அந்த இடத்தில தான் ஊடு கட்ட உட மாட்டேன்னு அடிச்ச கூனிய எல்லாம் அந்த தொரை புடுங்கிப் போட்டுப்புட்டாரே''

''ஆமாங்க அண்ணே நம்ப தலவரும் சந்திரிக்கா அம்மா கிட்ட கூட போய் ரிப்போட் பண்ணினாங்க. அந்த அம்மா கண்டும் காணாம இருந்திச்சி.''

''அது எல்லாம் பழைய கதை. இப்ப என்னா நடந்துச்சி இப்படி கொதிச்சி போயி ஓடி வார.''

''கொதிப்பு வராம என்ன தணி அண்ணே, ஊடுகட்ட முடியாம இருக்கவுங்க எல்லாம் பொட்டு களத்துக்கு வாங்க எல்லாருக்கும் ஊடுகட்ட எடம் கெடைச் சிரிச்சின்னு சொன்னாங்க''

''எல்லாரும் போராங்கன்னு நானும் வேலையை உட்டுட்டு விடிய முந்தி போனேன். எனக்கும் மொத ஒரே கூட்டம் பெரிய போலின்.''



''நாலைஞ்சி ஜீப்புகள், இண்டர் கூலர்கள் அணி அணியா வந்திச்சி. அதுல கோட்டும் சூட்டும் போட்ட ஒரு ஐயா வந்தாரு, கூட்டத்துல இருந்த கொஞ்சம் பேரு பெரிய பெரிய மாலைகள போட்டாங்க. பட்டாசு வெடிச்சாங்க.''

''என்ன கந்தா காணி கொடுக்க வந்த அதிகாரிக்கு இவ்வளவு மாலைகளும் வரவேற்புமா?''

''நீங்க ஒன்னுங்க அண்ணே இவரும் முந்தி வேட்டி ஜிப்பாவோட வந்த தலைவரு தான் இப்ப பெரிய பதவி கெடச்சிருக்கும் அதுதான் கோட்டும் சூட்டும்''

''அப்படியா சங்கதி நம்ப தலைவரு ஒருவர் பெரிய அதிகாரியா வந்தா நமக்கு பெருமைதானே. நிறைய நமக்கு செய்வாரு இல்லியா?''

''நமக்கு சந்தோஷம் தாங்க அண்ணே. காணி குடுக்கவும் கடன் தரவும் வந்தவரு கூட்டம் பேச தொடங்கி விட்டாரு. எல்லாத் தலைவர்மாரையும் கிழி கிழின்னு கிழிச்சாரு. போன மாசம் இங்க வந்தப்ப சந்திரிக்கா அம்மாவையும் பிரதம மந்திரியையும் கிழிச்சாரு. இப்ப, தர்மதேவதை, படி அளக்கும் பத்தினி, காவல் தெய்வம் அப்புடி இப்புடின்னு புகழ ஆரம்பிச்சிட்டாரு.''

''அப்படியா! ஆளுங்க என்னா செஞ்சாங்க. வேல வெட்டிய உட்டுட்டு இங்க வந்து கூட்டம் பார்க்கறதா பொலப்புன்னு சலசலக்க ஆரம்பிச்சிட்டாங்க''

''மேல என்னா நடந்திச்சி?''

''எல்லாரும் வரிசையா வாங்க. ஒங்க ஒங்க பிரச்சினையை ஒவ்வொருத்தரா அந்த அம்மாக்கிட்ட சொல்லுங்கன்னாரு.''

''ஐயா நாங்க பிரச்சின பேச வரல்ல. கட்ட முடியாம போன வீட்டை கட்டிக் கொடுக்கிறோம். காணி தாரம்னு தானே சொன்னீங்க அத மொதல்ல பாருங்க என்று கேட்க ஆரம்பிச்சிட்டாங்க''

''ஆமாம் ஆமாம் நானும் கதை வாக்கில பழைய ஞாபகத்தில சொல்லிப்புட்டேன். அத்தனை பேரும் E.P.F. இல கடன் எடுத்திருக்கீங்க. அதுல எவ்வளவு திருப்பி கட்டி இருக்கீங்க. வீட்டை ஏன் கட்டி முடிக்கல. இப்ப வீட்டை கட்டி முடிக்க எவ்வளவு பணம் தேவை? இந்த விவரத்தை தாங்க பார்ப்போம்'' என்றார் அந்த தலைவர்.

''ஐயா எங்க வீட்டை கட்டி முடிக்க பத்தாயிரம் ரூபா தேவை'', ''எனக்கு எப்படியும் 15 ஆயிரம் ரூபா தேவை''

''எனக்கு 560 புளக்கல் மட்டும் இருந்தால் போதும்'' என்று மேலும் பலர் கேட்டனர்.

''சரி எல்லோருடைய எப்ளிகேசனையும் வாங்கிட்டுப் போய் பரிசீலனை செய்து உதவி செய்வேன்'' என்றார். கௌம்பவும் தயாரானார்.

''சேர் சேர்'' எங்க காணிக்கு பதில் சொல்லாம கௌம்பிட்டீங்க. காணி இல்லாம ஆகாசத்தில வீடுகட்ட முடியுங்களா?''

''தம்பி அவசரப்படாத, இப்ப தேர்தல் காலம். மொதல்ல நம்ப ஆளுங்களுக்கு ஓட்ட போட்டு வெத்தி பெறச் செய்யுங்கள். அப்புறம் எல்லாம் சரியாகிவிடும்'' என்றார்.

''ஐயா இப்ப எங்களுக்கு காணி வாங்கித் தரவும் கடன் கொடுக்கவும் நீங்க வந்தீங்களா இல்ல ஒங்க ஆளுங்களுக்கு ஓட்டு கேட்க வந்தீங்களா?

''அது ஒன்னும் இல்லடா இனும் ஒரு மாசத்தில எலக்சன் வரப்போவுது. இப்ப ஓட்டுவாங்கிக் கொடுக்க இவரு ஏஜண்டா வந்திருக்காரு. அவருக்கு காரு, வேனு, அடியில் என் லஞ்சம் கெடச்சி இருக்கு. அதவச்சிகிட்டு நம்பல ஏமாத்த இங்க வந்திருக்காரு''

இப்படி ஒருவர் மாறி ஒருத் தரா பேச ஆரம்பிச்சிட்டாங்க. எதுக்கும் பதில் சொல்ல முடியாம அந்த தலைவரும் வண்டியில் ஏறிப் போய்விட்டார்'' என்றான் கந்தசாமி.

சரி சரி எல்லாரும் பொறுமையா இருங்க. நான் கடைக்குப் பொயிட்டு வாரன் என்று தோட்டத்து லொறியில் ஏறிப் போய்விட்டார் தணிகாசலம்.

— இராசிகா

# சிலை வைத்துவிட்டார்கள் என்பதற்காக அடிமையாவதா?

## தோட்டத் தொழிலாளர்களைப் படுகுழியில் தள்ள உடந்தையாக இருக்க முடியாது

தொண்டமானுக்கு சிலை வைத்து விட்டார்கள் என்பதற்காக நாம் அரசுக்கு அடிமையாகி விட முடியாது. தோட்டத் தொழிலாளர்களைப் படு குழியில் தள்ள உடந்தையாக இருக்க மாட்டோம் என்கிறார் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமான்.

அமரர் சௌமிய மூர்த்தி தொண்டமான் எனக்கோ எனது குடும்பத்திற்கோ மட்டும் சொந்தமானவர் அல்லர். பல தசாப்தங்களாக பின் தள்ளப்பட்ட இந்திய வம்சாவளி மக்களின் நன்மைக்காகப் பல போராட்டங்களை நடத்தி வெற்றி கண்டவர். பறிக்கப்பட்ட பிரஜாவுரிமையை மீண்டும் பெற்றுத் தந்தவர். அடிமைத் தனத்தை ஒழித்தவர்.


ஆறுமுகம்

தொண்டமான் என்ற பெயர் அரசியல் வாதிகளுக்கு சிம்ம சொப்பனமாகவே இருந்தது. இதனால் மாற்றுக் கொள்கைகளை உடைய மாறுபட்ட அரசியல் தலைவர்களும் அமரர் தொண்டமானை தம்முடன் சேர்த்துக் கொண்டனர். இது தொண்டமானின் அரசியல் சாணக்கியம். இதனால் அவர் தேசிய தலைவராக ஏற்றுக் கொள்ளப்பட்டார். சிலைவைத்து கௌரவிக்கப்பட்டார்.

எனது பாட்டனார் என்ற முறையில் நானும் எனது குடும்பத்தவர்களும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கு நன்றி உடையவர்களாக இருக்கின்றோம். இந்த ஒரே காரணத்திற்காக எம்மை நம்பி உள்ள தொழிலாளர்களை குழி தோண்டிப் புதைப்பதற்கு நாம் துணை போகமுடியாது. இதனால் தான் எல்லா மலையக அமைப்புகளும் ஒன்றிணைந்து ஓரணியை அமைப்போம் வாருங்கள் என அழைப்பு விடுத்தோம். சமுதாயப் பற்றும் வளர்ச்சியில் அக்கறையும் உள்ளவர்கள் சேர்ந்து கொண்டனர். எங்களுடைய கூட்டு, சந்தர்ப்பவாதிகளுக்கு நல்ல பாடம் புகட்டும்— என்கிறார் ஆறுமுகம்.

### சந்திரசேகரன்

சீட்டு கிடைக்கவில்லை என்பதால் கோட்டுப் போட்டுக் கொண்டவர் எல்லாம் தலைவராகி விட முடியாது என்கிறார் மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ. சந்திர சேகரன்:

மலையக மக்கள் ஐக்கியப்பட வேண்டும் ஒன்றுபட்டு செயல்பட வேண்டும் என கூறுவது எல்லாம் வெறும் பம்மாத்து. ஒன்றுபடுவோம் என பகிரங்கமாகவே அழைப்பு விடுத்தோம். இன்று மலையகத்தில் ஏற்பட்டிருக்கும் துன்பநிலை. தொழிலாளர் கஷ்டங்கள் ஆறுமுகத்திற்கும் சந்திரசேகரனுக்கும் மட்டும் பாதிப்பை ஏற்படுத்தவில்லை. முழு மலையகத்திற்குமே பாதிப்பை ஏற்படுத்த உள்ளது.

இதை மலையக அரசியல் வாதிகள் அனைவரும் ஏற்றுக் கொள்கின்றனர்... இந்த இழி நிலைக்கு விமோசனம் காண ஒன்றுபடுவோம் வாருங்கள் என அழைத்ததால் வீட்டிற்கு வந்து கூப்பிடவில்லை தெருவில் நின்று சொல்லிவிட்டார்கள் என்று சாக்கு போக்கு சொல்கின்றனர். இவர்கள் தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அக்கறை உடையவர்களா?

கடைசிவரை சீட்டுக் கேட்டு மன் றாடியவர்கள் கிடைக்கவில்லை. என்றவுடன் இன்று கோட்டைப் போட்டுக் கொண்டு எம் மீது வசைபாடு கின்றனர். கோட்டுக்கும் வாகனங்களுக்கும் ஆசைப்பட்டு இனத்தையே காட்டிக் கொடுக்க ஆரம்பித்து விட்டனர்.

கொள்கைகள் அற்ற இந்த அரசியல்வாதிகளை மலையக மக்கள் இனம் கண்டு கொண்டனர். எனவே எங்கள் கூட்டமைப்பை வரவேற்கின்றனர். மக்கள் எம்பக்கம். நாங்கள் மக்களுடன் — என்கிறார் சந்திரசேகரன்.

### இராஜரட்ணம்

விலை பேசியதால் விலகினேன் என்கிறார் இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணி பொருளாளர் எஸ். இராஜரட்ணம்.

ஆரம்பம் முதலே ஐ.தே.க ஆதரவாளர்களாகவும் அபிமானிகளாவும் இருந்தோம். கடைசியாக வேட்பாளர் பட்டியல் தயாரிக்கும் வரை அவர்களை நம்பியே இருந்தோம்.

இறுதி நேரத்தில் போட்டியிட வேண்டாம் — 25 லட்ச ரூபா தருகின்றோம் என்றனர். உரிமை கேட்க வந்த எங்களை விலை கொடுத்து வாங்கப் பார்க்கின்றனர். நாங்கள் விலை போகத் தயாராக இல்லை. அதனால் தான் பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் இணைந்து போட்டியிடுகின்றோம் — என்கிறார் இராஜரட்ணம்.

### கிருஷ்ணசாமி

தோட்டத் தொழிலாளர்கள் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு நன்றிக் கடன்பட்டவர்கள் என்கிறார் விவசாய தோட்ட தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் பி. கிருஷ்ணசாமி.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் தோட்டத் தொழிலாளர்களுக்கு என தனி அமைச்சை ஏற்படுத்தியது. அமைச்சர்களை நியமித்தது. வீடு கட்ட காணி கொடுத்து. சுய வீடமைப்புக் கடன்களையும் கொடுத்தது.

எனவே தோட்டத் தொழிலாளர்கள் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கு நன்றி உடையவர்களாக இருக்க வேண்டும். இல்லையேல் நன்றி கெட்டவர்களாகவோம் — என்கிறார் கிருஷ்ணசாமி.

### முருகையா

வாக்குகளை சிதறடிக்காமல் வெற்றி வாய்ப்பு உள்ளவர்களுக்கே வாக்களிக்க வேண்டும் என்கிறார் அகில இலங்கை ஐக்கிய தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் எஸ். முருகையா

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பால் இன்று பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் தோட்டத் தொழிலாளர்களே. சகல வழிகளிலும் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் இந்திய வம்சாவளி மக்கள் தமது ஒன்றுபட்ட சக்தியின் மூலம் எமது உரிமைகளைப் பெற ஓரணியில் திரள வேண்டும். மலையக மக்கள் மலையக தலைவர்களின் ஒற்றுமையையே விரும்புகின்றனர்.

எனவே தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள், கருத்து முரண்பாடுகள் என்பனவற்றை ஒதுக்கிவிட்டு சக்தி மிக்க வாக்குகளை சிதறடிக்காமல் வெற்றி வாய்ப்பு பெறக்கூடிய வேட்பாளர்களுக்கே வாக்களித்து அவர்களை வெற்றி பெறச் செய்ய வேண்டும் — என்றார் முருகையா.

### சென்னன்

தனித்து நின்றாலும் வெற்றி பெற முடியும் என்கிறார் இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணித் தலைவர் வி. சென்னன்

இந்திய வம்சா வளிமக்கள், குறிப்பாக மலையகத் தமிழர்கள் ஓரணியில் நின்று தனித்துப் போட்டியிட்டால் வெற்றிபெறும் வாய்ப்புக்ள உண்டு. ஆனால் எமது மூத்த தலைவர்கள் மலையகத் தமிழர்களை தலைதூக்க விடவில்லை. ஏதாவது ஓர் அரசியல் கட்சிக்கு அடவு வைத்தே உள்ளனர். அதையேதான் புதிய தலைமுறையி னரும் செய்கின்றனர்.

இதனால் சுதந்திர உணர்வுகள் மழுங்கடிக்கப்பட்டு விட்டன. நாம் ஐக்கியத்தையே விரும்புகின்றோம். ஒற்றுமையை வலியுறுத்துகின்றோம். ஆனால் நாம் உதாசீனப்படுத்தபட்டோம்.

இந்திய வம்சாவளியினர் தனித்து நின்று போட்டியிட்டாலும் வெற்றி வாய்ப்பைப் பெற முடியும் என்பதை உலகுக்கு உணர்த்துவதற்காகவே ஊவா மாகாணத்தில் எந்த ஓர் அரசியல் கட்சியையும் சாராமல் தனித்து நின்று சுயேச்சையாகப் போட்டியிடுகின்றோம். இது ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தி உள்ளது — என்கிறார் டி.வி. சென்னன்.

# தோட்ட உத்தியோகத்தர்களின் வீட்டுப் பிரச்சினை தீருமா?

தேர்தல் நெருங்கி விட்டது. மலையகப் பெருந்தோட்டங்களில் பணிபுரியும் தோட்ட உத்தியோகத்தர்களை அரசியல் வாதிகளும் அவர்களது பிரதிநிதிகளும் தேடி வர ஆரம்பித்து விட்டனர்.

தோட்ட உத்தியோகத்தர்களின் நெடுநாள் பிரச்சினை வீடமைப்புப் பிரச்சினை. இதனை மையமாக வைத்தே மலையக அரசியல் வாதிகள் வாக்குக் கேட்பது வழக்கம்.

1977 முதல் இன்று வரை பல தேர்தல்களை தோட்ட உத்தியோகத்தர்கள் சந்தித்து விட்டார்கள்.

தாம் பதவிக்கு வந்ததும் தோட்ட உத்தியோகத்தர்களுக்கு வீடமைப்பு திட்டத்துக்கு காணி பெற்றுக் கொடுப்பதாகக் கூறி வாக்குக் கேட்டு வருவார்கள். ஆனால் வெற்றி பெற்றதும் தோட்ட உத்தியோகத்தர்களை அடியோடு மறந்து விடுவார்கள். கடந்த தேர்தலின் போதும் இதுதான் நடந்தது. இனி ஐந்து வருடங்களின் பின்பு தானே தோட்ட உத்தியோகத்தர்களின் ஆதரவு தேவை என நினைத்தவர்களுக்கு நாடாளுமன்ற கலைப்பு பேரதிர்ச்சி கொடுத்திருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

இன்று பல தோட்ட உத்தியோகத்தர்கள் இளைப்பாறும் வயதை அடைந்தவுடன் நிர்வாகத்திடம் வீட்டை ஒப்படைக்க வேண்டிய நிலையில் உள்ளனர். இளைப்பாறிய பின்பு குடும்பத்துடன் வசிக்க அவர்களுக்கு இருப்பிடமில்லை. தோட்ட அபிவிருத்திக்காக உழைத்த உத்தியோகத்தர்கள் இறுதியில் உதாசீனப் படுத்தப்படுகிறார்கள்.

இருப்பினும், மனிதாபிமானம் படைத்த சில மலையக அரசியல் வாதிகளின் தலையீட்டால், இளைப்பாறிய பின்னரும் தோட்ட உத்தியோகத்தர்களில் சிலர், தமக்கு நிர்வாகத்தால் வழங்கப்பட்ட வீட்டில் குறிப்பிட்ட ஒரு காலப்பகுதிக்கு வசிக்கவும் அனுமதிக்கப்படுகின்றனர். இந்த அனுமதி எவ்வளவு காலத்துக்கு வழங்கப்படும் என்பது அவர்களைப் பொறுத்ததே.

கடந்த தேர்தல் முடிந்தவுடன் புதைக்கப்பட்ட இந்த வாக்குறுதிகள் இன்றோ அல்லது நாளையோ நமது அரசியல் வாதிகளாலும், அவர்களது அடிவருடிகளாலும் அவசர அவசரமாக தோண்டி எடுக்கப்பட்டு புது மெருகுடன் நமது முன்னிலையில் வைக்கப்படும்.

எனவே இம்முறையும் நாம் வழமை போல் ஏமாந்து விடக் கூடாது. உறுதியுடன் இருக்க வேண்டும்.

எமக்காக நாடாளுமன்றத்தில் குரல் கொடுக்கக் கூடிய, எமது காணிப்பிரச்சினையை முழுமையாக தீர்த்து வைக்கக் கூடிய மலையக மக்களின் பிரச்சினைகளைச் செவிமடுத்து செயல்படுத்தக் கூடிய வேட்பாளருக்கே தோட்ட உத்தியோகத்தர்கள் இம்முறை தமது பெறுமதிமிக்க வாக்குகளை அளிக்க வேண்டும்.

எனவே, தோட்ட உத்தியோகத்தர்கள் தமது தொழிற்சங்க வேற்றுமைகளை மறந்து, குரல் கொடுத்து தமது கோரிக்கைகளை நிறைவேற்றக் கூடிய மலையக வேட்பாளருக்கே இம்முறை வாக்களிக்க வேண்டும். தோட்ட உத்தியோகத்தர்கள் அனைவரும் ஒருமித்து தமது வாக்குப்பலத்தை உணர்த்த வேண்டும்.

தோட்ட உத்தியோகத்தர்களுக்கு காணி வசதி பெற்றுக் கொடுக்க, பழைமை வாய்ந்த, கூடிய அளவிலான் அங்கத்தினர்களைக் கொண்ட இலங்கை தோட்ட சேவையாளர் சங்கமும், பெருந்தோட்ட சேவையாளர் சங்கமும், இலங்கை தோட்ட சேவையாளர் காங்கிரஸூம் தனித்தனியே பல முயற்சிகளை மேற்கொண்டன.

இம்முறை, தோட்ட உத்தியோகத்தர்கள் அனைவரும் தமது வேற்றுமைகளை மறந்து தமது பிரதான பிரச்சினையான காணி / வீடமைப்பு திட்டத்தினை வென்றெடுக்க ஒன்று சேர்ந்து செயல்படுமாறு இலங்கை தோட்ட சேவையாளர் காங்கிரஸின் நுவரெலிய மாவட்ட முன்னாள் தலைவரும், பெருந்தோட்ட சேவையாளர் காங்கிரஸின் ஆரம்பகால பொதுச் செயலாளரும், இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் ஆரம்பகால நிர்வாக இயக்குநருமான ஆர்.கே. சுரேஷ் கோரிக்கை விடுத்துள்ளார்.

— மஸ்கெலியா நிருபர்

## வாசகர்களுக்கு

மலையகம் தொடர்பான ஆக்கங்களை எழுதி அனுப்புங்கள். தரமானவை மலையகக் கண்ணோட்டம் பகுதியில் பிரசுரமாகும். ஆக்கங்களை அனுப்பவேண்டிய முகவரி:

**மலையகக் கண்ணோட்டம்**
**சுடர் ஒளி**
**36/2, பிரெட்ரிக்கா வீதி,**
**கொழும்பு — 06.**

# உரிமை பறிக்கப்பட்டது ஒரு சாபக்கேடு


கந்தசாமி நாயுடு

இந்திய வம்சாவளி மக்களின் வாக்குரிமைகளைப் பறிக்கும் பிரஜாவுரிமைச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டபோது எமது தமிழ்த் தலைவர்கள் ஆளும் பெரும்பான்மைக் கட்சிகளுடன் ஒட்டிக் கொண்டிருந்ததாலேயே எதிர்த்துப் பேசும் சக்தியை இழந்தனர். நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்னர் இந்திய வம்சாவளியினருக்கு இருந்த உரிமை சுதந்திரம் பெற்ற பின் பறிக்கப்பட்டது ஒரு சாபக்கேடு. அதற்குத் துணை நின்றவர்களும் எமது தமிழ்த் தலைவர்கள் தான்.

இப்படிக் கூறுகிறார் தேசிய ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலாளர் எஸ். ஏ. கந்தசாமி நாயுடு.

சாமிமலையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அவர் உரையாற்றினார்.

நமது தமிழ் தலைவர்களிடம் ஒற்றுமை என்பது எந்த ஜென்மத்திலும் ஏற்படாத ஒன்று.

இரண்டாவது நாடாளுமன்றத்தில் இருந்து கலைக்கப்பட்ட 11 ஆவது நாடாளுமன்றம் வரை பதவி வகித்த அனைத்து மலையகத் தலைவர்களும் ஏதாவது ஒரு அரசியல் கட்சிக்கு முட்டுக் கொடுத்துக் கொண்டே அமைச்சுப் பதவிகளை ஏற்றுக் கொண்டனர்.

ஆனால் தற்போதைய மலையகத் தலைவர்கள் இவற்றை எல்லாம் மிஞ்சி விட்டனர். இந்தத் தலைவர்கள் ஒரு போதும் ஒன்றுபடுவது இல்லை. ஒன்று படவிரும்பும் தொழிலாளர்களையும் ஒன்றுபட விடுவதில்லை. தொழிலாளர்களை தொழிற்சங்கம் என்ற கூட்டுக்குள் அடைத்து தேவை ஏற்படும் போது விலைபேசி விற்று விடுகின்றனர்.

மலையக மக்களின் தனித்துவம், பாரம்பரியம் என்பவற்றை இந்தத் தலைவர்கள் அடகு வைத்து விட்டனர். மாறி மாறி வரும் ஆட்சியாளர்களின் கைக்கூலிகளாக இருக்கின்றனர்.

அரசுக்குள் இருந்து கொண்டு தோட்டத் தொழிலாளர்களுக்காகப் பேசும் சுதந்திரம் இந்தத் தலைவர்களுக்கு இல்லை. எனவே இப்படியான தலைமை தேவையா என்பதை மலையக மக்கள் சிந்திக்க வேண்டும்.

மலையக மக்களின் தனித்துவத்தைப் பேணிப் பாதுகாக்கவே தேசிய ஜனநாயகக் கட்சி மயில் சின்னத்தில் தனித்துப் போட்டியிடுகின்றது.

எமது மக்களின் அரசியல், பொருளாதார, சமூக, அடிப்படை உரிமைகளை வென்றெடுக்கவும், பாதுகாக்கவும் நுவரெலியா மாவட்ட வாக்காளர்கள் மலையக மக்களின் சமுதாய வளர்ச்சியை மனதில் கொண்டு மயில் சின்னத்திற்கே வாக்களிக்க வேண்டும்.

இப்படி எஸ்.ஏ. கந்தசாமி நாயுடு கோரிக்கை விடுத்தார்.

இக்கூட்டத்துக்கு சாமிமலை மாவட்ட அமைப்பாளர் பி.என். பெரியசாமி தலைமை வகித்தார். சங்கத்தின் தலைவர் டி. அய்யாத்துரை உட்பட பலரும் பேசினர்.

— அட்டன் நிருபர்

# இந்தியாவின் சார்பாக கோல்ஃப் விளையாட ஆசை

## - கபில்தேவ்

கிரிக்கெட் விளையாட்டில் இந்தியாவுக்கு உலகக் கிண்ணத்தைப் பெற்றுக் கொடுத்தவர் கபில்தேவ். தற்போது கோல்ஃப் விளையாட்டிலும் தாம் இந்தியாவின் சார்பாக பங்குபற்றவேண்டும் என்று அவர் கூறுகிறார்.

''எனது புதிய காதல் கோல்ஃப் விளையாட்டு மீதுதான். கோல்ப் பயிற்சிகளில் ஈடுபடுகிறேன். இந்திய அணி சார்பில் கோல்ஃப் விளையாட வேண்டும் என்பதே எனது இலட்சியம் இவ்வாறு கபில் தேவ் கூறினார்.



கபில் தேவ்

அண்மையில் தமது வர்த்தக விஷயமாக ஒரிஸா மாநிலத்திலுள்ள கட்டாக் நகருக்குச் சென்றார் கபில்தேவ். அப்போது அவரை நிருபர்கள் சூழ்ந்து கொண்டு கேள்வி கேட்டனர். அப்போதே மேற் கண்டவாறு கூறினார் கபில்.

''கிரிக்கெட் வீரர்கள் பலரும் அடிக்கடி காயமடைகின்றனர். நான் விளையாடிய காலத்தில் காயம்போன்ற பிரச்சினைகள் எனக்கு ஏற்படவில்லை. அந்த வகையில்நான் அதிர்ஷ்டசாலி.'' இவ்வாறு கபில் தேவ் கூறினார்.

''1994இல் இலங்கையில் நடைபெற்ற சர்வதேச கிரிக்கெட் போட்டியொன்றின் போது மோசமாக விளையாடுவதற்காக கபில்தேவ் எனக்குப் பணம் தரம் முன்வந்தார்.'' இவ்வாறு இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் சகலதுறை ஆட்டக்காரர் மனோஜ் பிரபாகர் முன்னர் குற்றம் சுமத்தியிருந்தார்.

இந்த குற்றச்சாட்டிலிருந்து கடந்த வாரம் கபில்தேவ் விடுவிக்கப்பட்டார்.

''உங்கள் மீது குற்றம் சுமத்தியவர்களுக்கு எதிராக மான நஷ்ட வழக்குத் தொடர்வீர்களா?'' இவ்வாறு நிருபர்கள் கபில் தேவிடம் கேட்டனர்.

''அவர்களுக்கு நான் விரைவில் பதிலடி கொடுப்பேன். குறைந்தது ஐந்து நாட்களுக்காவது எனது பதிலடி தலைப்புச் செய்தியாக வரும்.'' இவ்வாறு காட்டமாகப் பதிலளித்தார் கபில்தேவ்.

கிரிக்கெட் கோல்ஃப் விளையாட்டுகளில் மட்டுமல்லாது கால்பந்தாட்டத்திலும் அதிக ஆர்வமுடையவர் கபில்தேவ்.

# முதல் நிலை டெஸ்ட் அணி எது? ஆஸி. – தெ.ஆ. தொடர் தீர்மானிக்கும்

## ஸ்ரீவ்வோ கூறுகிறார்

டெஸ்ட் கிரிக்கெட்டில் உலகின் முதல் நிலை அணியாக அவுஸ்திரேலியா உள்ளது. ஆனால் அவ்வணியின் தலைவர் ஸ்ரீவ் வோவுக்கு அதில் உடன்பாடில்லை.

''அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள தென்னாபிரிக்காவுடனான டெஸ்ட் தொடரே முதல் நிலை அணி எது என்பதைத் தீர் மானிக்கும்.'' இவ்வாறு ஸ்ரீவ் வோ கூறினார்.



ஸ்ரீவ் வோ

அவுஸ்திரேலிய பத்திரிகை யொன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

தென்னாபிரிக்க அணிக்கெதிராக விளையாடு வது மிகவும் சவாலானது. ஷோன் பொலொக் தலைமை யிலான தென்னாபிரிக்க அணி மிகவும் கட்டுக்கோப்பானது. அவுஸ்திரேலியாவின் கிளென் மெக்ராத் போன்று பொலொக்கும் சிறந்த வேகப்பந்து வீச்சாளராவார்.

தற்போதைய நிலையில் தாமே சிறந்த அணி என தென்னாபிரிக்கர்கள் எண்ணுகின்றனர். அவுஸ்திரேலியாவே முதல்நிலை அணி என நாம் எண்ணுகிறோம்.

தென்னாபிரிக்காவை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நாம் டெஸ்ட் தொடர்களில் தோற்கடித்தால் நாமே சிறந்த அணி என்று மக்கள் ஏற்றுக்கொள்வர்.'' இவ்வாறு ஸ்ரீவ் வோ கூறினார்.

டெஸ்ட் தரவரிசையில் அவுஸ்திரேலியா முதலிடத்தில் உள்ளது. தென்னாபிரிக்கா இரண்டாவது இடத்தில் உள்ளது.

தென்னாபிரிக்கா அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடர் டிசம்பர் 22ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

அதற்கு முன்னர் நியூஸிலாந்து அணியுடன் டெஸ்ட் தொடரொன்றில் பங்குபற்றவுள்ளது அவுஸ்திரேலியா.

இத்தொடரின் முதல் போட்டி நவம்பர் 8ஆம் திகதி முதல் பிரிஸ் பேனில் நடை பெறுகிறது.

தொடர்ச்சியாக 16 டெஸ்ட் போட்டிகளில் வெற்றி பெற்றது அவுஸ்திரேலிய அணி. இவ்வருடம் மார்ச் மாதம் இந்தியாவுடனான போட்டிகளில் 2-1 விகிதத்தில் தோல்வியுற்றது. அதன்பின் இறுதியாக பங்குபற்றிய ஆஷஸ் தொடரில் 4-1 விகிதத்தில் வெற்றி பெற்றது.

# தொலைந்த பதக்கம் மீண்டும் கிடைத்தது

அவுஸ்திரேலிய வீராங்கனையொருவர் திருடப்பட்ட தமது தங்கப்பதக்கத்தை மீளப் பெற்றுள்ளார்.

பீட்டர் புர்ஜ் எனும்இவ் வீராங்கனை 1998இல் நடைபெற்ற பொதுநலவாய விளையாட்டு விழாவில் நீளம் பாய்தலில் தங்கப்பதக்கம் பெற்றார்.

அண்மையில் இவர் அடிலெய்டி நகரிலிருந்து சிட்னிக்கு இடம்பெயர்ந்தார். அப்போது அவரது பயணப் பையொன்று திருடப்பட்டது.

பொதுநலவாயப்போட்டியில் வென்ற தங்கப் பதக்கம், வீடியோ கெமரா, ஸ்டீரியோ ரெக்கோர்டர், ஒலிம்பிக் உடைகள் முதலானவை இப்பையில் அடங்கியிருந்தன.

இப்பொருட்களைத் திருடிய நபர் தங்கப் பதக்கத்தை மாத்திரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளார்.

''அடிலெய்ட்டிலுள்ள பொலிஸ் நிலையத்திற்குள் திடீரென புகுந்த இந்நபர் பதக்கத்தை மேசையில் எறிந்துவிட்டு ஓடினார். கடமையிலிருந்த பொலிஸார் எவரும் அவரைக் காணவில்லை.

பொலிஸார் தொலைபேசி மூலம் எனக்கு இத்தகவலைத் தெரிவித்தனர்.'' இவ்வாறு பீட்டர் புர்ஜ் தெரிவித்துள்ளார்.

பதக்கம் இணைக்கப்பட்டிருந்த நாடா வெட்டப்பட்டுள்ளது. ஆனாலும் தங்கப் பதக்கம் சேதமில்லாமல் இருக்கிறது.

மீண் டும் அதைக் காண்பதில் மிகவும் மகிழ்ச்சி யடைகிறேன். இவ்வாறு பீட்டர் புர்ஜ் கூறினார்.

# இந்தியாவின் பாதுகாப்பில் இங்கிலாந்து திருப்தி

இங்கிலாந்து அணியின் சுற்றுலாவுக்காக இந்தியா மேற்கொண்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து இங்கிலாந்து கிரிக்கெட் சபை திருப்தி தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தான் மீதான தாக்குதல் காரணமாக இங்கிலாந்து கிரிக்கெட் வீரர்கள் பலர் இந்தியாவுக்கு விஜயம் செய்யத் தயங்கினர். இதனால் இச்சுற்றுலா நடைபெறுமா என்பது குறித்து சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.



ஜோன் கார்

இதையடுத்து இங்கிலாந்து - வேல்ஸ் கிரிக்கெட் சபையின் கிரிக்கெட் நடவடிக்கைகள் இயக்குநர் ஜோன் கார், கிரிக்கெட் வீரர்கள் சங்கத் தலைவர் ரிம் கோர்மன் ஆகியோர் கடந்த வாரம் இந்தியாவுக்கு விஜயம் செய்தனர்.

இந்தியாவில் நிலை மையைப் பார்வையிட்ட பின்னர் அவர்கள் திருப்தி தெரிவித்தனர். இந்திய கிரிக்கெட் அதிகாரிகளுடன் சுமார் 3 மணிநேரம் இவர்கள் பேச்சுவார்த்தை நடத்தினர். ''இப்பேச்சுவார்த்தையின் போது போட்டி ஆயத்தங்கள் குறித்தே பேசப்பட்டது.

இச்சுற்றுலாவை நடத்துவதாஇல்லையா என்று ஆராயப் படவில்லை.

பாதுகாப்பு குறித்து எழுத்து மூலமான உத்தரவாதங்கள் எதனையும் இங்கிலாந்து அதிகாரிகள் கோரவில்லை.'' இவ்வாறு இந்திய கிரிக்கெட் சபையின் தலைவர் ஜக்மோகன் டால்மியா தெரிவித்தார்.

நவம்பர் 14ஆம் திகதி இந்தியாவுக்கு வருகை தரவுள்ள இங்கிலாந்து அணி 3 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றவுள்ளது. அதையடுத்து நத்தார் விடுமுறைக்காகத் தாயகம் திரும்பவுள்ளது.

பின்னர் புதுவருடத்தில் 5 ஒருநாள் போட்டிகளில் பங்குபற்றுவதற்காக மீண்டும் இந்தியாவுக்கு இங்கிலாந்து அணி விஜயம் செய்யவுள்ளது.

# விளையாட்டுச் செய்திகள்!

-ஆர். சேதுராமன்

# "ஷேன்வோர்ன் அணித்தலைவராகலாம்"

## அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை கூறுகிறது

அவுஸ்திரேலிய சுழற்பந்துவீச்சாளர் ஷேன்வோர்ன் ஸ்ரீவ்வோவுக்குப் பின்னர் அவுஸ்திரேலிய அணித்தலைவராக இடமுள்ளது. இவ்வாறு அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை ஷேன் வோர்னிடம் தெரிவித்துள்ளது.

''தலைவர் பதவிக்கான பரிசீலனையில் நானும் இருக்கிறேன். அதற்கான கதவுகள் இன்னும் மூடப்படவில்லை. இவ்வாறு அவுஸ் திரேலிய கிரிக்கெட் சபை என்னிடம் தெரிவித்தது.



ஷேன்வோர்ன்

தலைமைப் பதவியைப் பெறுவதற்கு நான் பிரயத்தனம் செய்யவில்லை. அணிக்கு எது அவசியமோ அதைச் செய்வதே எனது பணியாகும்.'' இவ்வாறு ஷேன் வோர்ன் கூறியுள்ளார்.

முன்னர் அவுஸ்திரேலிய அணியின் உப தலைவராக இருந்தவர் ஷேன்வோர்ன். கடந்த வருடம் இங்கிலாந்து பிராந்திய அணியொன்றில் விளையாடச் சென்றார் அவர்.

அப்போது மருத்துவத் தாதி ஒருவரிடம் தொலைபேசியில் ஆபாசமாகப் பேசினார் வோர்ன். இவ்விடயம் பத்திரிகைகள் மூலம் அம்பலமானது.

இதையடுத்து அவரது உபதலைவர் பதவி பறிக்கப்பட்டது. விக்கெட் காப்பாளரும் அதிரடி துடுப்பாட்ட வீரருமான அடம் கில்கிறிஸ்ட்டிடம் அப்பதவி ஒப்படைக்கப்பட்டது.

அதனால் ஷேன்வோர்ன் அணித்தலைவராவதற்கான வாய்ப்பு முற்றாக மறைந்துவிட்டது என்று கருதப்பட்டது.

இதுவரை டெஸ்ட் போட்டிகள் எதிலும் தலைவராகும் வாய்ப்பு ஷேன்வோர்னுக்குக் கிடைக்கவில்லை.

ஆனால் ஒருநாள் போட்டிகளில் அவர் தலைவராகக் கடமையாற்றியுள்ளார்.

அவுஸ்திரேலிய அணியின் இலங்கை இங்கிலாந்து சுற்றுலாக்களின் போது ஒருநாள் போட்டிகளுக்கு அவர் தலைமை தாங்கியுள்ளார்.


மொத்தமாக 11 போட்டிகளில் ஷேன் வோர்ன் தலைவராகப் பணியாற்றியுள்ளார். இவற்றுள் 10 போட்டிகளில் அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சனத் ஜயசூரிய 7,000 ஓட்டங்கள்

இலங்கை அணித்தலைவர் சனத் ஜயசூரிய ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் 7000 ஓட்டங்களைக் கடந்துள்ளார்.

நவம்பர் 2ஆம் திகதி சார்ஜாவில் நடைபெற்ற பாகிஸ்தான் அணியுடனான போட்டியின்போது தனது 7000ஆவது ஓட்டத்தைக் கடந்தார் அவர்.

இலங்கை வீரர்களில் 7000 ஓட்டங்களைக் கடந்த மூன்றாவது வீரர் சனத் ஜயசூரிய ஆவார். ஏற்கெனவே அரவிந்த டி சில்வா, (7854) அர்ஜுன ரணதுங்க ஆகியோர் (7268) 7000 இற்கு மேற்பட்ட ஓட்டங்களைப் பெற்றுள்ளனர்.



சனத்

சர்வதேச ரீதியில் இந்த இலக்கைக் கடந்த 14ஆவது வீரர் சனத் ஜயசூரிய ஆவார்.

நவம்பர் 5ஆம் திகதிவரை ஒவ்வொரு அணிக்கெதிராகவும் ஜயசூரிய பெற் றுள்ள ஓட்டங்களின் விவரம் பின் வருமாறு:

| அணிகள் | போ | இன் | ஆ.இ | ஓட். | ஆ.கூ. | சராசரி | 100 | 50 | 0 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| அவுஸ்திரேலியா | 25 | 25 | 2 | 437 | 65 | 19.00 | 0 | 2 | 2 |
| பங்களாதேஷ் | 4 | 3 | 0 | 187 | 108 | 62.3 | 1 | 1 | 0 |
| இங்கிலாந்து | 13 | 12 | 1 | 307 | 82 | 27.90 | 0 | 2 | 2 |
| இந்தியா | 46 | 44 | 3 | 1609 | 189 | 39.24 | 4 | 93ளள | |
| கென்யா | 3 | 3 | 0 | 88 | 44 | 29.33 | 0 | 0 | 0 |
| நியூஸிலாந்து | 30 | 29 | 0 | 1003 | 140 | 35.58 | 3 | 6 | 3 |
| பாகிஸ்தான் | 59 | 56 | 1 | 1787 | 134* | 32.49 | 2 | 15 | 6 |
| தென்னாபிரிக்கா | 24 | 24 | 0 | 474 | 68 | 19.75 | 0 | 3 | 1 |
| மேற்கிந்தியத்தீவுகள் | 20 | 20 | 1 | 443 | 88 | 23.31 | 0 | 2 | 0 |
| ஸிம்பாப்வே | 23 | 23 | 0 | 706 | 102 | 30.69 | 1 | 5 | 0 |
| மொத்தம் | 247 | 239 | 8 | 7041 | 189 | 30.48 | 11 | 45 | 17 |

போ: போட்டி, இன்: இன்னிங்ஸ், ஆ.இ: ஆட்டமிழக்காத தடவை ஓட்: ஓட்டங்கள், ஆ.கூ: ஆகக்கூடுதலான ஓட்டம், 100 : சதம், 5: அரைச்சதம், 0 அரைச் சதம், 0 : ஓட் டம் எதுவும் பெறாமல் ஆட்டமிழந்த தடவை.

# பல்கலைக் கழகத்தில் நிகழ்ந்த ஒரு விழா


நாடகத்தில் ஒரு காட்சி

மலைமகள், அலைமகள், கலைமகள் ஆகிய முப்பெரும்தேவியருக்கும் முறையே மூன்று நாட்கள் விழா எடுத்து கொண்டாடும் ஒன்பது இராத்திரிகளே நவராத்திரி விழா ஆகும்.

விஜயதசமி என்று அழைக்கப்படும் இறுதிப் பத்தாம் நாள் மிகவும் சிறப்பான விழாவாக அமையும், இதனையே மானம்புவிழா என்றும் அழைப்பர்.

இவ்விழா சைவர்கள் மத்தியில் மிக முக்கியத்துவம் வாய்ந்த விழாக்களில் ஒன்றாகும்.

கல்விசார் கூடங்கள், தொழில்சார் இடங்கள், மனைகள் என பல இடங்களிலும் கொண்டாடப்படும் இவ்விழா கடந்த 21 ஆம் திகதி கொழும்பு பல்கலைக்கழகத்திலும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

கொழும்பு பல்கலைக்கழக புதிய கலை மண்டபத்தில் நடைபெற்ற வாணி விழாவிற்கு பல்கலைக்கழகத்தின் இந்து மன்றத் தலைவர் தலைமை வகித்தார்.

விழாவில் பிரதம விருந்தினராக கொழும்பு உயர் நீதிமன்ற நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

மற்றும் மாணவர்கள், விரிவுரையாளர்கள், பழைய மாணவர்கள், என பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டு விழாவை அலங்கரித்தனர்.

பேலியகொட பிள்ளையார் கோயில் பிரதம பூசகரின் பூசையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வுகள் ஆரம்பமாகின.

கொழும்பு பல்கலைக்கழக மாணவர்கள் வழங்கிய பஜனை, பரதநாட்டிய நிகழ்வுகள் சிறந்த முறையில் நடைபெற்றன.

தொடர்ந்து இந்து மன்றத் தலைவர் உரையும் பிரதம விருந்தினர் சிறப்புரையும் இடம்பெற்றன.

வாணி விழாவின் அன்றைய சிறப்பு நிகழ்ச்சியாக கொழும்பு, பேராதனை, மொறட்டுவ பல்கலைக்கழக மாணவர்கள் மும்முனைகளாக பிரிந்து பங்குபற்றிய "இன்றைய இளைஞர்களிடையே சமய அறிவு குன்றிவரக் காரணம் சமுதாயத்தின் தாக்கமா? விஞ்ஞானத்தின் வளர்ச்சியா? மேலை நாட்டு மோகமா?" என்ற தலைப்பிலான பட்டி மன்றம் அமைந்தது.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இந்தப் பட்டி மன்ற நிகழ்வில் மாணவர்கள் தமது வாதங்களை காரசாரமாகவும், ஆணித்தரமாகவும் முன்வைத்தமை பார்வையாளர்களை மிகவும் கவர்ந்தது.

"சமுதாயத்தின் தாக்கமே" என்ற அணிக்காக பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களும், "விஞ்ஞானத்தின் வளர்ச்சியே" என்ற அணிக்காக கொழும்பு பல்கலைக்கழக மாணவர்களும், "மேலை நாட்டு மோகமே" என்ற அணிக்காக மொறட்டுவ பல்கலைக்கழக மாணவர்களும் கலந்துகொண்டு தமது வாதப்பிரதி வாதங்களை சூடும் சுவையுமாகப் பரிமாறிக் கொண்டார்கள்.

இப்பட்டி மன்றத்தின் நடுவராக யாழ் கம்பன் கழகத்தின் அமைப்பாளரான ஸ்ரீ பிரஷாந்தன் கடமையாற்றினார்.

இறுதியாக முகாமைத்துவ, நீதிப்பீட, விஞ்ஞானபீட மாணவர்களின் நெறியாழ்கையில் உருவான இரு வேறுபட்ட நகைச் சுவை, சமூக நாடகங்கள் மேடையேற்றப் பட்டு அனைவரது பாராட்டுக்களையும் பெற்றுக் கொண்டன.

— கருடன்

# நகைச் சுவைக் கதம்பம்



வெளியீட்டு நிகழ்வுக்குத் தலைமை வகித்த கம்பவாரிதி இ.ஜெயராஜ், சூரியன் எப்.எம். தமிழ் நிகழ்ச்சிப் பணிப்பாளர் அபர்ணா சுதன் மற்றும் நூலாசிரியர் இ.சிறிஸ்கந்தராஜா.

சிரிப்போடு சிந்திக்கவும் வைக்கின்ற விகடத் துணுக்குகளும், நகைச் சுவைச் கதைகளும் அடங்கிய "நகைச்சுவைக் கதம்பம்" என்னும் நூல் வெளிவந்திருக்கிறது.

இ. சிறிஸ்கந்தராசாவே இந்த நூலின் ஆசிரியர். "திருக்குறளில் திகழும் வர்ண ஜாலங்கள்" என்னும் நூலின் ஆசிரியரும் இவரே.

இந்த நூலின் வெளியீட்டு விழா கடந்த 28 ஆம் திகதி கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

வாய்விட்டு சிரித்தால் நோய் விட்டுப்போகும் என்பார்கள். சிரித்து வாழ்வதன் மூலம் அனைத்து உடல், உளநோய்களில் இருந்தும் நம்மை நாம் காத்துக்கொள்ளலாம் என்கிறது உடல், உள மருத்துவக் குறிப்புகள்.


நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினர்

வெளியீட்டு நிகழ்வில் தலைமை வகித்துப் பேசிய அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் இ. ஜெயராஜ் சிரிப்பு வெடிகளை எடுத்தெடுத்து விட்டார். வாய் எல்லாம் பல்லாக சபையினர் குலுங்கக் குலுங்க சிரித்தார்கள்.

சிரிப்பின் அவசியம், தன்மை பற்றி அவர் குறிப்பிடுகையில் "நவரசங்களில் ஒரு ரசமே சிரிப்பு. தேவை ஏற்படும் பொழுதே ஏனைய ரசங்களை அபிநயம் மூலம் வெளிக்காட்ட முடியும். ஆனால் சிரிப்பு மட்டுமே நடனத்தின் போது எப்போதும் வெளிக்காட்டப் படக் கூடிய ஒரு ரசம்" என்று சிரிப்பின் சிறப்பை விளக்கினார் கம்பவாரிதி.

கொழும்பு தமிழ்ச்சங்கத் தலைவர் கலாசூரி இ. சிவகுருநாதன், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அறிவிப்பாளர் இளையதம்பி தயானந்தா, மத்துகம பொலிஸ் உதவி அத்தியட்சகர் கே. அரசரத்தினம் ஆகியோர் சிறப்புரைகளை சிரிப்புரைகளாக வழங்கி அவையை மகிழ வைத்தனர்.

சூரியன் எப். எம். தமிழ் நிகழ்ச்சிப் பணிப்பாளர் அபர்ணா சுதன் நூலுக்கான நயவுரையை தனக்கே உரித்தான பாணியில் வழங்கி கூட்டத்தை குதூகலிக்கச் செய்தார்.

நெருக்கடியான காலச் சூழலின் அழுத்தத்தால் மரத்துப்போன மனங்களுக்கு சிரிப்பு மருந்து வழங்கி சிந்தை குளிரச் செய்ய முனைகிறது இந்த நகைச்சுவைக் கதம்பம்.

— இலக்கியன்



ஓய்வுபெற்ற ஆசிரியரும் முன்னாள் சமூகக் கல்வி ஆசிரிய ஆலோசகருமான எம்.ஐ.எம். அப்துல் லத்தீப் எழுதிய "புனித இஸ்லாம் கூறும் தொப்பி தலைப்பாகையின் கண்ணியம்" என்னும் நூல் வெளியீட்டு விழா கடந்த 12ஆம் திகதி புத்தளம் இஸ்லாமிய கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் விசேட அதிதியாகக் கலந்து கொண்ட பன்னூல் ஆசிரியர் மௌலவி எச். சலாஹுதீன் சிறப்பு அதிதியாகக் கலந்தகொண்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வரிடம் சிறப்பு பிரதி ஒன்றைக் கையளிப்பதைப் படத்தில் காண்கிறீர்கள்.

படம்: ஏ.எஸ்.புல்கி

# கலையமுதம்

## சிறுவர் அறிவுத் திறனுக்கு நீதிக் கதைகள்

இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள். ஆதலால் அவர்களின் அறிவு வளர்ச்சியை மேம்படுத்த பெற்றோர்கள் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

சிறுவர்களுக்கு அறிவுபூர்வமான அரிய பல கருத்துக்களை சிறுவர்களுக்கான நூல்களின் மூலம் போதிக்க முடியும்.

இத்தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்குடனேயே பிறைட்டன் புத்தக நிறுவனம் "பிறைட்டன் குழந்தைகளுக்கான நீதிக் கதைகள்" என்னும் நூலை வெளியிட்டுள்ளது.



சிறுவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கு வளர்ச்சி ஆகியவற்றுக்கு நீதிக்கதைகள் உறுதுணை புரியும் என்பதனை இந்த நூல் நன்கு உணர்த்துவதாய் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த நீதிக்கதைகள் மூலம் நூலாசிரியர் மாணவர்களுக்கு மூன்று மொழிகளிலும் பரீட்சயத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் நூலை உருவாக்கியுள்ளார்.

ஒவ்வொரு கதைக்கு முதலிலும் பத்து புதிய சொற்கள் மும்மொழிகளிலும் தரப்பட்டுள்ளன.

மூன்று மொழிகளிலும் அமையப் பெற்ற நீதிக் கதைகளை அடுத்து, மூன்று நீதி வாக்கியங்கள் தரப்பட்டுள்ளன. இவற்றோடு உறுப்பெழுத்து எழுதிப் பழகுவதற்கும், மனனம் செய்வதற்கும் ஏற்ற முறையில் செயல்முறைப் பயிற்சி வேலைகளும் வழங்கப் பட்டிருக்கின்றன.

இந்த நூல் முதலாவது நீதிக்கதைகள். இரண்டாவது நீதிக்கதைகள் என இரண்டு பகுதிகளைக் கொண்டது.

சிறுவயதிலேயே இனபேதங்களை மறந்து எல்லா மொழிகளையும் தெரிந்து கொள்ள சந்தர்ப்பம் வழங்கும் இந்நூல், சிறுவர்களுக்கு ஓர் வரப்பிரசாதமாகும்.

இத்தனை சிறப்புக்களையும் கொண்ட இந்த நூலின் விலை 50 ரூபாய்கள் தான் என்றால் ஆச்சரியமாக உள்ளதல்லவா?

# அழிக்கப்பட்டுவரும் உயிரினங்கள்!

மனிதக் குரங்குகள், அல்பட்ராஸ்கள், நட்டான் பூச்சிகள் என எதையுமே விட்டு வைக்காமல் பல்வகை உயிரினங்களையும் மனிதன் மிக விரைவாக அழிவின் விளிம்புக்குக் கொண்டு செல்கிறான்.

இதனால் நாம் உயிர் வாழ்வதே ஆபத்தாக இருக்கிறது என கனடாவில் வெளிவரும் "குளோப் அன்ட் மெயில்" குறிப்பிடுகிறது.

இந்தச் செய்தித் தாளிலுள்ள குறிப்புகள் ஜெனிவாவிலுள்ள உலக இயற்கை வள பாதுகாப்பு யூனியனால் (IUCN) வெளியிடப்பட்ட "ஆபத்திலிருக்கும் உயிரினங்களின் சிவப்பு பட்டியல்" சம்பந்தப்பட்டவை.

தாவரங்களிலும் உயிரினங்களிலும் 11,000 க்கும் அதிகமான வகைகள் மிக மிக ஆபத்தான நிலையில் இருக்கின்றன என சிவப்பு பட்டியல் எச்சரிக்கிறது.



அவற்றில் பாலூட்டிகளே மிகவும் ஆபத்தில் இருப்பவை. பூமியில் வாழும் பாலூட்டிகளில் சுமார் நான்கு வகைகளில் ஒன்று அழிந்து விடும் ஆபத்தில் இருக்கின்றன என்று குளோப் தெரிவிக்கிறது.

இந்த அழிவுக்கு யாரைக் குற்றம் சாட்டுவது?

சர்வதேச செல்லப்பிராணி வியாபாரம், நூற்றுக்கணக்கான கொக்கிகளைக் கொண்ட நீளமான இழைகளால் மீன்பிடித்தல், வாழிடங்கள் மறைந்து வருதல் ஆகியவற்றை விஞ்ஞானிகள் காரணமாக சுட்டிக் காட்டுகிறார்கள்.

மேலும் மனிதருடைய பாதம் படாத காடுகளில் சாலைகள் அதிகமாக அமைக்கப்படுவதால், ஒரு காலத்தில் பிடிக்க முடியாமலிருந்த வனவிலங்குகளை இன்று மக்களால் பிடிக்க முடிகிறது. இவற்றில் பெரும்பாலானவை மக்களின் உணவாகின்றன. அப்படியே எல்லாவற்றையும் அடித்து சாப்பிட்டு வந்தால், கடைசியில் உயிரினங்களே இல்லாமல் சுத்தமாக மறைந்து விடும்.

இதனால் மனிதருக்கே ஆபத்து என விஞ்ஞானிகள் எச்சரிக்கிறார்கள். "நாம் உயிரினங்களை அடியோடு அழிக்கும் போது நாம் உயிர்வாழ அவசியமான சூழலைக் கெடுக்கிறோம்" என டேவிட் பிராக்கட் சொல்கிறார்.

அவர் உலக இயற்கை வள பாதுகாப்பு யூனியனின் உயிரின பாதுகாப்புக் குழுவின் தலைவராக இருக்கிறார்.

"உயிரினங்களின் பல்வேறு வகைகள் வெறுமனே மிருகக் காட்சிச் சாலைகளில் இருந்து விட்டால் போதாது. இந்த நெருக்கடியை சமாளிப்பதற்கு மனித ஆற்றல் மற்றும் நிதி உதவியை தற்போதைய அளவிலிருந்து 10 முதல் 100 மடங்குக்கு அதிகரிக்க வேண்டும்." என்று அவர் கூறினார்.

இதற்கான நடவடிக்கையை எடுக்கும்படி IUCN இன் அறிக்கை உலக சமுதாயத்தை உந்துவிக்கிறது. ஆனால் நமது பூமியின் வள ஆதாரங்களை பாதுகாப்பதற்கு எடுக்கும் உண்மையான முயற்சிகளுக்கு மனிதன் பெரும் தடையாக இருப்பது வேதனைக்குரிய விடயமே!

எனவே இறைவனின் படைப்புகளான விலங்கினங்களை அழிக்காது... அவை பல்கிப்பெருக எங்களால் ஆன பங்களிப்பைச் செய்வோம்!

— ரமேஷ்காந்த் ஜெயசீலன்

# சின்னஞ் சிறிசுகளை இப்படி சித்திரவதை செய்தால் எப்படி?

சிறுவர்களின் நலன் பேணும் யுனிசெப் போன்ற உலக நிறுவனங்கள் இருக்கின்றன.

ஒவ்வொரு நாட்டிலும் சிறுவர் நல்வாழ்வுக்கான சட்டதிட்டங்களும் இருக்கவே செய்கின்றன.

வருடந்தோறும் சிறுவர் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

அந்தத் தினத்தில் விழாக்கள், ஊர்வலங்கள், கண்காட்சிகள் என்று பலப்பல நிகழ்ச்சிகள்.

எல்லாம் இருந்தும் என்ன? சிறுவர்கள் இன்றும் பல வழிகளிலும் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறார்கள்.

கள்ளமறியா வயதில் அவர்கள் பாலியல் ரீதியில் களங்கப்படுத்தப்படுகிறார்கள். வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள். சக்திக்கு மீறிய உழைப்பு அவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்பார்த்தது கிடைக்காவிட்டால் சித்திரவதை செய்யப்படுகிறார்கள்.

சிறிசுகள் அதையெல்லாம் தாங்கிக் கொள்ளுமா?

படத்தில் உள்ள சிறுமியைப் பாருங்கள். முகத்தில் உள்ள வடுக்களை நோக்குங்கள். கண்களில் நிழலாடும் சோகத்தை உணருங்கள்.

இந்தச் சிறுமியைப் போல் இன்னும் எத்தனை பேர் இருக்கிறார்களோ!

இவள் எறிகணைத் தாக்குதலில் தனது தாய் தந்தையரை இழந்த அபாக்கியசாலி. ஆதரிப்பார் எவருமில்லை. அநாதையாக அலைந்து திரிந்தாள்.

நல்ல நிலையில் உள்ள குடும்பம் ஒன்று இவளைத் தத்தெடுத்தது.

குழந்தை குட்டி இல்லாதவர்கள் பிள்ளைப் பாசத்தால் மற்றவர்களின் பிள்ளையைத் தத்து எடுக்கிறார்கள். பெற்ற பிள்ளையாக வளர்க்கவேண்டும் என்றே விரும்புகிறார்கள்.

ஆனால் படத்தில் உள்ள சிறுமி தத்து எடுத்து பிள்ளையாக வளர்க்கப்பட்டாளா? வீட்டு வேலைக்காரியாகவே வைக்கப்பட்டாள்.

வேலை என்றால் வேலைதான். இரவு பகலாக வேலை. அதில் எஜமானி அம்மாளுக்குத் திருப்தி ஏற்படாவிட்டால் தண்டனை. அது சித்திரவதையாகக் கிடைக்கிறது. முகத்தில் வாயருகில் உள்ள புண்கள், எரிகாயங்கள், வடுக்கள் எல்லாம் அப்பப்பா.....!

எரிந்துகொண்டிருக்கும் விறகால் வாயில் சுட்டால் எப்படி இருக்கும்? அனுபவித்தவர்களுக்குத்தான் அந்த வேதனை தெரியும்.



இந்தச் சிறு வயதிலேயே படத்தில் உள்ள சிறுமி பட்டதெல்லாம்போதும் இனிப் படமுடியாது என்று சொல்லும் அளவுக்குத் துயரங்களை அனுபவித்துவிட்டாள்.

இந்தச் சிறுமிக்கும் இவளைப்போன்ற எத்தனையோ சிறுவர் சிறுமியருக்கும் எப்போது விடிவு ஏற்படப்போகிறது? புத்தாயிரமாம் ஆண்டையும் வீணடிக்கப்போகி றோமா? நாம் ஒவ்வொருவரும் எண்ணிப் பார்க்கவேண்டிய காத்திரமான விஷயம் இது!

குறிப்பு: படத்தில் உள்ள சிறுமியின் ஊர், பெயர் விவரங்கள் சட்டக்காரணங்களால் வெளியிடப்படவில்லை.




## முக்கிய புள்ளிக்கு கிலி

நாடாளுமன்றத்தில் 'அநுரா'கம பாடிக்கொண்டிருந்த அந்த பிரம்மச்சாரி அரசியல்வாதி தனது புகுந்த வீட்டுக்குத் திரும்பியவுடன் அங்கிருந்த முக்கிய புள்ளிகளுக்கு கிலி பிடித்துவிட்டதாம்.

அடுத்த ஜனாதிபதி நான்தான் என்று கனவு கண்டு வந்த ஹொறணையின் 'ரத்ன'மானவர்தான் அதிகளவுக்கு 'அப்சட்' ஆகியிருக்கிறாராம். முதலுக்கே மோசம் வந்துவிடுமோ என்று அவர் பயப்படுகிறாராம்.

## ஒருநாள் போதுமே!

தனித்துவக் கட்சி யாழ்ப்பாணத்திலும் போட்டியிடுகின்றது. புலிகளால் எங்களுக்கு அச்சுறுத்தல் இல்லை. அவர்கள் எங்கள் எதிரிகளும் அல்லர் என்கிறார் அதன் தலைவர்.

உங்கள் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் எல்லாம் அங்கு எப்படி நடைபெறுகின்றன என்று கேட்டாராம் ஒரு பேனாக்காரர்.

எந்தப் பிரச்சினையும் இல்லை. ஒரே நாளில் எங்களுடைய பிரசாரங்களை முடித்துக்கொண்டோம் என்றார் தலைவர்.

இந்தப் பேனாக்காரர் சும்மா விடுவாரா? ஒருநாள் கூட சத்தம் கேட்கவில்லையே என்று தொடர் கேள்வியை வீசினார். நாங்கள் வேட்பு மனு தாக்கல் செய்த அன்றே எங்கள் பிரசார வேலைகளையும் முடித்துக்கொண்டோம் என்றாராம் தனித்துவத் தலைவர்.

## பசுமைக்குள் சலசலப்பு

கொழும்பில் விநாயகர் சின்னத்தில் மூன்று தமிழர்கள் போட்டியிடுவது பச்சைக்கட்சிக்காரர்கள் மத்தியில் சிறு சலசலப்பை ஏற்படுத்தி உள்ளதாம்.

காலம் காலமாகப் பச்சைக் கட்சி முதல்வருக்கு ஒன்றும் தமிழ் வேட்பாளர்களுக்கு இரண்டும் போட்டுப் பழக்கப்பட்டவர்கள் கொழும்புத் தமிழர்கள்.

இம்முறை மூன்று தமிழர்கள் போட்டியிடுவதால் மூன்றுமே அங்கு போய்விடும். தலைவருக்கு வாக்குக் கிடைக்காது என்று தனித்துவக் கட்சிப் பிரமுகர் ஒருவர் பச்சைக் கட்சிப் பிரமுகரிடம் ஊதிவிட்டாராம். அதுவே அந்த சலசலப்புக்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

## செல்லப்பிள்ளை

பச்சைக் கட்சியில் 'கரு'ணை மிக்க தலைவரின் செல்லப்பிள்ளை மனோகரமானவர். கருணை மிக்கவரின் ஆதரவு எப்போதும் மனோகரமானவருக்கு உண்டாம்.இதனால் பெரியவரின் கருணையால் மனோகரமானவருக்கு இம்முறை பெரும்பான்மை சமூகத்தின் வாக்கும் கிடைக்கும் என்று சொல்லுகிறார்களாம்.

## ஜாலித் தாத்தா

நாட்டின் இரண்டாவது அதிகாரமிக்க பதவியை வகித்துக் கொண்டிருந்த ரத்தினமானவரை அவரது தொகுதி ஆதரவாளர்கள் "ஜொலி சீயா" (ஜாலித் தாத்தா) என்று செல்லமாக அழைக்கின்றார்களாம். அவர் எந்த வகையான ஜாலியில் ஈடுபட்டாரோ என்று ஊரே சிரி சிரி என்று சிரிக்கிறதாம்.

ஜாலித்தாத்தாவின் தேர்தல் வேலைக்கு பணிபுரிய ஆட்கள் இல்லையாம். முன்னாள் பத்திரிகையாளர் ஒருவர் இவருக்காக உழைத்துவிட்டு இப்போது விரக்தியுடன் ஒதுங்கிவிட்டாராம்.

ஜாலித் தாத்தாவின் வண்டவாளங்கள் இப்பத்திரிகையாளருக்குத் தெரியுமாதலால் அவரை எப்படியாவது மீண்டும் தம்வசம் இழுத்தெடுக்க ஜாலித் தாத்தா முயன்று வருகிறாராம். அந்தப் பத்திரிகையாளரோ ஆளைவிட்டால் போதும் என்று ஓடி ஒளிகிறாராம்.

## வாக்கு வேண்டாம்

யோகமும் சுவாமியும் இணைந்தே இருந்தாலும் ஆதரவாளர்கள் அப்படி இல்லையாம். சுவாமியின் அருள் கிடைத்தால் அதற்கு யோகம் இல்லை. யோகத்தின் வாடையே வேண்டாம் என்கிறாராம் அந்த அம்மாள்.

இப்படியான நிலையில் இவருடன் சென்றால் உள்ளதும் போய்விடும் என அஞ்சுகிறாராம் யோகர். இதற்கு ஒரே வழி மனோகரமானவருடன் இணைந்துபோவது.

இதனை அறிந்த ஆறுமுக சுவாமி சந்திரனைத் தூது விட்டாராம்.

ஒட்டு என்ற பேச்சுக்கே இடமில்லை என எட்ட ஓடுகின்றார் மனோகரமானவர். எனினும் யோகத்தையோ சுவாமியையோ யாரும் குறை கூறக்கூடாது, எதிர்ப் பிரசாரம் செய்யக்கூடாது என தனது சகாக்களுக்கு கண்டிப்பான கட்டளை பிறப்பித்துள்ளாராம் மனோகரமானவர்.

# வாகரையில் எதிர்ப்புக் குரல்

வாகரை பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் கோறளை மத்தி என்ற புதிய பிரதேச செயலகப் பிரிவு உருவாக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டு வருகிறது.

தமிழ்க்கிராமங்களைத் துண்டாடி முஸ்லிம் மக்களுக்காக புதிய பிரதேச செயலகம் உருவாக்கப்பட்டிருப்பதாகவும் இது தமிழ் மக்களைப் பெரிதும் பாதிக்கும் செயல் என்றும் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே. துரைராசசிங்கம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் இந்தப் பிரதேச செயலகத்தை அமைக்கும் வர்த்தமானி அறிவித்தல் வெளிவந்தது, ஒரு சூழ்ச்சியே என்றும் அவர் சொன்னார்.

வாழைச்சேனை வாணிவித்தியாலயத்தில் நடத்தப்பட்ட கண்டனக்கூட்டத்தில் அவர் உரையாற்றினார்.

1990ஆம் ஆண்டுக்குப்பின்னர் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் அகதிகளாகவும், அனாதைகளாகவும் அகதிமுகாம்களில் வாழ்ந்து வருகிறார்கள் . இந்த நிலையில் அவர்களின் பாரம்பரிய நிலங்கள் அபகரிக்கப்பட்டு புதிய பிரதேச செயலகப்பிரிவு அமைக்கப்பட்டிருக்கிறது.

எரிகிற வீட்டில் பிடிங்கியது இலாபம் என்பதைபோல் முஸ்லிம் அரசியல் வாதிகள் நடந்து கொள்கிறார்கள்.அவர்கள் ஆட்சியாளர்களுடன் ஒட்டிக்கொண்டிருக்கும் பலத்தைப்பாவித்து தமிழ் நிலங்களை அபகரித்து முஸ்லிம்களுக்கென புதிய பிரதேச செயலகப்பிரிவை அமைத்திருக்கிறார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

ஊடகவியலாளர் டி.சிவராம் உரையாற்றுகையில், வடக்கு கிழக்கில் தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களை அபகரிப்பதற்கு சிங்கள பேரினவாதம் நீண்டகாலமாக செயற்பட்டு வருகிறது. மட்டக்களப்பு வடக்கு பிரதேசம் தமிழர்களின் ஆதிக்கத்தில் இருப்பது திருகோணமலை மாவட்டத்தில் குடியேற்றப்பட்ட சிங்களவர்களுக்கும், படைமுகாம்களுக்கும் பாதிப்பாக இருக்கும் என்ற காரணத்தினால், மட்டக்களப்பில் வடமுனை தொடக்கம் கிரான் வரையான பிரதேசத்தில் சிங்களவர்களை குடியேற்றுவதற்கு 1980 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நடவடிக்கை எடுத்தனர்.

இக்குடியேற்றம் வெற்றிபெற்றால் திருகோணமலை துண்டாடப்பட்டது போல் மட்டக்களப்பும் துண்டாடப் பட்டு சிங்களமயமாகியிருக்கும். ஆனால் 1983க்குப் பின்னர் தமிழ் இயக்கங்களின் தீவிர நடவடிக்கைகளால் குடியேற்றங்கள் தடுக்கப்பட்டன. சிங்களவர்களை குடியேற்றுவதில் தோல்விகண்ட சிங்கள பேரினவாத அரசுகள் முஸ்லிம்களின் துணையோடு தமிழ் பிரதேசங்களை துண்டாடுவதற்கு முயற்சி செய்து வருகின்றன. இதன் ஓர் அங்கமாகவே கோறளை மத்தி பிரதேச செயலகம் அமைக்கப்படுகிறது.

மலையகத்தில் கூட சிங்கள அரசுகள் தமிழர்கள் வாழும் பிரதேசங்களில் நிலத்துண்டாடல்களை மேற்கொண்டு வருகின்றன. மலையகத்தில் தமிழர்கள் பெரும்பான்மை யாகக் கொண்ட பிரதேச சபைகள் அமையக் கூடாது என்ப தில் சிங்கள அரசுகள் கண்ணும் கருத்துமாக இருக்கின்றன — என்றார்.

பத்திரிகையாளர் எஸ். ஜெயானந்தமூர்த்தி தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

இரா. துரைரத்தினம்.

இப்பத்திரிகை கொழும்பு – 06, வெள்ளவத்தை பெரக்கும்பா பிளேஸ் 1/5ஆம் இலக்கத்தில் உள்ள வாண்ட் மார்க் எண்டர்பிரைசஸ் ஸ்தாபனத்தினால் 2001 நவம்பர் 11ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.